வெளியீடு 17-9-2003 Issued 17-9-2003

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, மார்ச் 26, 2003—தொகுதி 37—எண் 1

Wednesday the 26th March, 2003 —Volume 37—No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

...ive Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

[Price Rs. 3.00

26-3-2003

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் .. .. | iii-vii |
| Governor and Council of Ministers | ix-xii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் .. .. | xiii-xvi |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) .. | xvii-xxvii |
| **1. வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. | 1-38 |
| **2. தகவல் கோரல்—** | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் .. | 38 |
| **3. அறிக்கை அளித்தல்—** | |
| மதிப்பீட்டுக் குழு .. .. | 38-39 |
| **4. அரசினர் தீர்மானங்கள்—** | |
| (அ) பேரவை விதி 184(1)-ஐத் தளர்த்தல் .. | 39 |
| (ஆ) ஈராக்மீது போர் தொடுத்துள்ள அமெரிக்காவிற்குக் கண்டனம் .. .. | 40 |
| (இ) காஷ்மீர் அப்பாவி மக்களைப் படுகொலை செய்த பயங்கரவாத செயலுக்குக் கண்டனம் .. .. | 40-41 |
| **5. 25-3-1989 ஆம் நாளைய பேரவை நடவடிக்கைகள்—** | 42-57 |

பக்கங்கள்


| | | |
|---|---|---|
| **6. வரவு-செலவுத் திட்டம், 2003-2004, பொது விவாதம்**—தொடர்ச்சி | .. | 57-116 |
| திரு. டி. மணி | .. | 57-61 |
| டாக்டர் சி. விஜயபாஸ்கர் | .. | 62-73 |
| திரு. கே.ஆர். இராமசாமி | .. | 73-87 |
| *திரு. ப. அரசன் | .. | 88-98 |
| திரு. ப. இராஜரெத்தினம் | .. | 98-108 |
| *திரு. கி. பாரிமோகன் | .. | 108-116 |
| **7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**— | .. | 117-118 |




225514

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் - திரு. பெ. ஸ்ரீ ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. **பொதுப் பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

3. **நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

4. **சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்.

16. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு எம்.சி. சம்பத்:**
நகராட்சி நிருவாகம் ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

17. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:**
கால்நடை பராமரிப்பு.

18. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:**
குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

19. வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**
வனம், சுற்றுச் சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

20. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**
வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

21. பால் வனத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**
பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.



22. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம் மற்றும் செய்தித்தாள் கட்டுப்பாடு.

23. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**
கைத்தறி மற்றும் துணித் தொழில்.

24. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**
மீன் வளம்

25. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR - THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| 1. **Chief Minister** | .. **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | .. **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Col lectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. **Minister for Finance** | .. **The Hon. Thiru C. Ponnaiyan :** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. **Minister for Law and Information Technology** | .. **The Hon. Thiru D. Jayakumar :** Law, Courts and Information Technology. |
| 5. **Minister for Hindu Religious and Charitable Endowments** | .. **The Hon. Thiru P.C. Ramasamy :** Hindu Religious and Charitable Endowments. |

| | | |
|---|---|---|
| 6. **Minister for Health and Education** | .. | **The Hon. Thiru S. Semmalai :** Health, Medical Education and Family Welfare, Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Over seas, Refugees and Evacuees. |
| 7. **Minister for Backward Classes** | .. | **The Hon. Thiru A. Papasundaram :** Backward Classes, Most Backward Classes and Denotified Communities. |
| 8. **Minister for Labour** | .. | **The Hon. Thiru A. Anwer Rhazza :** Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs. |
| 9. **Minister for Agriculture** | .. | **The Hon. Thiru R. Jeevanantham :** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| 10. **Minister for Social Welfare** | .. | **The Hon. Tmt. B. Valarmathi :** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration. |
| 11. **Minister for Adi-Dravidar Welfare** | .. | **The Hon. Thiru C. Karuppasamy :** Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen. |



| | | |
|---|---|---|
| 12. **Minister for Transport** | .. | **The Hon. Thiru R. Viswanathan :** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports. |
| 13. **Minister for Electricity and Industries** | .. | **The Hon. Thiru Nainar Nagenthran:** Electricity, Non-conventional energy development, Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics. |
| 14. **Minister for Commercial Taxes** | .. | **The Hon. Thiru Se.Ma. Velusamy :** Commercial Taxes. |
| 15. **Minister for Co-operation, Food & Civil Supplies & Consumer Protection** | .. | **The Hon. Thiru P. Mohan :** Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics. |
| 16. **Minister for Local Administration** | .. | **The Hon. Thiru M. C. Sampath :** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply. |
| 17. **Minister for Animal Husbandry** | .. | **The Hon. Thiru P. V. Damodaran :** Animal Husbandry. |
| 18. **Minister for Rural Industries** | .. | **The Hon. Thiru R. Vadivel :** Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board. |

19. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru R. Vaithilingam :** Forests & Enviornment and Pollution Control.

20. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and Chennai Metropolitan Development Authority

21. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:** Milk and Dairy Development.

22. **Minister for Information and Publicity** ..**The Hon.Thiru K.K.Balasubramanian:** Information and Publicity, Film Technology, Cinematograph Act and Newsprint Control.

23. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram :** Handlooms and Textiles.

24. **Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:** Fisheries.

25. **Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller :** Tourism and Tourism Development Corporation.



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

**பேரவைத் தலைவர்**

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

**பேரவைத் துணைத் தலைவர்**

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

**மாற்றுத் தலைவர்கள்***

திரு. கே. பாண்டுரங்கன்

டாக்டர் தே. குமாரதாஸ்

திரு. லா. சந்தானம்

திருமதி சி.எம். சூரியகலா

திரு. சி. சிவசாமி

திரு. வி. ஜெயராமன்

**செயலாளர்**

திரு. வெ. இராசாராமன்

*28-1-2003 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | - கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) (விடுப்பு) |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்.சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், பி.எல். | - குழு அலுவலர் எம்.ஏ., |



| | |
|---|---|
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | - தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திருமதி ச. இரா. சுகுணா, பி.ஏ. | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | - | சார்புச் செயலாளர், பேரவைத் தலைவரின் தனிச் செயலர் (பொறுப்பு) |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | - | தலைமை நிருபர் (விடுப்பு) |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. நா. வீராராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. | தலைமை நிருபர் (பொறுப்பு) |



## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. | தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. | திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. | அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. | வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. | புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ.கு.சி. | .. | பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. | தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | ... | திருச்சிராப்பள்ளி-2 |
| 18 | அன்வர் ராஜா, திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. | வேடசந்தூர் |
| 20. | ஆறுமுகம், திரு. கே. | .. | செங்கல்பட்டு |

21. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. - திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. - திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. - கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
31. இராமு, திரு. ந. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. - ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. - பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. - திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. - பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. - ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். - மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. - அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. - ஏற்காடு (ஆ.வா.)



41. இன்பத் தமிழன், திரு. இரா.தா. - ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ)
43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். - திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. - திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். - செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. - செஞ்சி
48. கணபதி, திரு.ந. - வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
50. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
51. கண்ணன், திரு. ஏ.எஸ். - பொன்னேரி (செ.வ.)
52. கந்தசாமி, திரு. க.ரா. - சத்தியமங்கலம்
53. கந்தசாமி, திரு. கா. - குன்னூர் (செ.வ.)
54. கருணாகரன், திரு. கே.சி. - சிங்காநல்லூர்
55. கருணாநிதி, திரு. மு. - சேப்பாக்கம்
56. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
57. கருப்பணன், திரு. கே.சி. - பவானி
58. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. - குளத்தூர் (செ.வ.)
59. கலாவதி, திருமதி கு. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
60. கனகதாரா, செல்வி சி. - பேரணாம்பட்டு (செ.வ.)
61. கனிதா சம்பத், திருமதி எஸ். - திருப்போரூர் (செ.வ.)
62. காசாம்பு பூமாலை, திருமதி - சங்கராபுரம்
63. காமராஜ், திரு. மே.ப. - தாரமங்கலம்

64. கார்த்தி, திரு. மு. - சேலம்-2
65. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்
66. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. - அரூர் (செ.வ.)
67. கிருஷ்ணன், திரு. ஆர். - அந்தியூர் (செ.வ.)
68. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
69. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. - ஆண்டிமடம்
70. கோதண்டராமன், திரு. ஜி. - முகையூர்
71. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
72. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். - விருத்தாசலம்
73. கோவிந்தராஜ், திரு. வெ. - கிருஷ்ணகிரி
74. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
75. சக்திவேல் முருகன், திரு. எம். - அம்பாசமுத்திரம்
76. சக்ரபாணி, திரு. ஆர். - ஓட்டன்சத்திரம்
77. சசிகலா, திருமதி ஆர். - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
78. சண்முகநாதன், திரு. எஸ்.பி. - ஸ்ரீவைகுண்டம்
79. சண்முகம், திரு. சி. - பூந்தமல்லி
80. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
81. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
82. சந்தானம், திரு. லா. - உசிலம்பட்டி
83. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். - இராணிப்பேட்டை
84. சந்திரமோகன், திரு. நா. - சீர்காழி (செ.வ.)
85. சந்திரன், திரு. வீ. - சிவகங்கை



86. சம்பத், திரு. எம்.சி. - நெல்லிக்குப்பம்
87. சரவணன், திரு. துரை. கி. - சிதம்பரம்
88. சரோஜா, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆ.வா.)
89. சாமி, திரு. ஆர். - மேலூர்
90. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
91. சிதம்பரம், திரு. ப. - பவானிசாகர்
92. சிவகாமி, திருமதி வி. - தாராபுரம் (செ.வ.)
93. சிவசாமி, திரு. கே.கே. - அருப்புக்கோட்டை
94. சிவசாமி, திரு. சி. - திருப்பூர்
95. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். - கரூர்
96. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
97. சிவபெருமாள், திரு. அ. - ஓட்டப்பிடாரம் (செ.வ.)
98. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
99. சின்னசாமி, திரு. மா. - பழனி (செ.வ.)
100. சீனிவேல், திரு. எஸ்.எம். - திருப்பரங்குன்றம்
101. சுதர்சனம், திரு. கே. - கும்மிடிப்பூண்டி
102. சுதர்சனம், திரு. டி. - திருவள்ளூர்
103. சுந்தரம், திரு. பி.ஆர். - ராசிபுரம்
104. சுந்தராம்பாள், திருமதி செ. - மேட்டூர்
105. சுப்பிரமணியன், திரு. வீ. - கண்டமங்கலம் (செ.வ.)
106. சுப்பையா பாண்டியன், திரு. எம். - கடையநல்லூர்
107. சூரியகலா, திருமதி சி.எம். - குடியாத்தம்

108. செம்மலை, திரு. செ. - ஓமலூர்

109. செல்லையா, திரு. வி.ஏ. - மருங்காபுரி

110. செல்வம், திரு. எஸ்.கே. - வீரபாண்டி

111. செல்வராஜ், திரு. ஏ.கே. - மேட்டுப்பாளையம்

112. செல்வி முருகேசன், திருமதி - காங்கேயம்

113. சேகரன், திரு. கே.என். - திருவெறும்பூர்

114. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

115. சோமசுந்தரம், திரு. வி. - உத்திரமேரூர்

116. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்

117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. - திருநாவலூர்

118. தமிழரசன், திரு. செ.கு. - நன்னிலம் (செ.வ.)

119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி - மேல்மலையனூர்

120. தம்பிதுரை, டாக்டர் மு. - பர்கூர்

121. தவமணி, திரு. க. - திருவிடைமருதூர்

122. தளவாய் சுந்தரம், திரு. ந. - கன்னியாகுமரி

123. தனபால், திரு. ப. - சங்கரி (செ.வ.)

124. தாமோதரன், திரு. எஸ். - விருதுநகர்

125. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு

126. தாமோதிரன், திரு. ப.வெ. - பொங்கலூர்

127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி

128. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். - காஞ்சிபுரம்

129. திருமாவளவன், திரு. இரா. - மங்களூர் (செ.வ.)

130. துரைமுருகன், திரு. - காட்பாடி



131. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி

132. தென்னரசு, திரு. கே.எஸ். - ஈரோடு

133. நடராஜன், திரு. அ. - குத்தாலம்

134. நடராஜன், திரு. எஸ். - நாட்ராம்பள்ளி

135. நடராஜன், திரு. பி.கே.டி. - ஆத்தூர்

136. நடராசன், திரு. வ.து. - இளையான்குடி

137. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி

138. நரசிம்மன், திரு. பி.எம். - பள்ளிப்பட்டு

139. நளினி மனோகரன், திருமதி - போளூர்

140. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு

141. நீலகண்டன், திரு. ப. - ஆற்காடு

142. நீலமேகவர்ணம், திரு. லெ. - சாத்தான்குளம்

143. நெப்போலியன், திரு. து. - வில்லிவாக்கம்

144. பச்சைமால், திரு. தா. - குளச்சல்

145. பதினெட்டாம்படியான், திரு. க. - முதுகுளத்தூர்

146. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-1

147. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)

148. பவானி கருணாகரன், திருமதி கே. - அரக்கோணம் (செ.வ.)

149. பழனிசாமி, திரு. கே.எஸ். - பெருந்துறை

150. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)

151. பழனியப்பன், திரு. பெ. - மொரப்பூர்

152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
154. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு
155. பாப்பாசுந்தரம், திரு. அ. - குளித்தலை
156. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)
157. பாரிமோகன், திரு. கி. - தருமபுரி
158. பாலகிருஷ்ணன், திரு. சோ. - கடலாடி
159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். - தொண்டாமுத்தூர்
160. பாலசுப்பிரமணியன், திரு.கே. கே. - ஸ்ரீரங்கம்
161. பாலபாரதி, செல்வி க. - திண்டுக்கல்
162. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி
163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். - சேரன்மகாதேவி
164. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
165. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
166. பூபதி மாரியப்பன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
167. பூவராகமூர்த்தி, திரு. ஏ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
168. பெருமாள், திரு. என்.கே. - விளாத்திகுளம்
169. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
170. பொன்னம்பலம், திரு. ப. - சமயநல்லூர் (செ.வ.)
171. பொன்னையன், திரு. சி. - திருச்செங்கோடு
172. போளூர் வரதன், திரு. - செங்கம் (செ.வ.)



173. மகாலிங்கம், திரு. எஸ். - அவினாசி (செ.வ.)
174. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
175. மகேஸ்வரி, திருமதி எஸ். - கோயம்புத்தூர் மேற்கு
176. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
177. மணி, திரு. டி. - விளவங்கோடு
178. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
179. மலையப்பசாமி, திரு. அ.இரா. - கபிலர்மலை
180. மல்லிகா சின்னசாமி, திருமதி - முசிறி
181. மாணிக்கராஜ், திரு. எஸ். - நாங்குநேரி
182. மில்லர், திரு. அ. - கூடலூர்
183. முரளிதரன், திரு. கே. வி. - தளி
184. முருகவேல் ராஜன், திரு. க. - வந்தவாசி (செ.வ.)
185. முருகேசன், திரு. ஆ.கு. - ஆத்தூர்
186. முனுசாமி, திரு. கா.பூ. - காவேரிப்பட்டினம்
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
188. மோகன், திரு.ப. - சின்னசேலம்
189. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
190. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
191. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். - கோபிசெட்டிப்பாளையம்
193. ராதாகிருஷ்ணன், திரு. எம். - திருமயம்
194. ராதாரவி, திரு. - சைதாப்பேட்டை
195. ராமசாமி, திரு. பி.சி. - மொடக்குறிச்சி

196. ராமராஜ், திரு. ச. - போடிநாயக்கனூர்

197. ராம்குமார், திரு. எம். - பாபநாசம்

198. ராஜகோபால், திரு. ஆ. - சிவகாசி

199. ராஜம்மாள், திருமதி எஸ். - தூத்துக்குடி

200. ராஜா, திரு. எச். - காரைக்குடி

201. ராஜாங்கம், திரு. வி.ஆர். - சோழவந்தான்

202. ராஜு, திரு. எச்.எம். - உதகமண்டலம்

203. ரெங்கநாதன், திரு. என். - பூம்புகார்

204. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. - பேரூர்

205. லட்சுமணன், திரு. வி.கே. - கோயம்புத்தூர் கிழக்கு

206. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. - அரவக்குறிச்சி

207. வடிவேல், திரு. ஆர். - வாணியம்பாடி

208. வளர்மதி, திருமதி பா. - ஆலந்தூர்

209. வளர்மதி ஜெபராஜ், திருமதி - மதுரை மேற்கு

210. வள்ளல் பெருமான், டாக்டர் பி. - காட்டுமன்னார் - கோவில் (செ.வ.)

211. வாசுதேவன், திரு. பெ. - மதுராந்தகம்

212. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்

213. வில்வநாதன், திரு. இரா. - சோளிங்கர்

214. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. - பூங்கா நகர்

215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. - புதுக்கோட்டை

216. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. - பனமரத்துப்பட்டி



217. வீரபாண்டியன், திரு. ஜெக. - மயிலாடுதுறை

218. வெங்கடாசலம், திரு. அ. - ஆலங்குடி

219. வெங்கடாஜலம், திரு. செ. - சேலம்-I

220. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்

221. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்

222. வேலு, திரு. எ.வ. - தண்டராம்பட்டு

223. வேல் முருகன், திரு. தி. - பண்ருட்டி

224. வைதியலிங்கம், திரு. மீ.அ. - தாம்பரம்

225. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு

226. ஜீவானந்தம், திரு. இரா. - நாகப்பட்டினம்

227. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. - ஆரணி

228. ஜெயக்குமார், திரு. கு. - நாமக்கல் (செ.வ.)

229. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்

230. ஜெயராமன், திரு. வி. - பொள்ளாச்சி

231. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி

232. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு

233. ஹக்கீம், திரு. எம்.ஏ. - மதுரை மத்தி

234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. - திருவட்டாறு

235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி - (நியமனம்)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் - தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 12, சித்ரபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034**
**2003 மார்ச் 26, புதன்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

***"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்***

***எஞ்சாமை வேந்தர்க் கியல்பு"***

பயம் இல்லாதிருத்தல், ஏழைக்குக் கொடுக்கும் கொடை, சிறந்த அறிவு, மிகுந்த ஊக்கம் இந்த நான்கினையும் குறை இல்லாமல் நிறைவாகப் பெற்றிருப்பவரே சிறந்த ஆட்சியாளர் ஆவார்.

## 1. வினாக்கள் - விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 81, திருமதி செல்வி முருகேசன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**81—**

### சாயநீரைச் சுத்தப்படுத்துதல்

**•23237—திருமதி செல்வி முருகேசன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 மார்ச் 26

சென்னிமலைப் பகுதியில் அமைந்துள்ள ஒரத்துப்பாளையம் அணைக்கட்டில் தேங்கியுள்ள சாயநீரைச் சுத்தப்படுத்தி விவசாயத்திற்குப் பயன்படுத்தும் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்சமயம் இல்லை.

**திருமதி செல்வி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளத்தை தேவன் குளமாக மாற்றி சாதனை படைத்து வெற்றி மீது வெற்றி தேடித் தந்த எங்கள் இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களால் கட்டப்பட்டது. இந்த அணை பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் விவசாயத்திற்கும், குடிநீருக்காகவும் பயன்படுத்துவதற்காக கட்டப்பட்டது. ஆனால் திருப்பூர் சாயக் கழிவு நீர்த்தேக்கமாக மாறி மாசுபட்டு, இன்று மக்கள் விவசாயம் செய்ய முடியாமலும், கால்நடைகளை வளர்க்க முடியாமலும், குடிநீருக்காக பல கிலோ மீட்டர் தூரம் சென்று எடுத்து வரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு, சென்னிமலை காங்கேயம், ஊத்துக்குளி பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகி உள்ளனர். ஆகையால் இந்த அணைக்கு வரும் சாயக் கழிவு நீரை சுத்தப்படுத்துவதற்கு அணையின் Tail-end-ல் ஒரு Treatment plant அமைத்துத் தருவதற்கும், அணையைத் தூர் வாருவதற்கும் ரூ.12-1/2 கோடி நிதி ஒதுக்கீடு செய்து பணி இன்னும் தொடங்கப்படாமல் உள்ளது. விவசாயிகளின் நலன் காக்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அணையைத் தூர் வாரும் பணி தொடங்கப்படுமா என்பதனையும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டம் நொய்யல் ஒரத்துப்பாளையம் நீர்த்தேக்கம் 1992 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. 1992 முதல் 1996 ஆம் ஆண்டு வரையில்



2003 மார்ச் 26]

பாசனத்திற்காக இந்த நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதனால் சுமார் 20 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றன. திருப்பூர் மற்றும் சுற்றுப் பகுதிகளில் பின்னலாடைகள் தயாரிக்கப்பட்டு வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்தமையால் பின்னலாடைத் தொழில் வளர்ச்சி பெற்றது. இந்த நிறுவனங்களிலிருந்து சுத்திகரிக்கப்படாத சாயக் கழிவு நீர் நொய்யல் வெளியேற்றப்பட்ட சுத்திகரிக்கப்படாத ஆற்றில் திறந்து விடப்பட்டது. இதனால் நொய்யலாற்று நீர் மாசுபட்டு. மாசுபட்ட நீர் நொய்யல் நீர்த் தேக்கத்தில் தேங்கியது. அதனால் விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும், மற்றும் ஒரத்துப்பாளையம் அணைக்குட்பட்ட பகுதியில் உள்ள தொழிற்சாலைகளுக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாதவாறு நீரின் மாசுத் தன்மையைக் குறைக்க மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்துடன் கலந்தாலோசித்து நொய்யல் ஒரத்துப்பாளையம் அணையில் இருந்து மாசுப்பட்ட நீரை வெளியேற்றவும், எந்தச் சூழ்நிலையிலும் குடிநீருக்குப் பாதகம் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ள எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கவும், மழைக் காலங்களில் காவிரியில் தண்ணீர் ஓடும்போது கரூர் விவசாயப் பகுதிகளை பாதிக்காத அளவில் உரிய நேரத்தில் ஒரத்துப்பாளையம் அணையில் தேங்கி உள்ள நீரை அவ்வப்போது திறந்துவிட உரிய பரிந்துரை செய்யவும், அரசாணை நிலை எண் 517 பொதுப் பணித் துறை நாள் 27-12-2001-ன்படி. 9 பேர் கொண்ட கண்காணிப்பு நிலைக் குழு அமைக்கப்பட்டு உள்ளது. மேலும் இந்த மாசுபட்ட நீரை சுத்திகரிக்க தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை தொழிற்சாலைகள் மறு உபயோகம் செய்தல்; சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை மரம் வளர்ப்பதற்குப் பயன்படுத்திக்கொள்ளுதல்; சாயப்படும் தொழிலில் நல்ல தண்ணீரை உப்பு குறைந்த அளவு தண்ணீரைப் பயன்படுத்தும் soft flow இயந்திரங்களைப் பயன்படுத்துதல்; விதிமுறைகளை மீறும் தொழிற்சாலைகள் மீது நடவடிக்கைகள் எடுத்தல்; ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. என். சிவசுப்பிரமணியன்.

**திரு. டி.என். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒரத்துப்பாளையம் அணையில் இருந்து தண்ணீர் வழியும்போது அது காவிரியில் திறந்துவிடப்படுகிறது. அந்த

[2003 மார்ச் 26

ஓரத்துப்பாளையம் தண்ணீர் காவிரிக்கு வரும்போது காவிரி ஆற்றில் இருந்து இரு கரைகளிலும் குடிநீருக்கு, பாசனத்திற்கு எடுக்கப்படும் நிலையில் குடிநீர்க் கிணறுகள் உள்ளன. அந்தக் கிணறுகளெல்லாம் மாசுபட்டு, மாவட்ட நிருவாகமே அந்தத் தண்ணீரைப் பயன்படுத்த வேண்டாமென்று பொது அறிவிப்பு வெளியிட்டு, அந்தப் பகுதியினுடைய மக்களெல்லாம் குடிநீருக்காக பெரியதொரு கஷ்டத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் இதன்மீது உடனடியாக பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுத்து. ஓரத்துப்பாளையம் அணைக்கட்டில் தேங்கியிருக்கக்கூடிய கழிவுநீரை வெளியேற்ற ஏதாவது ஒரு முயற்சி செய்து அந்தப் பகுதிக்கு நிவாரணம் கிடைப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்வார்களா என்று உங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓரத்துப்பாளையம் அணைக்கட்டில் தேங்கியிருக்கக்கூடிய மாசுபட்ட நீரை எப்பொழுதெல்லாம் வெளியேற்ற வேண்டுமென்பதை வரைமுறைப்படுத்துவதற்காகத்தான் நிலைக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. நினைத்தபோதெல்லாம் அந்த நீரை வெளியேற்றுவது தற்சமயம் நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்த நிலைக் குழு எப்போது காவிரி ஆற்றில் தண்ணீரைத் திறந்துவிட வேண்டுமென்று பரிந்துரை செய்கிறதோ, அப்பொழுதுதான் ஓரத்துப்பாளையம் அணைக்கட்டிலிருந்து மாசுபட்ட நீரை காவிரி ஆற்றில் எடுக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. அதாவது காவிரி ஆற்றில் மிகப்பெரும் வெள்ளம் வருகிறபோது, அது திறந்துவிடப்படும்போது விவசாயிகளுக்கோ, குடிநீருக்கோ பாதிப்பு இல்லாத சூழ்நிலை ஏற்படுகிறபோதுதான், அந்த நிலைக் குழு காவிரி ஆற்றில் அந்த மாசுபட்ட நீரை எடுக்கின்ற சூழ்நிலையை சிபாரிசு செய்கின்றபோது, நாம் நடவடிக்கை எடுக்கின்ற சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி செல்வி முருகேசன்.

**திருமதி செல்வி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது ஆங்காங்கே பெய்து வரும் மழையினால் அணைக்கு வரும் தண்ணீர் அதிகமாகி, அணையில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. அந்த அணையின் தண்ணீரைத் திறந்துவிடுவதற்குக்கூட



2003 மார்ச் 26]

முடியாமல், Shutter-கள் எல்லாம் அந்தச் சாயக் கழிவு நீரால் பாதிக்கப்பட்டு Shutter-களின் rope-களெல்லாம் அறுந்து கிடக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு, நீரைத் திறந்துவிட முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நிலைமையை ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எஸ். பழனிசாமி.

**திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஓரத்துப்பாளையம் அணைக்கட்டால் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளது ஊத்துக்குளி ஒன்றியம். ஆகவே அந்தப் பகுதி மக்கள் குடிநீருக்காக பல்வேறு வகையில் அல்லல்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. 5 கி.மீ. தூரத்தில் உள்ள borewell-கூட அதிகமாக மாசுபட்டுள்ளதையெல்லாம் அந்தப் பகுதிக்கு வந்த அரசு உறுதிமொழிக் குழு நேரடியாகக் கண்டது. ஆகவே அந்தப் பகுதி மக்களுக்கு நாம் குடிநீர் வழங்குவதற்கு கொடிவேரி இரண்டாவது கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டுவந்து பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்கவேண்டும். அதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓரத்துப்பாளையம் அணைக்கட்டில் தற்சமயம் அந்தப் பகுதியில் மிகுதியாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற, சாயப் பட்டறைகளில் இருந்து வருகின்ற சாயக் கழிவு நீர் சேருவதை அடுத்துத்தான் அந்தப் பகுதியில் கீழும் மேலும் இருக்கிற பகுதிகள் எந்தவிதத்திலும் மாசுபட்டு குடிநீருக்குத் தீங்கு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் அரசு தீவிரமாக கவனித்து ஆராய்ந்து பல்வேறுவகையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. எந்தவிதத்திலும் அந்தப் பகுதிகள் இனிமேல் பாதிக்கப்படாமல் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

[2003 மார்ச் 26

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓரத்துப்பாளையம் அணை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில் கட்டப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் செல்வி முருகேசன் அவர்கள் தெரிவித்தார்கள். அது 1992 ஆம் ஆண்டுதான் கட்டப்பட்ட அணை. அந்த அணை இப்போது முழுமையாக கழிவுநீரை மட்டுமே தேக்கி வைக்கக்கூடிய அணையாக விளங்கிக் கொண்டு இருக்கிறது. மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு ஏற்கெனவே உயர்நீதிமன்றம் ஓர் ஆணையை பிறப்பித்து, திருப்பூரிலிருந்து வரக்கூடிய தொழிற்சாலைக் கழிவுநீர் அந்த இடத்திலே தேங்கி நிற்கிற காரணத்தால், அங்குள்ள தொழிற்சாலை அதிபர்கள்தான் அதைத் தூர் வாருவதற்கும் மற்றவற்றுக்கும் அதற்கான பணத்தை உடனடியாகக் கட்டவேண்டுமென்று ஒரு காலக்கெடுகூட உயர்நீதிமன்றம் ஏற்கெனவே விதித்தும் மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் இதுவரை அவர்களிடமிருந்து எதையும் வசூல் செய்யவில்லை. அதைச் சுத்திகரிக்கவும் இல்லை. இப்போது அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய அத்தனை விவசாயிகளும் நிலத்தடி நீர் மாசுபட்டுவிட்ட காரணத்தால், நிலத்தைக்கூட அரசே எடுத்துக்கொள்ளட்டும், நாங்கள் ஊரைவிட்டே போய் வேறு எங்காவது பிழைத்துக்கொள்கிறோம் என்று சொல்லக்கூடிய அளவிற்குத்தான் அந்த இடத்தில் மாசு அடைந்திருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள், ஏற்கெனவே உயர்நீதிமன்றம் பிறப்பித்த ஆணையை செயல்படுத்தியாவது, நிதி நெருக்கடி இல்லாத காலகட்டத்தில், அதைத் தூர் வாருவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதிமன்றம், திருப்பூரிலுள்ள சாயப்பட்டறைத் தொழிற்சாலை அதிபர்களிடம் பணம் வசூல் செய்து அந்த அணையைச் சுத்தப்படுத்த வேண்டுமென்று ஆணையிட்டது. பொதுப் பணித் துறைக்கு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அந்த அணையைச் சுத்தப்படுத்த எவ்வளவு நிதி தேவை, அதை மதிப்பிட்டுக் கூறவேண்டுமென்று கோரியது. அதன்படி பொதுப் பணித் துறை ரூ. 12.5 கோடி அதற்குத் தேவைப்படும் என்று கூறியது. அதன்படி மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் திருப்பூரிலுள்ள சாயப் பட்டறை அதிபர்களிடம் வசூல் செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றது. அந்த நடவடிக்கையை எடுத்து வசூல் செய்தவுடன் அணை சுத்தப்படுத்தப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2003 மார்ச் 26]

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 82, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**82—**

### அரசினர் தோட்டம்

**•24026—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்திலுள்ள குப்பைக் கூளங்களை அகற்றி, பாதுகாப்பான சுற்றுச்சுவர் அமைத்து தோட்டங்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தங்கியிருக்கக்கூடிய வளாகம் அமைந்திருக்கக்கூடிய ஓமந்தூரார் அரசினர் தோட்டம் என்பது, தோட்டம் என்கிற நிலையிலிருந்து இப்போது மாறுபட்டு, ஆங்காங்கே நிறைய குப்பைக் கூளங்கள் சேர்ந்த ஓர் இடமாக, பெட்டிக் கடைகள் எல்லாம் நிறைந்த ஓர் இடமாக உள்ளது. பொதுவாக மாநகரத்தில் இருக்கக்கூடிய கால்நடைகள் எல்லாம் உள்ளே வந்துவிடுகின்றன. சில நேரங்களிலே, வெளிப்படையாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், திறந்தவெளிக் கழிப்பிடமாகப் பல பகுதிகள் பயன்படுத்தப்பட்டு வருவதை மாண்புமிகு அமைச்சர்

[2003 மார்ச் 26

அவர்கள் கவனத்தில் கொண்டு உங்களுடைய துறையின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய அரசினர் தோட்டத்தை நீங்கள் சுத்தப்படுத்தி, உள்ளே யாரும் வராமல் இருக்க அடையாள அட்டைகளை எல்லாம் கொடுக்கவேண்டும். ரோடுகளே இல்லை. பொதுவாக சட்டமன்ற புதிய குடியிருப்பு வளாகத்திற்கு எதிரில் மட்டும்தான் சிமெண்ட் ரோடு இருக்கிறது; மற்றப் பகுதிகளிலே....(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவற்றை எல்லாம் மானியக் கோரிக்கையிலே பேசுங்கள். கேள்வி என்னவென்று கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும் பொருந்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோருக்கும் பொருந்தினதுதான்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஆகவே அந்த இடத்திலே கெஸ்ட் ஹவுசுக்குப் போகக்கூடிய பாதையும் இல்லை. சர்வீஸ் கமிஷன் ரோடையொட்டி இப்போது சுற்றுலா அலுவலகம் இருக்கக்கூடிய பகுதிக்கும் பாதை இல்லை. அதேபோல அண்ணா சிலைக்குப் போகக்கூடிய பாதையும் இல்லை. எல்லா ரோடுகளும் ரோடுகளாக இல்லாமல் தண்ணீர் தேங்கக்கூடிய இடமாக இருக்கிறது. இப்போது பெரிய பெரிய தனியார் கம்பெனிகள் இருக்கின்றன. அவர்களிடம் நீங்கள் ஸ்பான்சர் செய்யச் சொல்லி கேட்டாலும்கூட அவர்களே தோட்டத்தை உள்ளே அமைத்து பாதுகாத்துக் கொள்வார்கள். அந்த வகையிலே அரசிடம் நிதி இல்லையென்று சொன்னால் நீங்கள் சில நிறுவனங்களை அணுகியாவது அதைச் சுத்தமாக வைத்துக்கொள்ள, அந்த இடத்தில் பூங்காக்களை உருவாக்குவதற்கும், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் விளையாடுவதற்கு விளையாட்டு மைதானங்கள் போன்றவற்றை எல்லாம் உருவாக்கிக் கொடுப்பதற்கும் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகம் சுமார் 75 ஏக்கர் பரப்பளவு கொண்டதாகும். இவ்வளாகத்தில் புதிய சட்டமன்ற உறுப்பினர் விடுதி, பழைய சட்டமன்ற உறுப்பினர் விடுதி மற்றும் சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ராஜாஜி மண்டபம், கூவம் இல்லம், தமிழரசு அச்சகம் மற்றும் அலுவலகங்கள், பாலர் பவன்



2003 மார்ச் 26]

இயங்கும் காந்தி இல்லம், அனைத்திந்திய மகளிர் சங்கத்தினரால் நடத்தப்படும் மேல்நிலைப் பள்ளி, இரண்டு உணவகங்கள், காவல் துறையினரின் மத்திய புலனாய்வுத் தலைமை அலுவலகம் மற்றும் சுமார் 204 அரசு ஊழியர் குடியிருப்புகள் ஆகியவை அமைந்துள்ளன. இவ்வளாகத்தையொட்டி, கலைவாணர் அரங்கம் மற்றும் அரசினர் விருந்தினர் இல்லம் போன்ற பல்வேறு துறையினரின் கட்டடங்கள் உள்ளன. மேற்குறிப்பிட்ட பல்வேறு துறைகள் சம்பந்தப்பட்ட கட்டடங்களைப் பராமரிக்க அந்தந்தத் துறைகளின் வேண்டுகோளின்படி கட்டடம் பராமரிக்கத் தேவையான நிதியை அந்தந்தத் துறை மூலம் பெற்று பொதுப் பணித் துறை பராமரித்து வருகிறது. இவ்வளாகத்தில் கட்டடங்கள் போக திறந்தவெளிப் பரப்பளவு சுமார் 70 ஏக்கர் ஆகும். எனவே அதிகப் பரப்பளவு கொண்ட திறந்தவெளியில் செடிகள் மற்றும் முட்புதர்கள் எளிதில் வளர்ந்துவிடுகின்றன. சென்ற ஆண்டு ஜூலை மாதத்தில் பொதுப் பணித் துறை என்ற தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து இவ்வளாகம் முழுவதும் இருந்த குப்பைகள், செடிகள் மற்றும் முட்புதர்கள் முழுவதுமாக அகற்றப்பட்டு, மேடு பள்ளங்கள் ஜெ.சி.பி. மூலம் சமன்படுத்தப்பட்டன. அதிக திறந்தவெளிப் பரப்பளவு கொண்ட இவ்வளாகத்திலிருந்து குப்பைக் கூளங்களை அவ்வப்போது அகற்றி செடி மற்றும் முட்புதர்கள் வளர விடாமல் தொடர்ந்து பாதுகாத்து, ஆங்காங்கே உடைந்துள்ள சுற்றுச் சுவர்களைப் பழுதுபார்த்து, இவ்வளாகத்தில் அமைந்துள்ள மூன்று பிரதான வாயில்களிலும் இரும்புக் கதவு அமைத்து திறந்தவெளிகளில் தோட்டம் மற்றும் புல்தரைகள் அமைத்து, சாலைகள் முழுவதையும் செப்பனிட, தோராயமாக ரூ. 50 இலட்சம் தேவைப்படுகிறது. மேலும் மூன்று பிரதான வாயில்களில் இரும்புக் கதவு அமைத்து, அங்கே காவலாளர்களையும் போடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளைச் செய்து முடிக்க வருமாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பல விளக்கங்களை அளித்திருக்கிறார்கள். இதிலே நான்கு பிரதான வாயில்களும் இப்போது இருக்கின்றன. அதற்கான Gate-கள் எல்லாம் இருந்தும்கூட காவலர்கள் அங்கே யாரும் இல்லை. இரண்டு மாதங்களுக்கு முன்னால் இரண்டு காவலர்களைப் போட்டார்கள். இன்று காலை பார்த்தால் இல்லை. பொதுவாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை

[2003 மார்ச் 26

நாங்கள் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம் உள்ளே வரக்கூடியவர்களைத் தடுத்து நிறுத்தி அனுமதிச் சீட்டு இருக்கிறவர்களை மட்டுமே உள்ளே அனுமதிக்கக்கூடிய ஒரு வழிவகையைச் செய்ய வேண்டும். அதை ஒரு திறந்தவெளிக் கழிப்பிடமாக, மாடுகள் எல்லாம் கட்டி வைக்கக்கூடிய மாட்டுப் பண்ணையைப் போல வைத்துக் கொண்டிருக்கக்கூடிய நிலையை உடனடியாக மாற்ற வேண்டும். இதைச் செய்வதற்கு நிதி தேவையில்லை. பொதுவாக உங்களிடம் இருக்கக்கூடிய குறைந்த பணியாளர்களை வைத்தே இதைச் சுத்தமாக வைத்துக் கொள்ளமுடியும். ஆகவே அமைச்சர் அவர்கள் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே அமையவிருக்கிற பிரதான வாயில்களில் காவலாளர்களை நியமித்துப் பல்வேறு துறைகளில் இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய அரசினுடைய பல்வேறு அதிகாரிகளையும் அழைத்து, அவர்கள் Identity Card மூலம் பரிசோதனை செய்வதற்கு தக்க ஆலோசனை செய்து முழுமையாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 83, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு நிதி அமைச்சர்.

**83—**

### சம்பள விகிதம்

**•15038—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடைத் துறையில் பணியாற்றும் மருத்துவர்களுக்கும் ஆங்கில பொது மருத்துவர்களுக்கு ஈடான சம்பளம் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



2003 மார்ச் 26]

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் வழங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அலுவலர் குழுவின் 1998 ஆம் ஆண்டு பரிந்துரையின்பேரில் கால்நடைத் துறையில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஊதிய விகிதம் சரியானதாகும். எனவே, கால்நடைத் துறை மருத்துவர்களுக்கு ஆங்கிலப் பொது மருத்துவர்களுக்கு ஈடான சம்பள விகிதம் வழங்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் அலோபதி மருத்துவர்கள், அதாவது எம்.பி.பி.எஸ். படிப்பு படிக்கக்கூடிய கால அளவுக்குப் படிக்கக்கூடியவர்கள். இவர்களுடைய பணி என்பது சற்று மாறுபட்டது. பேசமுடியாத ஜீவராசிகள் என்று சொல்லக்கூடிய கால்நடைகள், மிருகங்கள், பறவைகள் இவற்றுக்கு எல்லாம் சிகிச்சை அளிக்கக்கூடியவர்கள். கிராமப்புறங்களுக்குச் சென்று வரக்கூடியவர்கள். இவர்களுக்குப் போதிய ஊதியம் இல்லை என்பது நீண்ட நாளைய குறைபாடாக இருந்து வருகிறது. ஆகவே Pay Commission அடிப்படையிலான ஊதியமாக இருந்தாலும்கூட சிறப்பு நேர்வின் அடிப்படையிலே இவர்களுக்கு இன்னும் கூடுதலான ஊதியம் வழங்குவதற்கு, அவர்கள் பணி நிலையைக் கருதி ஊதிய உயர்வு வழங்குவதற்கு, அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாவது ஊதியக் குழு அளித்த பரிந்துரையை ஒட்டித்தான் தற்போது இந்த முறை நடைமுறையில் இருக்கிறது. மூன்றாவது ஊதியக் குழுவைப் பொறுத்தவரைக்கும் தமிழ்நாடு கால்நடை உதவி மருத்துவர் சங்கம், கால்நடை உதவி மருத்துவர்கள் கல்வித் தகுதியை வைத்து ஆங்கிலப் பொது மருத்துவர்களுக்கு இணையாக ஊதிய விகிதம் வழங்கும்படி கேட்டார்கள். கல்வித் தகுதிக்காக மட்டுமே ஒரு பதவிக்கு ஊதிய விகிதம் உயர்த்தி நிர்ணயம் செய்ய இயலாது என்றும், ஆங்கிலப் பொது மருத்துவர்களின் கடமைகளும், பொறுப்புகளும் அதிகமாகும் என்றும், அவர்களது பயிற்சி, திறமை அனைத்தும் மிகச் சிறந்ததாகும் என்றும், அதை ஒப்பிடக்கூடாது என்றும், கால்நடை உதவி

[2003 மார்ச் 26

மருத்துவர்களின் ஊதிய விகிதத்தை ஆங்கிலப் பொது மருத்துவர்களோடு ஒப்பிட வேண்டாம் என்றும் தொடர்ந்து மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது ஊதியக் குழு அப்படிப்பட்ட ஒரு முடிவை எடுத்ததன் அடிப்படையில்தான் தற்போது இந்த முறை நடைமுறையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மீண்டும் பரிசிலிக்க என்ன செய்வது என்று அரசு ஆயும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 84, திரு. மா. இராஜசேகர், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**84—**

**மாவட்ட நீதிமன்றம்**

**•9987—திரு. மா. இராஜசேகர்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருதுநகர் மாவட்ட நீதிமன்றம் திருவில்லிப்புத்தூரில் இயங்கி வருவதால் அங்கு நிரந்தரமாக ஒருங்கிணைந்த மாவட்ட நீதிமன்றங்களுக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை உயர் நீதிமன்றம் அனுப்பிய முன்னுரிமைப் பட்டியலில் இத்திட்டம் இடம் பெற்றுள்ளது. மைய அரசிடமிருந்து நிதி உதவி பெறப்பட்டபின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. மா. இராஜசேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், திருவில்லிப்புத்தூரில் மாவட்ட நீதிமன்றம் கடந்த 1992 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பெற்று இன்று வரை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. பின்னர் கடந்த கால ஆட்சியில் இந்த நீதிமன்றத்திற்குக் கட்டடம் கட்டாமல் மாறாக வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு



2003 மார்ச் 26]

முயற்சி செய்து, அங்கே இருக்கிற வழக்கறிஞர்கள் எல்லாம் வேலை நிறுத்தம் செய்ததால் உடனடியாக அந்த முயற்சியை கடந்த கால அரசு கைவிட்டது. ஆனால் இன்றையதினம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்னை உயர் நீதிமன்றம் ஒப்புதல் அளித்துவிட்டது என்றும் மைய அரசின் நிதி பெறப்பட்டவுடன் உடனடியாகக் கட்டி முடிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்கள். ஆகவே மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய சார்பிலும், மாவட்டத்தினுடைய சார்பிலும் திருவில்லிப்புத்தூரினுடைய வழக்கறிஞர்கள் சங்கம் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே இதற்கு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இடம் தேர்வு செய்யப்பட்டுவிட்டது. தற்போது இயங்கி வரும் அனைத்து நீதிமன்றங்களும் தொலைதூரத்திலுள்ள காரணத்தினால் பொது மக்களும் வழக்கறிஞர்களும் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். ஆகவே இதனைக் கருத்தில் கொண்டு அடுத்த நிதியாண்டிலாவது மேற்படி ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டி முடிக்கப்பட்டுவிடுமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதித் துறைக் கட்டடங்கள் மத்திய அரசின் திட்டத்தின்கீழ் 50 சதவீத நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு கட்டப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு நீதிமன்றத்திற்கும் கட்டடம் கட்டப்பட வேண்டுமென்கிற அந்தக் கோரிக்கையை ஏற்று தனித்தனியாகக் கட்ட வேண்டுமென்றால், நீண்ட நெடு நாட்களாகும் என்ற ஒரு நிலை ஏற்படக்கூடாது என்கிற ஒரு சூழ்நிலையில் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் ஒருங்கிணைந்த முன்னுரிமை அடிப்படையிலான ஒரு பட்டியல் ரூ.140 கோடிக்கு தயாரிக்கப்பட்டு மத்திய அரசினுடைய ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்து, வரும் காலங்களில் என்று சொல்வதைவிட, மத்திய அரசு நாளைக்கே 50 கோடி ரூபாய் கொடுத்தால்கூட, மாநில அரசு 50 கோடி ரூபாய் போட்டு ஒட்டுமொத்தமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தயாராக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[2003 மார்ச் 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தா. இன்பத் தமிழன்.

**திரு. இரா.தா. இன்பத் தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திருவில்லிப்புத்தூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கும், அங்கு செயல்படுவதற்கும் உத்தரவிட்டார்கள். கடந்த ஆட்சியாளர்கள் அதைக் கைவிட்டுவிட்டார்கள். வருகின்ற நிதியாண்டுத் திட்டத்திலாவது அங்கு நீதிமன்றத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே துணை வினாக்களுக்கு அளித்த பதில் இதற்கும் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 85, திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**85—**

**நீதிமன்றக் கட்டடம்**

**•12939—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோட்டில் நீதிமன்ற வளாகத்தின் இரண்டாம் கட்ட நீதிமன்றக் கட்டடங்கள் கட்டும் திட்ட மதிப்பீடு எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

கோரப்பட்டுள்ள நிதி உதவி மைய அரசிடமிருந்து பெறப்பட்டவுடன் நிதி நிலைமைக்கேற்பப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் நடைபெற்ற மாவட்ட நலத்திட்ட உதவியில்



2003 மார்ச் 26]

ஈரோடு மாவட்டத்திற்கு 425 கோடி ரூபாய்க்குண்டான நலத்திட்ட உதவிகளை வழங்கி, அதில் ஈரோட்டுக்கு மட்டும் 185 கோடி ரூபாய்க்குண்டான நலத் திட்ட உதவிகளைத் தந்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் திசை நோக்கி வணங்கி என்னுடைய கேள்விக் கணையைத் தொடுக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டில் தனித்தனியாக 8 நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. ஒன்று, மாவட்ட குற்றவியல் நீதிமன்றம்; இரண்டு, 3 இடங்களில் குற்றவியல் நீதிமன்றங்கள்; மூன்று மாவட்ட கூட்டுறவு குற்றவியல் நீதிமன்றங்கள், மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம்; மாவட்ட தொழிலாளர்கள் நல நீதிமன்றம்; மாவட்ட வணிக வரித் துறை நீதிமன்றம் ஆகியவற்றை இணைத்து ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகமாக அமைக்க மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் 1994-95 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் 2 ஏக்கர் நிலப் பரப்பில் 3 கோடி ரூபாயில் திட்டம் தயாரிக்கப்பட்டது. இது முந்தைய ஆட்சியில் கிடப்பில் போடப்பட்டது. 100 கிலோ மீட்டர் சுற்றளவு தூரத்திலிருந்து வரும் சுமார் 25 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகமாக ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அருகிலுள்ள, ஏற்கெனவே இயங்கி வரும் நீதிமன்றத்திற்கு அருகில் 2 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்க சுமார் 5 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கு LIC, Housing Development Finance Corporation போன்றவை கடன் கொடுப்பதற்கும் தயாரான நிலையில் இருப்பதாக வழக்கறிஞர்கள் மத்தியில் கூறப்படுகிறது. இந்தக் கடனைப் பெற்றாவது கட்டடங்களைக் கட்ட வேண்டும். இந்தக் கடனைக் கட்டுவதற்கு நீதிமன்றங்கள் மூலமாக ஆண்டுக்கு 40 இலட்சம் வருமானம் வரும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நீதிமன்றங்களில் 700-க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் பணியாற்றுகிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள். தென்னரசு.

**திரு. கே.எஸ். தென்னரசு:** முடிந்துவிட்டது. முடிந்துவிட்டது. மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் அரசு இந்த ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தை அமைத்துக் கொடுத்து ஈரோடு மக்களின் நீண்ட காலக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்க அடுத்த நிதியாண்டிலாவது முன்வருமா என்று தங்கள் மூலமாக

[2003 மார்ச் 26

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கடன் பெற்றார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்று சொல்வதைப் போல இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு 11 கோடி ரூபாய், 'ஒரு நாளைக்கு மட்டும்', பட்ட கடனுக்காக வட்டியை மட்டும் செலுத்திக்கொண்டிருக்கின்ற ஒரு நிலைமை இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பொதுத்தன்மை வாய்ந்த அவசரத்தை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. நிச்சயமாக வரும் ஆண்டில் மத்திய அரசினுடைய நிதியுதவி பெறப்படும் என்கின்ற மிகுந்த நம்பிக்கை இருக்கிறது. 50 சதவிகித அளவுக்கு அவர்கள் நிச்சயம் தருவார்கள் என்ற நம்பிக்கையில் வரும் ஆண்டுகளில் அதை நிச்சயமாகச் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஈரோடு ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்ட முதல் கட்டமாக மட்டும் ரூ.71 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு அதில் உரிமையியல் நீதிமன்றங்கள் தற்போது இயங்கி வருகின்றன. இரண்டாம் கட்டப் பணியை மேற்கொள்வதற்காகத்தான் இந்தக் கருத்துருவை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அதுவும், மூன்றாவது அடுக்கு கட்ட ரூ. 99 இலட்சமும், ஆரம்பட்டியில் ரூ.5 கோடியே 55 இலட்சம் செலவில் ஒரு குற்றவியல் நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்குக் கேட்டிருக்கின்றீர்கள். வரும் காலங்களில் இது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 86, திரு. எம். சக்திவேல் முருகன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**86—**

### கோயில் கும்பாபிஷேகம்

***9096—திரு. எம். சக்திவேல் முருகன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 மார்ச் 26]

அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள அறநிலையத் துறை கோயில்களில் கும்பாபிஷேகம் செய்ய தேர்வு செய்யப்பட்டவை எவை என அரசு அறிவிக்குமா?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தொகுதியில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின்கீழ் உள்ள 8 கட்டளைகள் உட்பட மொத்தத் திருக்கோயில்கள் 225. இதில் பட்டியலைச் சேர்ந்த திருக்கோயில்கள் 36. பட்டியலில் சேராத திருக்கோயில்கள் 189. மேற்படி 225 திருக்கோயில்களில் குடமுழுக்கு விழா நடைபெற்று 12 ஆண்டுகள் முடிந்துள்ள 13 பட்டியலில் சேர்ந்த திருக்கோயில்களும், 174 பட்டியலில் சேராத திருக்கோயில்களும், மொத்தம் 187 திருக்கோயில்கள் கண்டறியப்பட்டுள்ளன. உபயதாரர்கள் மூலம் திருப்பணி மேற்கொண்டு 2002 ஆம் ஆண்டு இறுதிக்குள் குடமுழுக்கு நடத்திட கீழ்க்கண்ட நான்கு திருக்கோயில்கள் தேர்வு செய்யப்பட்டு குடமுழுக்கு நடத்தி முடிக்கப்பட்டுள்ளன:-

(1) அருள்மிகு காசிவிஸ்வநாதசுவாமி திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில், ஆம்பூர்- 27-6-2002 அன்று குடமுழுக்கு நடந்து முடிந்துள்ளது.

(2) அருள்மிகு விஸ்வநாதசுவாமி திருக்கோயில், கடையம்- 27-6-2002 அன்று குடமுழுக்கு நடந்து முடிந்துள்ளது.

(3) அருள்மிகு வெங்கடேசப்பெருமாள் கோயிலுடன் இணைந்த அருள்மிகு ஆதிநாத ஆழ்வார் கோயில், ஆழ்வார்குறிச்சி - 27-6-2002 அன்று குடமுழுக்கு நடந்து முடிந்துள்ளது.

(4) அருள்மிகு வடக்குவாச்செல்வி அம்மன் திருக்கோயில், விக்ரமசிங்கபுரம் - 11-9-2002 அன்று குடமுழுக்கு நடந்து முடிந்துள்ளது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்த்த அகத்தியமாமுனிவர் வாழ்ந்த தென் திசையில் உள்ள பொதிகை மலையின் அடியில் அமைந்துள்ள எனது அம்பாசமுத்திரம் தொகுதியில், அம்பாள் கோயில்களின் எண்ணிக்கை சமுத்திரம் போல் எண்ணற்ற அளவில் 225 என்ற எண்ணிக்கையில் சிவபெருமானுடன் காட்சி தந்து அமைந்துள்ளது.

[2003 மார்ச் 26

ஆகவே இந்த வருடம் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் ஆட்சியில் 1 கோயில்களில் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கூறியுள்ளார்கள். நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொள்வது, மிகவும் பிரசித்தி பெற்ற மன்னர் காலங்களில் கட்டிய கோயில்களிலும், 12 ஆண்டு காலமாக கும்பாபிஷேகம் நடைபெறாமல் உள்ள கோயில்களான அருள்மிகு அம்பாசமுத்திரம் காசிவிஸ்வநாதசுவாமி கோயில், ஊர்க்காடு கோச்சியப்பர் கோயில், அம்பாசமுத்திரம் திருமூலநாதர் சுவாமி கோயில், மன்னார்கோயில் ராஜகோபாலசுவாமி கோயில், பிரம்மதேசம் கைலாசநாதசுவாமி கோயில், திருவாலிசுவாம் திருவாலிசுவரர் கோயில் ஆகிய முக்கியமான கோயில்களான இந்த ஆறு கோயில்களுக்காவது இந்த ஆண்டு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சியில் கும்பாபிஷேகம் நடத்த ஏற்பாடு செய்யப்படுமா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் ஆலயங்களும், கல்விச் சாலைகளும் நன்றாக இருந்தால்தான் ஓர் ஆட்சி நன்றாக அமையுமென்ற அடிப்படையில் 12 ஆண்டுகளாகத் திருப்பணிகள் செய்து முடிக்கப்படாமல் இருக்கின்ற அனைத்துக் கோயில்களுக்கும் திருப்பணி செய்ய வேண்டுமென்ற ஆணையின் அடிப்படையில் 2002 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு முடியவுள்ள இடைப்பட்ட காலங்களில், தேர்வு செய்யப்பட்ட உபயதாரர்களை அணுகி அவர்கள் மூலமாக திருப்பணி வேலைகளை மேற்கொண்டு குடமுழுக்கு நடத்த உத்தேசித்து தேர்வு செய்யப்பட்டுள்ள திருக்கோயில்களின் எண்ணிக்கை விவரம்:—

| | | | | |
|---|---|---|---|---|
| 2002-2003 | ஆம் | ஆண்டு | - | 10 |
| 2003-2004 | ஆம் | ஆண்டு | - | 77 |
| 2004-2005 | ஆம் | ஆண்டு | - | 92 |

தங்களுடைய தொகுதியில் மொத்தம் 179 ஆலயங்களை இந்த மூன்று ஆண்டுகளில் திருப்பணி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு



2003 மார்ச் 26]

தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியில் 3 ஆண்டுகளில் இந்த 179 கோயில்களிலும் கும்பாபிஷேகம் நடத்த இதய தெய்வம் அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்ற செய்தியைச், சொல்லிய அமைச்சர் அவர்களுக்கும், அம்மா அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்கள் சார்பிலும், எனது சார்பிலும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நன்றியைக் கூறிக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 87, திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**87—**

### சித்த மருத்துவமனை

***18741—திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறிஞ்சிப்பாடியில் உள்ள சித்த மருத்துவமனைக்குத் தனியாகக் கட்டடம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2003 மார்ச் 26

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குறிஞ்சிப்பாடி அரசு மருத்துவமனையில் செயல்பட்டு வரும் சித்த மருத்துவப் பிரிவிற்கு தனியாகக் கட்டடம் கட்டித் தரும் கருத்துரு அரசின் ஆய்வில் இல்லையென்று சொன்னாலும், சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்ட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி சித்த மருந்தகங்களுக்குத் தேவையான கட்டடங்களைக் கட்டித் தர தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கணிசமான அளவு நிதி ஒதுக்கக் கேட்டு எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் 28-11-2001 அன்று நான் எழுதிய கடிதம் துறை வழியாக அனைவருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று ஏறக்குறைய ரூபாய் 101 இலட்சத்தை 37 சட்டமன்ற உறுப்பினர்கள், 3 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கித் தந்துள்ளார்கள். அந்த உதவியுடன் அந்தந்தத் தொகுதிகளில் சித்த மருந்தகங்களுக்குக் கட்டடம் கட்டும் பணி இப்போது நடைபெற்று வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் தன்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கணிசமான அளவு நிதி ஒதுக்கினால் குறிஞ்சிப்பாடி அரசு மருத்துவமனையிலுள்ள சித்த மருந்தகத்திற்குத் தனியாகக் கட்டடம் இந்த ஆண்டேகூட கிடைத்துவிடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 88, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**88—**

### பாசுமதி அரிசி

**•11455—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மார்ச் 26]

(அ) தமிழ்நாட்டில் பாசுமதி அரிசி உற்பத்தி செய்யப்படுகிறதா?

(ஆ) பாசுமதி அரிசியை ஏற்றுமதி செய்ய மாநில அரசு ஊக்கம் அளிக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் பாசுமதி அரிசி உற்பத்தி செய்யப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் பாசுமதி அரிசி உற்பத்தி செய்ய ஏற்கெனவே ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த ஆராய்ச்சிகளின் முடிவுகள் என்ன என்று தெரியவில்லை. தமிழ்நாட்டிற்குத் தேவையான பாசுமதி அரிசி வெளி மாநிலங்களிலிருந்து கொண்டு வரப்படுகின்றது. பாசுமதி அரிசிக்கு நல்ல விலை கிடைக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகள் நல்ல விலை பெற்றிட, தமிழ்நாட்டில் பாசுமதி அரிசி உற்பத்தி செய்ய அரசு முயற்சிகள் மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசுமதி நெல் கதிர் வந்ததிலேயிருந்து அறுவடை முடியும் வரை 22 முதல் 30 டிகிரி செல்ஷியஸ் வெப்பநிலையிலே இருக்க வேண்டும். அந்தத் தட்பவெப்பநிலை தமிழ்நாட்டில் இல்லாததால் உற்பத்தி செய்ய இயலாத நிலை இருக்கிறது. எனவே தமிழ்நாட்டில் பாசுமதி அரிசி எங்கும் பயிரிடப்படவில்லை எனத் தங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 89, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**89—**

### பெண்களின் திருமண வயது

**•6946—திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 18 வயதிற்கும் குறைவான பெண்களுக்கு தமிழ்நாட்டில் திருமணம் நடப்பது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசிடம் என்ன திட்டம் உள்ளது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கரூர் மாவட்டத்திலுள்ள சில கிராமங்களில் மட்டும் 18 வயதிற்குக் குறைவான பெண்கள் சிலர் திருமணம் முடித்துக் கொண்டிருப்பதாக அரசின் கவனத்திற்கு வந்தது. அந்தப் பழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் பொருட்டு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் பெண்கள் நலனிலே அக்கறை கொண்டு பெண்களினுடைய வளர்ச்சியை கவனத்திலே கொண்டு, அம்மா அவர்கள் ஆணையிட்டதின் பேரில் ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கீடு செய்து அதன் மூலம், விழிப்புணர்ச்சிப் பிரச்சாரங்கள் மூலமாக எந்தக் கிராமங்களிலே குறைந்த வயதிலே திருமணம் நடைபெற்றதோ அந்தக் கிராமங்களில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, இப்போது அந்த மாவட்டத்திலே குறைந்த வயதுத் திருமணம் குறைக்கப்பட்டிருக்கிறது.

(ஆ) சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அனைத்து திருமண நிதியுதவித் திட்டங்களிலும் பயன் பெற குறைந்தபட்ச வயது 20 என தகுதி நிர்ணயித்து அரசு ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி திருமணங்கள் சில இடங்களிலே பெற்றோர்களுக்குத் தெரியாமல் நடக்கக்கூடிய திருமணங்கள்தான் இதுபோல குறைந்த வயதிலே நடைபெறுவதாக அரசினுடைய கவனத்திற்கு வந்து, அதன் மூலம் காவல் துறைக்கு சமூக நலத் துறையின் மூலம் அறிவுறுத்தப்பட்டு, அவர்கள் மூலமாக குறைந்த வயதிலே திருமணம் செய்த பெண்ணைக் கைது செய்து, மகளிர் காப்பகங்களிலே அவர்களை வைத்து, மூன்று மாத காலம் அவர்களுக்கு பயிற்சி அளித்து, திரும்பவும் பெற்றோர்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பிறப்பு இறப்புகளைப் பதிவு செய்வது எவ்வாறு கட்டாயம்



ஆக்கி சட்டம் இயற்றப்பட்டு உள்ளதோ அதைப்போன்று அனைத்துத் திருமணங்களையும் கட்டாயம் பதிவு செய்யவேண்டும் என்ற சட்டத்தை அரசு இயற்றுமா? கிராமப்புறங்களில் பெரும்பாலும் மதக் கட்டுப்பாடு, சமூகக் கட்டுப்பாடு, ஊர்க் கட்டுப்பாடு காரணமாகவும், கல்வி அறிவு இல்லாததாலும், பொருளாதார ரீதியாக வளம் பெறாததாலும் இதுபோன்ற திருமணங்கள் அதிகமாக நடைபெற்று வருவதை அரசு அறியுமா? அதைத் தடுக்க அரசு என்ன தீவிர நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பதிலில் குறிப்பிட்டதைப் போல இதுபோன்ற குறைந்த வயது திருமணங்களைத் தடுப்பதற்குப் பல்வேறு விழிப்புணர்ச்சி முகாம்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி நடத்தப்பட்டு—இதுவரை நம்முடைய தமிழகத்திலே ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் நான்கு இடங்களில் பயிற்சி நடத்தப்பட்டு, 1272 புத்தாக்கப் பயிற்சிகள் 43 இலட்சம் ரூபாய் செலவிலே—இதன் மூலம் 38,500 வளர் இளம் பெண்கள் அந்தப் பயிற்சியிலே கலந்து பயன் பெற்றிருக்கிறார்கள். அது தவிர அந்தந்த ஊராட்சி மன்றங்களுக்கும், ஒன்றியத்தினுடைய தலைவர்களுக்கும் சமூக நலத் துறை அலுவலர்கள் மூலமாக ஒவ்வொரு பகுதிக்கும் சென்று சமூக நலத் துறை ஊழியர்கள் மூலமாக விழிப்புணர்ச்சி முகாம்களை நடத்தி இதுபோன்ற குறைந்த வயதுத் திருமணத்தை நடத்தக் கூடாது என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குழந்தைகள் திருமணத்தைத் தடுப்பதற்கு வேண்டிய சட்டத்தைக் கொண்டுவருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று கேட்டார்கள். இங்கே, ஏற்கெனவே Child Marriage Restraint Act இருக்கின்றது. எனவே அந்தக் கடுமையான சட்டம் இருக்கின்ற ஒரு சூழ்நிலையில் மக்களிடத்தில் ஒரு மனமாற்றம்தான் தேவைப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமண வயது 18 என்பதைப் பற்றி விவாதித்துக் கொண்டு இருக்கின்ற வேளையில் மருத்துவ ஆய்வு ரீதியாக குறைந்தபட்சம் 21 வயதுக்குக் குறைவாக திருமணம் நடத்தினால் பெண்களுக்கு இயற்கையாகவும் அல்லது செயற்கையாகவும் பல பாதிப்புகள் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. குறிப்பாக மகப்பேறு காலங்களில் கடந்த 5 ஆண்டுகாலமாகக் கணக்கெடுத்துப் பார்த்தால் மகப்பேறு என்பது சுகமாக நடைபெற்றதாகச் சொல்லப்படும் எண்ணிக்கை என்பது மிகக் குறைவு. தமிழ்நாட்டில் அறுவைச் சிகிச்சை மூலமாகவே நடைபெற வேண்டிய அவசியம் இருக்கிறது. இதை வேடிக்கையாகவோ, விளையாட்டாகவோ சொல்லவில்லை. காரணம் அவர்களுடைய உடற்கூறு அமைப்பு, தேவையான சத்து, இவை எல்லாம் குறைவாக இருக்கிற காரணத்தால் இப்படிப்பட்ட பாதிப்புகளுக்கு உள்ளாகிறார்கள். ஆகவே அவற்றைப் போக்குவதற்கான முயற்சியாகவும் மருத்துவ ஆய்வு ரீதியாக இருக்கிற இந்த நிலைமைகளை விளக்கிச் சொல்லியும் அதற்கு ஏற்றாற்போல் குறைந்தபட்சம் 21 வயதுக்குமேல்தான் திருமணம் செய்யவேண்டும் என்பதற்கான முயற்சியைச் சட்டம் ஆக்குகிறோமோ இல்லையோ அதை பிரச்சாரத்தின் மூலமாக தேவையான அளவுக்கு நம்முடைய துறை மூலமாக அறிவுறுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பெண்களுக்கு குறைந்த வயதிலே திருமணம் நடத்தக்கூடாது என்று குறிப்பிட்டும் குடும்ப வாழ்க்கைக் கல்வி என்கிற பிரச்சாரத்தையும், பெண்களுக்கு ஏற்படக்கூடிய சுகாதாரக் கேடுகள் சம்பந்தமாகவும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டங்களின் மூலமாக ஒரு கோடியே நாற்பது இலட்சம் ரூபாய் செலவிலே மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே மூன்று கட்டமாக மாவட்டங்களைப் பிரித்து எடுத்து அதன் மூலம் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்னும் அரசினுடைய கவனத்திற்கு வராமல் இதுபோன்ற சுகாதாரக் கேடு விளைவிக்கக் கூடிய முறையிலே குறைந்த வயதிலே திருமணம் செய்யக்கூடிய ஒன்றிரண்டு சம்பவங்கள் ஆங்காங்கே அரசுக்குத் தெரியாமலேயே நடந்தால் மக்கள் பிரதிநிதிகள் மூலமாகவும் அந்தந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய சுய உதவிக் குழு பெண்கள் மூலமாகவும் இந்தப் பிரச்சாரத்தை ஏற்படுத்தி விழிப்புணர்ச்சியைத் தொடருவதற்கு



நீங்களும் அரசோடு ஒத்துழைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 90, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**90—**

## ஆதிதிராவிடர் நலப் பள்ளி

***13186—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, பாலவாக்கத்திலுள்ள ஆதிதிராவிடர் நலத் துறைப் பள்ளி கிழக்குக் கடற்கரைச் சாலை அபிவிருத்தியால் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மாற்று ஏற்பாடு என்ன?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், பாலவாக்கத்திலுள்ள ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளி கிழக்குக் கடற்கரைச் சாலையின் விரிவாக்கத்தின் காரணமாக அகற்றப்படவுள்ளதால் இப்பள்ளியை மாற்று இடத்தில் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பகுதியில் தகுதிவாய்ந்த அரசு புறம்போக்கு நிலம் இல்லாததால், சுமார் 50 சென்ட் முதல் 70 சென்ட் வரையிலான தனியார் நன்செய் நிலத்தை கையகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் கையக நடவடிக்கையை விரைந்து முடித்து கட்டடம் கட்டுவதற்கு உரிய நடவடிக்கை மாவட்ட ஆட்சியர் மூலம் எடுக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 10-40

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலவாக்கம் ஆதிதிராவிடர் நலத் துறையினுடைய உயர்நிலைப் பள்ளி சற்றொப்ப ஆயிரத்திற்கும் மேற்பட்ட

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மாணவர் பயிலுகின்ற பள்ளியாகும். இந்தப் பள்ளி ஏற்கெனவே நெடுஞ்சாலை ஓரத்திலே, கிழக்குக் கடற்கரைச் சாலை ஓரத்திலே இருந்த காரணத்தாலே பிள்ளைகள் ஒதுங்குவதற்குக்கூட, இயற்கை உபாதைகளை கழித்துக் கொள்வதற்குக்கூட வசதி இல்லாமல் இருந்தது. தற்போது ஒரு பகுதி அபிவிருத்தி செய்யப்பட்டுவிட்ட காரணத்தால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்ற அந்தக் குழந்தைகளுக்கு, இப்போது ஒன்று முதல் 5 ஆம் வகுப்பு வரை ஒரு சமூக நலக் கூடத்திலே வைத்து பாடம் நடத்துகிறபோது அது பாடம் பயிலுகின்ற இடமாக இல்லாமல் எங்கோ ஓரிடத்தில் சேர்த்து வைப்பது போன்ற இடமாக இருக்கின்ற காரணத்தால்—ஏற்கெனவே அரசு பாலவாக்கத்திலே கோவிந்தன் நகரில் உள்ள தனியார் ஒருவரிடத்திலே பேசிய அந்த இடத்தைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன்—விரைந்து நடவடிக்கை எடுத்து அந்த இடத்தை நலத் துறை மூலமாகக் கைப்பற்றி, கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வாரா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், பாலவாக்கம் கிராமத்தில் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கிவரும் இப்பள்ளி 1994 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களால் உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்பட்டு தற்போது 1500-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கல்வி பயின்றுவரும் மிகப் பெரும் பள்ளியாக அப்பகுதியில் இயங்கி வருகிறது. இந்தப் பள்ளி நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான புறம்போக்கு இடத்தில் இயங்கி வருவதால், கிழக்குக் கடற்கரைச் சாலை விரிவாக்கம் காரணமாக அகற்றப்பட வேண்டி 1998ஆம் ஆண்டில் நெடுஞ்சாலைத் துறையால் உரிய அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அப்போதிருந்த தி.மு.க. ஆட்சி இது தொடர்பான பயனுள்ள எந்த நடவடிக்கையும் எடுக்காமல், 1999ஆம் ஆண்டில் மாண்புமிகு உறுப்பினர் அப்போதும் இந்த மாமன்றத்திலே இவற்றையெல்லாம் எழுப்பியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சியில்தான் தகுதியான மாற்று இடம் தேர்வு செய்யும்





நடவடிக்கையைத் துரிதப்படுத்தி இப்பகுதியில் தகுதி வாய்ந்த அரசு புறம்போக்கு நிலம் ஏதும் இல்லாததால் தனியாருக்குச் சொந்தமான பட்டா நிலத்தை பேச்சுவார்த்தை மூலம் சுமார் 75 சென்ட் நஞ்சை நிலத்தைக் கையகப்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுமதி அளித்து 13-7-2002 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி விரைவாக நிலத்தைக் கையகப்படுத்தும் பணியை மாவட்ட ஆட்சித் தலைவர் மேற்கொண்டு வருகிறார்.

அந்த இடத்தை நான் நேரில் சென்று பார்த்தேன். அந்த இடம் 4 பக்கங்களிலும் சுற்றுச் சுவருடன் கூடிய தகுதி வாய்ந்த இடமாக இருக்கிறது. அந்த நிலம் கையகப்படுத்தும் பணியில் மாவட்ட ஆட்சித் தலைவர் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளோம்.

**திரு. பீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சுட்டிக்காட்டியதைப் போல நான் குற்றச்சாட்டுகள் சொல்ல விரும்பவில்லை. அந்தப் பிள்ளைகளினுடைய நலன் கருதி அந்த ஆட்சியில் எடுத்த நடவடிக்கைதான் கோவிந்தன் நகர் இடம் என்று சொன்னாலும்கூட, அந்த இடத்தைப் பெறுவதற்கு ஒருவேளை நிதி ஆதாரம் சரியில்லை என்று சொன்னால், அந்த இடத்திலே அரசினுடைய பல்வேறு துறைகளைச் சார்ந்த இடங்கள், பல ஏக்கர்கள் இருக்கின்றன. அந்தத் துறைகளிடமிருந்து பெற்று—குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடம்கூட நிரம்ப அங்கே இருக்கிறது. அவற்றில் ஏதாவது ஒன்றைப் பெற்று—விரைந்து கட்டடம் கட்டுவதற்கு, அந்தப் பள்ளியை மாற்றி அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, கோயிலுக்குச் சொந்தமான இடம் குறித்து தகவல் ஏதும் இப்போதுவரை பெறப்படவில்லை. இருந்தாலும் விரைவாக கட்டடப் பணியை, முழுமையாக விரைவாக மாற்று இடத்திற்குக் கொண்டு செல்லுகின்ற நடவடிக்கை மூலமாகத்தான் தனியார் நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆனால் 1998ஆம் ஆண்டிலேயே இந்த நடவடிக்கையை எடுத்திருந்தால் ஓரளவுக்கு அரசுக்குச் செலவு குறைந்திருக்கும்.

[2003 மார்ச் 26

ஆனால் இப்போது இந்த நெருக்கடியிலும், இந்தப் பணியைச் செய்ய எந்த நிதியையும் கொடுத்து, விலை கொடுத்து வாங்கி, நிலத்தைக் கையகப்படுத்தி மாற்று இடத்திற்குக் கொண்டு செல்வதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 91, திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**91—**

## போக்குவரத்து வசதி

**•9715—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் முதல் வெள்ளாளகுண்டம் வழியாக முடியனூர் வரை சென்று வந்த 44-ஏ வழித்தடத்தை மீண்டும் இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* மற்றும் *(ஆ)* சேலத்திலிருந்து வெள்ளாளகுண்டம் வழியாக முடியனூர் சென்று வந்த 44-ஏ தடப் பேருந்து, தடம் மாற்றி அமைக்கப்பட்டு முடியனூர் வழியாக தற்போது இரு பேருந்துகள், ஒன்று திம்மாலூருக்கும் ஒரு பேருந்து வேப்பிலைப்பட்டிக்கும் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகள் முடியனூர் கிராம மக்களின் போக்குவரத்துத் தேவைகளை முழுமையான அளவில் பூர்த்தி செய்து வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2003 மார்ச் 26]

முற்பகல் 10-45

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 44-ஏ பேருந்து இப்போது இயக்கப்பட்டு வருவதாகக் கூறினார்கள். ஆனால் அந்தப் பேருந்து ரெகுலராக வருதில்லை. ஒருசில நாட்களில் வருகிறது. ஒருசில நாட்களில் வருவதில்லை. இதைக் கருத்தில்கொண்டு கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு அந்தப் பகுதியிலுள்ள மாணவ, மாணவியர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் விவசாயப் பெருமக்களுடைய நலனைக் கருத்தில்கொண்டு இந்தப் பேருந்து ரெகுலராக வருவதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த வழித்தடங்களில் தொடர்ந்து பேருந்து இயக்குவதிலே தடைகள் இருப்பதாகச் சொன்னார். அப்படி இருப்பதாக அரசுக்கு குறிப்பிட்டுச் சொல்வீர்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை எடுத்து அந்த வழித்தடங்களில் தொடர்ந்து அந்தப் பேருந்துகளை இயக்குவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடைகள் ஏதும் இல்லை. ஆனால் அந்த பஸ்கள் ஒழுங்காக, ரெகுலராக வருவதில்லை என்று கூறினேன். அதனால் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ரெகுலராக பஸ் வருவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இதிலே உரிய நடவடிக்கைகள் எடுத்து, தடைகளின்றி அந்த வழித்தடத்தில் தொடர்ந்து பேருந்துகளை இயக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கிறேன்.

[2003 மார்ச் 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 92, திரு. தா. பச்சைமால், மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

**92—**

## அனல் மின் நிலையம்

***2264—திரு. தா. பச்சைமால்:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ராஜாக்கமங்கலத்தில் உள்ள 1200 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலத்தில் அனல் மின் நிலையம் அமைக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்பொழுது குளச்சல் பகுதியில், பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (2002-2007), அனல் மின் நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**திரு. தா. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ராஜாக்கமங்கலத்தில் சுமார் 1200 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் உள்ளது. அங்கு 1984ஆம் ஆண்டு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களது ஆட்சியில் அனல் மின் நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டது. அந்தப் பகுதியில் அனல் மின் நிலையம் அமைவதால் குமரி மாவட்டத்தில் படித்து, வேலையில்லாமல் இருக்கும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். கடற்கரை மிக அருகில் உள்ளதாலும், கடற்கரைச் சாலை அந்தப் பகுதியில் செல்வதாலும் நிலக்கரி உள்ளிட்ட மூலப் பொருள் வந்து சேருவதற்கு மிகவும் ஏதுவாக இருக்கும். இதுவரை குமரி மாவட்ட மக்களுக்கு வேலைவாய்ப்புக்காக எந்தவிதமான தொழிற்சாலைகளும் இல்லை என்ற நிலை மாறும். எனவே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய



2003 மார்ச் 26]

பொற்கால ஆட்சியில் அடுத்த ஆண்டாவது ராஜாக்கமங்கலத்தில் அனல் மின் நிலையம் துவங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் கூடங்குளம் பகுதியில் 2000 மெகாவாட் திறன் கொண்ட அணு சக்தி மின் உற்பத்தி நிலையம், மத்திய அரசின் அணு மின் உற்பத்தி நிறுவனத்தால் அமைக்கப்பட்டு வருகின்றது. இதிலிருந்து தமிழ்நாட்டுக்கு பெரும் பங்குத் திறன் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே குளச்சல் பகுதியில் அனல் மின் நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கன்னியாகுமரி மாவட்டத்தில் மின் உற்பத்தியைச் செய்வதற்காக பரளியாறு திட்டம் என்ற ஒன்று ஆரம்பிக்கப்பட்டு, அந்தப் பரளியாறு திட்டத்தின் மூலமாக எவ்வளவு மெகாவாட் மின்சாரம் கிடைத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதைத் தனிக் கேள்வியாகப் போடவும்.

வினா எண் 93, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**93—**

## குடும்ப அட்டை

***28462—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்ப அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு குடும்ப அட்டை வழங்கிட அரசு தனிக் கவனம் செலுத்துமா?

[2003 மார்ச் 26

(ஆ) ஆம் எனில், அரசு எடுக்கும் முயற்சி என்ன?

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு போரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குடும்ப அட்டை இல்லாத குடும்பங்களின் குடும்பத் தலைவர்கள் குடும்ப அட்டை வேண்டி. சம்பந்தப்பட்ட உணவுப் பொருள் வழங்கல் துறை அலுவலருக்கு விண்ணப்பிப்பார்களேயானால், அந்த மனு ஆய்வு செய்யப்பட்டு குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு தமிழகத்திலே உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு அட்டை வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. புதிதாகவும் வழங்கப்பட்டிருக்கின்றன. அப்படி வழங்கப்பட்டதிலே பலபேர்களுக்கு குடும்ப அட்டை கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. பல பேர்கள் அதற்குரிய மனுக்கள் செய்து இருக்கிறார்கள். அவர்களுக்குக் கிடைப்பதிலே தடைகள் நீடித்துக் கொண்டிருக்கின்றன. அங்கே இருக்கின்ற அதிகாரிகள் பல்வேறு காரணங்களைச் சொல்லி இழுத்தடித்து குடும்ப கார்டு பெறுவதற்கான முயற்சிக்குத் தடையாக இருக்கிறார்கள். ஆகவே அதைப்பற்றி அரசு பரிசீலித்து, விடுபட்டவர்கள் அனைவருக்கும் குடும்ப அட்டைகள் வழங்குவதற்கான முயற்சியை மேற்கொள்ளுமா? இப்போது தமிழகத்திலே எத்தனை குடும்ப அட்டைதாரர்கள் இருக்கிறார்கள்? எவ்வளவு வழங்கப்பட்டிருக்கின்றன? மேலும் வழங்கப்படாமல் நிலுவையிலே எத்தனை குடும்ப அட்டைதாரர்கள் இருக்கிறார்கள் என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய பொது விநியோகத் திட்டத்தை அறிவித்ததற்குப் பின்னால், நம்முடைய மாநிலத்திலே மிகச் சிறப்பாக இந்த விநியோக முறை சிறந்த முறையிலே நடைபெற்றுக்கொண்டு வருகிறது என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையில், இந்த



2003 மார்ச் 26]

மாநிலத்தைப் பொறுத்தமட்டில், ஒரு கோடியே 61 இலட்சத்து 14 ஆயிரத்து 200 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலும் எந்தப் பகுதியிலே அப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டுவார்களேயானால், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இப்படிப்பட்ட ஏழை எளியவர்களுக்கு எங்கெங்கு தேவைகள் இருக்கின்றனவோ அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்திட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டை பெறுவதற்காக விண்ணப்பிக்கின்றபோது, அதிலே வீட்டு வரி இரசீதினை இணைத்து விண்ணப்பித்தால்தான் அந்த விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, அங்கே இட நெருக்கடி இருக்கின்ற காரணத்தினால், அண்ணன், தம்பி என்று 2, 3 குடும்பங்கள் தனித்தனியாக ஒரே வீட்டிலேயே வாழ்ந்து வருகிறார்கள். ஒரே சமையலறையைக்கூட தனித்தனியாக அவர்கள் பயன்படுத்தி வருகின்றார்கள். எனவே அப்படி இருக்கின்ற நிலையிலே அவர்கள் குடும்ப அட்டை கிடைக்காமல் பாதிக்கப்படக்கூடிய ஒரு நிலை இருந்து வருகின்றது. எனவே அதற்கு ஏதாவது செய்து, அநத விதிகளைத் தளர்த்தி, சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலேயிருந்து ஏதாவதொரு பரிந்துரைக் கடிதத்தையோ அல்லது சான்றிதழையோ பெற்றிருந்தால் அதை வைத்து அந்த விண்ணப்பங்களைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற வகையில், அந்த விதிமுறைகளைத் தளர்த்திக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி விதிமுறைகளை எல்லாம் தளர்த்துவதற்கு இயலாது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேநேரத்தில், இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய உத்தரவின் பேரில் மிக விரைவாக குடும்ப அட்டைகள் தந்திட வேண்டுமென்பதன்

[2003 மார்ச் 26

அடிப்படையிலே 1-6-2001-க்குப் பின்னால், நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரால் நேரடியாக அப்படிப்பட்ட புகார்களின்பேரில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டில் பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு கோயம்புத்தூர் மாவட்டம் போன்ற மாவட்டங்களிலே இப்போது வரைக்கும் கார்டுகள் கொடுக்கப்படவில்லை. பல ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் கம்ப்யூட்டரிலே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. வரிசையாகக் கொடுக்கிறோம் என்று சொல்லி சமாதானம் சொல்லப்படுகிறது. பாஸ்போர்ட் வாங்கினாலும் வாங்கிவிடலாம், ரேஷன் கார்டு வாங்குவதிலே கஷ்டம் இருக்கிறது என்று ஜனங்கள் சொல்கிறார்கள். சென்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் 10 இலட்சம் கள்ள கார்டுகள் இருப்பதாகச் சொல்லப்பட்டது. அவை ஏதாவது பறிமுதல் செய்யப்பட்டு, கரெக்டான நிலையிலே இப்போது குடும்ப கார்டுகள் பராமரிக்கப்படுகின்றனவா? புதிய கார்டுகளை குறிப்பிட்ட கால எல்லைக்குள் விநியோகிப்பதற்குண்டான ஏற்பாடு உறுதிபூர்வமாக செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, போலி கார்டுகள் எல்லாம் மிக அதிக அளவிலே பிடிக்கப்பட்டு வந்துகொண்டிருக்கின்றன என்பதை நீங்கள் எல்லாம் செய்தித் தாள்களிலே பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். எனவேதான், விதிகளையெல்லாம் மாற்றக் கூடாது என்பதற்காக விதிகளை இந்த அளவிற்கு வைத்திருக்கிறோம். உறுப்பினர் அவர்கள் கோவை மாவட்டத்திலே இருப்பதாகச் சுட்டிக்காட்டுகிறார்கள். அவர்கள் யார், யார் என்பதனைத் தருவார்களேயானால், உடனடியாக தக்க நடவடிக்கை, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய கட்டளையின்பேரில் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.



2003 மார்ச் 26]

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப ரேஷன் கார்டு பெறுவதிலே, ஒன்று புதிய கார்டு பெறுவது. இரண்டாவது பழைய கார்டுகளைப் புதுப்பிப்பது. அரசு 30-6-2002-லே கார்டுகள் புதுப்பிக்கப்பட வேண்டுமென்று உத்தரவிட்டது. கிராமப்புறத்திலே இருக்கிற மக்கள் மீடியாவையோ அல்லது பத்திரிகையையோ பார்த்து தங்களுடைய கார்டுகளை அந்தக் காலகட்டத்திற்குள்ளே, அந்தக் கால நிர்ணயத்திற்குள்ளே புதுப்பிப்பதில் ஏற்பட்டிருக்கிற தடையின் காரணமாக, காலம் கடந்து அவர்கள் தங்களுடைய ரேஷன் கார்டுகளைப் புதுப்பிக்கிறபோது, அது காலாவதியாகிவிட்டது என்று சொல்லி புதுப்பிக்க முடியாமல் இருக்கிறார்கள். ஆக, உண்மையிலேயே பயன்பெறக் கூடியவர்கள் பலபேர் அப்படி விடுபட்டு இருக்கிற காரணத்தினால், அரசு மறு அறிவிப்புக் கொடுத்து, அந்தக் காலத்திற்குள் அவர்கள் புதுப்பித்துக்கொள்வதற்கு, உண்மையாகவே ஏழை எளிய மக்கள் தங்களுடைய ரேஷன் பொருட்களை வாங்குவதற்கான வாய்ப்புகளை உருவாக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியபடி, பல்வேறு நிலையிலே போலி கார்டுகள் எல்லாம் இருந்தன. அதைக் கண்டுபிடிக்கின்ற வகையிலேதான் இப்படிச் சட்டங்களைப் போட்டு இருக்கிறோம். இன்றையதினம் உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியபடி இருக்குமேயானால்—அவற்றை சுட்டிக்காட்டுங்கள்—நாங்கள் அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கக் காத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தா. இன்பத் தமிழன்.

**திரு. இரா.தா. இன்பத் தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ரேஷன் அட்டைகளுக்கு, அதாவது குடும்ப கார்டுகளை பிரிண்ட் செய்வதற்கு சென்னைக்கு அந்த கார்டுகள் எல்லாம் அனுப்பப்படுகின்றன. தென் மாவட்டத்திற்கு மதுரையில் அச்சடிக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டால், அனைவருக்கும் கூடிய விரைவில் கிடைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குண்டான முயற்சியைச் செய்வாரா

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போன்று, மாவட்டம் மாவட்டமாகச் செய்ய இயலாது. இது 'எல்காட்' நிறுவனம் மூலமாக 31-5-2001 வரை ஒரு நடவடிக்கை அப்படி இருந்தது. அதை மேலும் வேகமாக நடத்த வேண்டும் என்பதற்காக 1-6-2001 முதல் உணவுப் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் அலுவலகத்தில் அதற்கான சிறப்புப் பிரிவு அமைக்கப்பட்டு, அதன் மூலமாக இந்த அட்டைகளை வேகமாக வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டை இல்லாத காரணத்தினாலே பல்வேறு சலுகைகளைப் பெறுவதிலே தடை ஏற்பட்டுவிடுகிறது. எல்லா நிகழ்வுகளுக்குமே அதை ஆதாரமாகக் காட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகிற காரணத்தினாலே, பலபேர் அந்தக் குடும்ப அட்டை இல்லாமல், பல நிவாரணப் பணிகளிலே, மற்ற காரியங்களிலே அரசின் சலுகைகளைப் பெறுவதற்குரிய முயற்சி எடுப்பதிலே தடை இருக்கிறது. ஆகவே மிக முக்கியமான ஆதாரமாக இருக்கிறது இந்த குடும்ப அட்டை. ஏழை எளிய மக்கள் ரேஷன் கடைகளிலே அரிசி வாங்குவது என்பது மிக முக்கியமான ஒன்று. இதன் காரணத்தினாலே மிகப் பெரும்பாலான ஏழைக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே விதிகளைத் தளர்த்துவதா, இல்லையா என்பது இதிலே விவாதம் இல்லை. ஆனால் உள்ள விதிகளைப் பயன்படுத்தி, தனிக் குடும்பமாக இருப்பவர்கள், புதியதாக கார்டுகளைக் கேட்பவர்களை அரசு விசாரணையின் மூலமாகக் கண்டறிந்து, அவர்களுக்குரிய குடும்ப அட்டைகளை வழங்குவதற்கான முயற்சிகளை அரசு தனித்த முயற்சியாக மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியபடி எங்கெங்கெல்லாம் அட்டைகள் இல்லையோ, அவர்களுக்கெல்லாம் ஒரு காலகட்டத்திலே அட்டைகள் முழுமையாக வழங்கப்பட்டதாகத்



தெரிவித்தாலும், மேலும் இப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்குமேயானால், அவற்றைத் தீர்ப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கக் காத்திருக்கிறோம். அதேநேரத்தில், பல்வேறு கடைகளிலும் அல்லது பல்வேறு வணிகப் பெருமக்களும் போலியான கார்டுகளையும் அதிகமான அளவில் பல்வேறு பெயர்களிலே வைத்துக்கொண்டு அதிகமாக அரிசியை வாங்குகிற நிலைப்பாடுகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் தவிர்க்கின்ற வகையிலேதான் இந்த அரசு சரியான நேரங்களிலே அவர்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திருவாரூர் மாவட்டத்திலேமாத்திரம், உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய அந்தப் பகுதியிலே, 135 கார்டுகள் வழங்க வேண்டுமென்று மன்னார்குடி தாலுகாவிலேமாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அதிலே 122 குடும்ப அட்டைகள் தற்போது வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் பகுதியிலே இருக்கிற இராமநாதபுரம், மதுரை போன்ற இடங்களிலே ஏற்கெனவே குடும்ப அட்டை வைத்திருந்தவர்கள் வேலை தேடி பிற மாவட்டங்களுக்குச் சென்றுவிட்டதால், உரிய நேரத்திலே அவர்கள் திரும்பவும் குடும்ப அட்டைகளைப் புதுப்பித்துக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே பழைய அட்டை வைத்திருப்பவர்கள் அவற்றை புதுப்பித்துக்கொள்ளும் நிலையை உடனடியாக அரசு ஏற்படுத்தித் தருமா என்பதைத் தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கும், பிற மாநிலங்களிலிருந்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரின் பதில் முடிகிறவரைக்கும் கேள்வி நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** பிற மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்கும் குடிபெயர்ந்து வருகிற குடும்பங்களுக்கும் புதிய

[2003 மார்ச் 26

குடும்ப அட்டை வழங்குவது தொடர்பாக ஒரு நிலைப்பாட்டை அரசு எடுத்திருக்கிறது. அவர்கள் முறையாக அணுகுவார்களேயானால், அவர்களுக்கு நிச்சயமாக குடும்ப அட்டைகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுவின் அறிக்கைகள் அளித்தல்.

**திரு. சி. ஞானசேகரன்:** நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதையெல்லாம் அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடுகள்) மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல், திரு. சிவசாமி.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்சினை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒத்திவைப்பாக இருந்தாலும், கவன ஈர்ப்பாக இருந்தாலும், அதைப்பற்றி அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடுகள்) அதைப்பற்றிப் பிறகு கேளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

## 3. அறிக்கை அளித்தல்

### மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல் திரு. சிவசாமி.



2003 மார்ச் 26]

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, 2001-2003ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழு ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட வணிக வரி, விற்பனை வரி மற்றும் ஏனைய வரிகள் மற்றும் பத்திரப் பதிவு குறித்த குழுவின் பதிமூன்றாவது மற்றும் பதினான்காவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. அரசினர் தீர்மானங்கள்

### (அ) பேரவை விதி 184(1)-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 184(1)-ஐத் தளர்த்தக் கோரும் மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இன்று (26-3-2003-இல்) நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவின்படி, "வரவு-செலவுத் திட்டத்தின் பொது விவாதத்திற்கென ஒதுக்கப்பட்ட நாளான இன்று (26-3-2003 அன்று) பேரவை விதி 184(1)-ஐத் தளர்த்தி நிதி அலுவல்கள் எடுத்துக்கொள்வதற்கு முன்பு அரசினர் அலுவல்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

### (ஆ) ஈராக் மீது போர் தொடுத்துள்ள அமெரிக்காவிற்குக் கண்டனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஈராக் மீது போரைத் தொடுத்துள்ள அமெரிக்காவிற்குக் கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம்:

"ஈராக் மீது அமெரிக்கா தற்போது நடத்தி வருகின்ற போருக்குப் பெரும்பான்மையான உலக நாடுகள் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ள நிலையில், ஐக்கிய நாடுகள் சபையின் ஆலோசனையையும் மீறி, அமெரிக்கா ஈராக் நாட்டின் மீது நியாயமற்ற முறையில் போர் தொடுத்துள்ளதற்குத் தமிழக சட்டமன்றப் பேரவை தனது வருத்தத்தையும், வேதனையையும் தெரிவித்துக்கொள்கின்றது. இந்தப் போரினால் பல அப்பாவி மக்கள் கொல்லப்பட்டு வருவதைக் கண்டு, தமிழக சட்டமன்றப் பேரவை பெரிதும் வருந்துகிறது. எந்தவித அடிப்படைக் காரணமும் இல்லாமல், உலக நாடுகளின் கருத்துகளையும் மதிக்காமல், அமெரிக்கா தன்னிச்சையாக ஈராக் நாட்டின் மீது போரைத் திணித்து இருப்பதற்கும், அதற்கு இங்கிலாந்து போன்ற சில நாடுகள் துணை போயிருப்பதற்கும், தமிழக மக்களின் சார்பாக, தமிழக சட்டமன்றப் பேரவை தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

ஈராக் மீது தொடுக்கப்பட்டுள்ள முறையற்ற போரை உடனடியாக நிறுத்தி, உலக நாடுகளிடையே அமைதியும், நீதியும் நிலைநாட்டப்படும் வகையில், அமெரிக்கா மற்றும் அதன் தோழமை நாடுகள்மீது உலக நாடுகளின் நிர்பந்தத்தை ஏற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தமிழக அரசின் வாயிலாக மத்திய அரசை இப்பேரவை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றது. மேலும், இதுகுறித்து ஒருமித்த கருத்துடைய நாடுகளின் ஆதரவைப் பெற்று, ஐக்கிய நாடுகள் சபை வாயிலாக, அமெரிக்கா மற்றும் அதன் தோழமை நாடுகள் மேற்கொண்டுள்ள இந்த நீதிக்குப் புறம்பான போரை உடனடியாக நிறுத்துவதற்கும், அவை ஈராக் நாட்டிலிருந்து தமது படைகளையும், ஆயுதங்களையும் உடனடியாகத் திரும்பப் பெறுவதற்கும், உரிய அவசர நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் எடுக்க வேண்டும் என்றும், இப்பேரவை மத்திய அரசைக் கேட்டுக்கொள்கின்றது."

### (இ) காஷ்மீர் அப்பாவி மக்களைப் படுகொலை செய்த பயங்கரவாத செயலுக்குக் கண்டனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காஷ்மீரத்தில் அப்பாவி மக்களைப் படுகொலை செய்துள்ள பயங்கரவாதத்திற்குக் கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம்:





"*24-3-2003* அன்று காஷ்மீர் மாநிலத்தில் உள்ள புல்வாமா மாவட்டத்தைச் சேர்ந்த நாடிமார்க் என்ற கிராமத்தில், தீவிரவாதிகளால் அப்பாவி இந்து மக்கள் *24* பேர் படுகொலை செய்யப்பட்டதை அறிந்து, தமிழக சட்டமன்றப் பேரவை தனது அதிர்ச்சியையும், வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

காஷ்மீரில் தீவிரவாதிகளால் அப்பாவி மக்கள், *11* பெண்கள், *2* குழந்தைகள் உட்பட மொத்தம் *24* பேர் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். தீவிரவாதமும், பயங்கரவாதமும் எந்த அளவிற்கு மனிதாபிமானமற்ற முறையில் செயல்பட முடியும் என்பதற்கு இந்த நிகழ்ச்சி ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. நெஞ்சைப் பிளக்கும் இந்தக் கொடூரச் செயல் மிகவும் வேதனை அளிக்கிறது.

இப்படிப்பட்ட நிகழ்வுகள், நாம் நாகரிக காலத்தில் வாழ்கிறோமா, இல்லை இன்னும் பழைய கற்காலத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறோமா என்ற சந்தேகத்தைத்தான் நம் அனைவரின் மனங்களிலும் ஏற்படுத்துகின்றன. எந்தப் பிரச்சினைக்கும் பேச்சு வார்த்தை மூலம் ஜனநாயக வழியில் தீர்வு காண முடியும். ஆனால் தீவிரவாதம் ஜனநாயகத்தையோ, பேச்சுவார்த்தையையோ சற்றும் மதிப்பதில்லை. அது பயங்கரவாதத்தையே முற்றிலும் நம்பியிருக்கிறது. மனிதாபிமான உணர்வு உள்ள எவரும் காஷ்மீரில் நடந்துள்ள இந்தக் கோரச் செயலைக் கண்டிக்காமல் இருக்க இயலாது.

அப்பாவி மக்கள்மீது நிகழ்த்தப்பட்ட இந்தக் கொடூரமான படுகொலையைத் தமிழக மக்கள் சார்பாகத் தமிழக சட்டமன்றப் பேரவை வன்மையாகக் கண்டிக்கின்றது. பயங்கரவாதத்தால் உயிர் இழந்த அப்பாவி மக்களின் குடும்பத்தாருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

மேலும், இத்தகைய தீவிரவாத நிகழ்வுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க உரிய அவசர நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ள வேண்டும் என்றும் தமிழக சட்டமன்றப் பேரவை இந்தத் தீர்மானத்தின் வாயிலாக மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது".

முற்பகல் *11-05*

இன்று காலை எனது அறையில் நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி, இத்தீர்மானங்கள் ஏகமனதாக அவையில் நிறைவேற்றப்பட்டு, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்பொருட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

[2003 மார்ச் 26

## 5. 25-3-1989ஆம் நாளைய பேரவை நடவடிக்கைகள்

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம், என்ன? சொல்லுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1989ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, இன்றைக்கு இருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அன்றைக்கு பிரதான எதிர்க்கட்சியாக இருந்த வேளையில், அன்றைய முதலமைச்சர் இந்த மாமன்றத்தில் தன்னுடைய நிதிநிலை அறிக்கையை அளிக்கின்ற நேரத்தில், ஒரு விரும்பத்தகாத நிகழ்ச்சி நடந்ததை இந்த நாடு அறியும். அந்த நிகழ்ச்சியைப் பற்றி நேற்றைக்குக்கூட இந்த மாமன்றத்திலே பல்வேறு கருத்துகள் சொல்லப்பட்டன. அந்தக் கருத்துகளைப் பல பத்திரிகைகள் இன்றைக்கு பல்வேறுவிதமாக விமர்சனம் செய்து இருக்கின்றன. அதனுடைய உண்மையான நிலை என்ன என்பதை மக்கள் அறிந்து கொள்ள விரும்புகிறார்கள் என்கின்ற நிலையில், அந்த உண்மைத் தகவல்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே வெளியிடுவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் நாள் இந்தச் சட்டப் பேரவையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் இந்தச் சட்டமன்றப் பேரவையின் வரலாற்றிலேயே அழிக்க முடியாத ஒரு கரும்புள்ளியாக அமைந்துவிட்டன. தி.மு. கழகத்தின் வரலாற்றில் துடைக்க முடியாத ஒரு களங்கத்தை ஏற்படுத்தி விட்டன. இதைப்பற்றி இன்று இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் அறிய மாட்டார்கள். இன்றைக்கு இந்த மாமன்றத்தில் உறுப்பினர்களாக இருக்கின்ற பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள் அன்றையதினம் இந்தச் சட்டமன்றத்தில் இல்லை. அதைப்போலவே, இன்றைக்கு பத்திரிகைகளைப் படித்து, செய்திகளைத் தெரிந்துகொண்டு, புரிந்துகொள்ளக்கூடிய வயதில் இருக்கின்ற இளைஞர்கள் பலரும் அந்த காலகட்டத்தில் குழந்தைகளாக



2003 மார்ச் 26] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இருந்திருப்பார்கள். இது 14 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற சம்பவம். இதைப்பற்றி நான் மீண்டும் பேசவேண்டாம் என்றுதான் நினைத்தேன். நேற்றுகூட இதைப் பற்றி விவாதம் இந்த அவையில் எழுந்தபோது, நான் மிகவும் விளக்கமாக எதையும் கூறவில்லை. அன்றைக்கு நடைபெற்ற சம்பவங்கள் அனைவருக்கும் தெரிந்தவைதானே என்று நான் இருந்தேன். ஆனால் நேற்றைய தினம் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் நடந்தவைகளை நடக்கவே இல்லை என்றார்கள். நடக்காதவைகளை நடந்ததாக இங்கே தெரிவித்தார்கள். இவையெல்லாம் இந்த அவைக் குறிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளன. நேற்று எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் அன்பழகன் அவர்களும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்களும் இங்கே தெரிவித்த பல உண்மைக்கு மாறான தகவல்கள் அவைக் குறிப்பில் பதிவு செய்யப்பட்டது மட்டுமின்றி, இன்றைக்குப் பல முக்கியமான நாளேடுகளிலும் வெளிவந்துள்ளன. ஆகவே இதற்கெல்லாம் சரியான விளக்கம் கூறாமல் இருந்தால், அவர்கள் சொன்னதுதான் உண்மை என்பது போல் ஒரு மாயை, ஒரு தோற்றம், உண்மைக்கு மாறான தோற்றம் ஏற்பட்டுவிடுமே. அப்படி ஓர் உண்மைக்கு மாறான தோற்றம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகத்தான் இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு நான் பதில் சொல்ல விழைகிறேன். அன்றைய தினம் என்ன நடைபெற்றது என்பதை நான் சுருக்கமாக, விளக்கமாக தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

1989 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் நாள் அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதி நிதியமைச்சராகவும் இருந்தார். அன்றைக்கு அந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை அவர் தாக்கல் செய்ய முன்வந்தார். அந்த நேரத்தில் நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தேன். அப்போது ஓர் உரிமை மீறல் பிரச்சினையை நான் எழுப்ப விரும்பினேன். அதற்கான அனுமதியை அன்றைய சபாநாயகரிடம் நான் கோரினேன். அந்த அனுமதி மறுக்கப்பட்டது. அப்போது முதலமைச்சர் நிதிநிலை அறிக்கையை வாசிக்க முற்பட்டார். அப்போது, பேராசிரியர் அன்பழகன் அவர்கள் தெரிவித்ததுபோல் நான் சொல்லக்கூடாத வார்த்தைகள் எதையும் சொல்லவில்லை. நான் பேசியவை எல்லாம் சபாநாயகரைப் பார்த்துத்தான். சபாநாயகரைப் பார்த்து 'நான் கேட்ட கேள்விக்கு பதில்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2003 மார்ச் 26

சொல்லவேண்டும். அதுவரை முதலமைச்சர் நிதிநிலை அறிக்கையை வாசிக்கக்கூடாது' என்றேன்.

*முற்பகல் 11-10*

அப்போது மைக்குகளை, ஒலி பெருக்கிகளை நிறுத்தச் சொல்லிவிட்டு, இந்த இடத்திலேயே நின்று கொண்டிருந்த அன்றைய முதலமைச்சர், இங்கே எதிர்க்கட்சித் தலைவர் இடத்தில் நின்று கொண்டிருந்த என்னைப் பார்த்து, பேசக்கூடாத வார்த்தைகளை, இங்கே நான் சொல்லமுடியாத வார்த்தைகளை, அசிங்கமான முறையில் பேசினார். அப்போதுகூட நான் அவரைப் பார்த்து, 'ஒரு முதலமைச்சராக இருந்துகொண்டு இப்படிப் பேசுகிறீர்களே' என்றுதான் கேட்டேன். அதற்குள் அருகில் இருந்த அன்றைய அமைச்சர் துரைமுருகன் அவர்களும், அன்றைய அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்களும், இன்னும் பல அன்றைய தி.மு.க. எம்.எல்.ஏ.-க்களும், அமைச்சர்களும் சத்தம் போட ஆரம்பித்தார்கள்.

நேற்று பேசுகின்றபோது, இங்கே நடைபெற்ற சம்பவத்தை நான் குறிப்பிடுகின்றபோது, எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் சொன்னார், 'நான் இங்கேதான் இருந்தேன். நான் நடந்தவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். இத்தனை பேர் இங்கே இருக்கின்றபோது, இப்படியொரு சம்பவம் நிகழ முடியுமா; நான் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு இருந்தேன்; அப்படியொரு சம்பவம் நிகழவேயில்லை' என்று சொன்னார். உண்மையிலே அன்றைக்கு என்ன நடந்தது என்றால், இந்தத் தகராறு ஆரம்பித்த உடனேயே, அன்றைய ஆளுங்கட்சி தி.மு.க. எம்.எல்.ஏ.-க்களும், அமைச்சர்களும் சத்தம் போட ஆரம்பித்தார்கள்.

அன்றையதினம் அவர்கள், அவர்களுடைய தலைவரைப் பார்த்து 'இவள் உங்களை பட்ஜெட் வாசிக்கக் கூடாது என்று சொல்கிறாள்; அதைச் சொல்ல இவள் யார், நீங்கள் போங்கள், நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்' என்று சொல்லி, அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதியை எங்கோ பின்னால் அழைத்துக் கொண்டு போய்விட்டார்கள். அதைப்போலத்தான் அன்றைக்கு பேராசிரியர் அன்பழகன் அவர்களும் எங்கோ பின்னால் போய்விட்டார். அன்றையதினம் ஆளுங்கட்சி உறுப்பினர்களாக இருந்த சட்டமன்ற உறுப்பினர்களும், அன்றைய அமைச்சர்களும், யாரும் அவர்களது இருக்கைகளில் இல்லை. எல்லோரும் எழுந்து வந்துவிட்டார்கள்.



2003 மார்ச் 26] [செல்வி ஜெ ஜெயலலிதா]

அந்த காலகட்டத்தில் பெரிய பெரிய பேப்பர் வெயிட்டுகள் ஒவ்வொரு மேசையிலும் வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரின் இருக்கைக்கு முன்னால் இருக்கின்ற மேசையின்மீது பெரிய பெரிய பேப்பர் வெயிட்டுகள் இருந்தன. அந்த பேப்பர் வெயிட்டுகளை எல்லாம் தூக்கி என்மீது வீசி எறிந்தார்கள். அன்றையதினம் நிதிநிலை அறிக்கையின் பிரதிகளோடு கட்டுக்கட்டாகப் பெரிய பெரிய புத்தகங்கள், பல அறிக்கைகள், இவ்வளவு பெரிய கட்டுகள் இங்கே வைக்கப்பட்டிருந்தன; மிகவும் கனமான புத்தகங்கள். அந்த கட்டுகளையெல்லாம் தூக்கி என்மீது எறிந்தார்கள். எனக்குப் பல இடங்களில் அடிபட்டது. சபாநாயகர் மேசையில் இருக்கின்ற இந்தப் பெரிய மணியை எடுத்துக்கொண்டு, அதை என் தலைமீது ஓங்கி அடிக்க அன்றைய தினம் திரு. வீரபாண்டி ஆறுமுகம் ஓடிவந்தார். அவர் வேஷ்டியை மடித்துக் கட்டிக்கொண்டு இந்த மேசை மீது தாவிக் குதித்து, என்னை அடிக்க வந்தார். அப்போது அது குறி தவறி வேறு எங்கோ விழுந்துவிட்டது. அதன்பிறகு சட்டமன்றச் செயலாளர் உட்கார்ந்திருக்கின்ற நாற்காலியை எடுத்துக்கொண்டு, அதை எடுத்துக் கொண்டு என்னை அடிக்க வந்தார்.

*முற்பகல் 11-15*

அப்போது என்னுடன் இருந்த அன்றைய சட்டமன்ற உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு, என்னுடன் இருந்த திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், திரு. பாப்பா சுந்தரம் போன்றவர்கள் எல்லாம் என்னைச் சுற்றி ஒரு வளையம் அமைத்து, என்னைப் பாதுகாக்க முயற்சி செய்துகொண்டிருந்தார்கள். அப்போது திரு. துரைமுருகன் ஓடிவந்து என்னுடைய தலை முடியைப் பிடித்துப் பிடித்து இழுத்தார். அப்போது எல்லாப் பக்கத்திலேயிருந்தும் ஆயுதங்களைப் போல பேப்பர் வெயிட்டுகளும், கட்டுக்கட்டாகப் புத்தகங்களும் வந்து விழுந்து கொண்டு இருந்ததால், திருநாவுக்கரசு அவர்களும், கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களும் 'அம்மா, இங்கேயிருந்து போய்விடலாம்; இனிமேல் இங்கே இருக்கவேண்டாம்' என்று சொன்னார்கள். நான் எழுந்து போக முற்பட்டேன். ஆனால், போக முடியவில்லை. யாரோ என்னைப் பின்னிருந்து இழுத்துக் கொண்டிருந்தார்கள். என்ன என்று திரும்பிப் பார்த்தால், திரு. துரைமுருகன் என்னுடைய சேலையைப் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தார். அதனால் என்னால் வெளியே செல்ல முடியவில்லை. நான், 'ஐயோ, ஐயோ' என்று கதறினேன். அப்போது

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் ஓடிவந்து, சேலையைப் பிடித்திருந்த துரைமுருகன் கைமீது ஓங்கி அடித்தார். பலமுறை ஓங்கி அடித்த பிறகுதான், அந்தச் சேலையை அவர் விட்டார். அதற்குள் என் சேலை கிழிந்துவிட்டது. இதையெல்லாம் அன்றைக்கு வி.ஐ.பி. பாக்ஸில் அமர்ந்திருந்த அன்றைய முதலமைச்சரின் முதல் மனைவி தயாளு அம்மாள் அவர்களும், அன்றைய முதலமைச்சரின் இரண்டாவது மனைவி ராஜாத்தி அம்மாள் அவர்களும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். இந்தப் பக்கம் இருக்கின்ற வி.ஐ.பி. பாக்ஸில் அன்றைய முதல்வரின் முதல் மனைவி தயாளு அம்மாள் அமர்ந்திருந்தார். அந்தப் பக்கம் இருக்கின்ற வி.ஐ.பி. பாக்ஸில் அன்றைய முதல்வரின் இரண்டாவது மனைவி ராஜாத்தி அம்மாள் உட்கார்ந்து இருந்தார். இத்தனை பேர் பார்த்துக்கொண்டிருக்கும்போது இப்படி ஒரு சம்பவம் இந்த அவையில் நிகழ்ந்தது. அன்றையதினம் என் மானத்தைக் காக்க உதவிய திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் இன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையில் தி.மு.க.வினரோடு அமர்ந்து கொண்டு மௌனம் சாதிப்பதைப் பார்த்தால் வேதனையாக இருக்கிறது. மனசாட்சி என்று ஒன்று திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரனுக்கு இருக்குமானால் நான் பேசுவதெல்லாம் உண்மை என்பதை அவர் அறிவார். இதையெல்லாம் ஏன் இப்போது சொல்கிறேன்; நேற்றையதினம் பேசிய பேராசிரியர் அன்பழகன் அவர்களும், நேற்றையதினம் பேசிய திரு. துரைமுருகன் அவர்களும் இப்படி ஒரு சம்பவம் நிகழவே இல்லை, நான் இந்த அவையில் இருக்கும்போது, இத்தனை பேர் பார்த்துக்கொண்டிருக்கும்போது இப்படி ஓர் அவலம் நடைபெற முடியுமா; இப்படி ஒரு சம்பவம் நடைபெற முடியுமா என்றால், நடந்தது. அன்றையதினம் இருந்த சபாநாயகர் பேசாமல் மௌனம் சாதித்தார். அன்றையதினம் இருந்த சட்டமன்றக் காவலர்கள் இதையெல்லாம் தடுத்து நிறுத்த எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. காரணம் அன்றைய சபாநாயகர், அவர்களுக்கு உத்தரவிடவில்லை, அன்றைக்கு இருந்த Watch and Ward Staff, Marshal சட்டமன்றக் காவலர்கள் எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். அடி தாங்க முடியாமல் என் மீது விழுந்த தாக்குதல்களை, விழுந்த அடிகளைத் தாங்க முடியாமல் வெளியேற வேண்டும் என்று நினைத்தபோதுகூட என் சேலையைப் பிடித்திழுத்துக் கிழிக்கின்ற ஓர் அவலமான நிலைமை அன்றைக்கு ஏற்பட்டது. அப்போது நான் சென்றுகொண்டிருந்தபோது அந்த வழியில் இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி





அமர்ந்திருக்கிற இடத்தில் அன்றைய சட்டமன்ற உறுப்பினர் ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்கள் கண்ணீருடன் நின்று கொண்டிருந்தார். 'அம்மா தாயே இது என்னம்மா கொடுமை, இது ஆண்டவனுக்கே அடுக்காது' என்று சொன்னார். அதன்பிறகு நான் வெளியே சென்றேன். தலைவிரி கோலமாக, கிழிந்த ஆடையுடன் நான் இந்தச் சட்டமன்றத்தைவிட்டு வெளியேறியபோது அங்கே நின்றுகொண்டிருந்த பத்திரிகைகளின் புகைப்படக்காரர்கள் இவற்றைப் படம் பிடித்தார்கள். அன்றையதினம் நான் எந்தக் கோலத்தில் வெளியே சென்றேனோ அது படம் பிடிக்கப்பட்டு எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவந்தது. ஆகவே இவையெல்லாம் ஏற்கெனவே வரலாற்றில் இடம் பெற்றுவிட்ட சம்பவங்கள். நான் சொல்வது அத்தனையும் உண்மை. நேற்று பேராசிரியர் அன்பழகன் சொன்னதுபோல் அனுதாபம் தேட வேண்டிய நிலைமை, அனுதாபம் தேட வேண்டிய அவசியம் இப்போது எனக்கு இல்லை. இவை எல்லாம் 14 ஆண்டுகளுக்கு முன்னால் நடைபெற்றன. அவற்றை இப்போது சொல்லி புதிதாக நான் அனுதாபம் தேட வேண்டிய அவசியமே இல்லை என்று சொல்லி, நேற்று பேராசிரியர் அன்பழகன் அவர்களும், திரு. துரைமுருகன் அவர்களும் உண்மைக்கு மாறாகத் தெரிவித்த கருத்துகள் அவைக் குறிப்பிலும் பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ள காரணத்தால்தான் இந்த விளக்கத்தை இப்போது நான் கூறுகிறேன் என்று சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து 2003-2004 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம். திரு. டி. மணி.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம், வேண்டாம். விவாதத்தை வளர்க்க வேண்டாம். விவாதத்திற்கு இடமில்லை. (குறுக்கீடுகள்) திரு. டி. மணி. (குறுக்கீடுகள்) திரு. டி. மணி, பேசுங்கள். (குறுக்கீடுகள்) இதை நான் விவாதமாக ஆக்க விரும்பவில்லை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்டவர்கள். அவர்களுக்குள்ள மனப் புண்ணை அவர்கள் வெளியிட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நேற்றையதினம் நீங்கள் இதுபற்றிய கருத்தைச் சொன்னீர்கள். அது பத்திரிகைகளில்

[2003 மார்ச் 26

வந்திருக்கிறது. இனிமேல் இதை விவாதமாக ஆக்க விரும்பவில்லை. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் வணிக வரித் துறை விற்பனை வரி மூலமாக சில ஆயிரம் கோடி ரூபாய் நம்முடைய அரசுக்கு வர வேண்டிய...*(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சந்தானம் கேட்டதற்கு விளக்கம் சொன்னார்கள். அவ்வளவுதான். திரு. மணி, பேசுங்கள்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று கோஷமிட்டனர்)*

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் வணிக வரி, விற்பனை வரி மூலமாக சில ஆயிரம் கோடி ரூபாய் அரசுக்கு வரவேண்டிய நேரத்தில் அதை நாம் வசூல் செய்வதன் மூலமாக நம்முடைய பற்றாக்குறையை... *(குறுக்கீடுகள்)*

முற்பகல் *11-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, நீங்கள் பேசலாம். *(குறுக்கீடு)* வேண்டாம்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் வணிக வரித் துறை விற்பனை வரி மூலமாக சில ஆயிரம் கோடி ரூபாய் நம்முடைய அரசுக்கு வாவேண்டிய...*(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* மணி, நீங்கள் பேசுங்கள்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் வணிக வரித் துறை விற்பனை வரி மூலமாக சில ஆயிரம் கோடி ரூபாய் அரசுக்கு வரவேண்டிய ஒரு நேரத்தில், அதை நாம் வசூல் செய்வதன் மூலமாக நம்முடைய பற்றாக்குறையை...*(கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள். மணி பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. மணி அவர்கள், பேசலாம்.



2003 மார்ச் 26]

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் வணிக வரித் துறை விற்பனை வரி மூலமாக சில ஆயிரம் கோடி ரூபாய்கள், அரசுக்கு வரவேண்டிய ஒரு காலகட்டத்தில், நம்முடைய மதிப்பீட்டுக் குழுவானது, கடந்த சில மாதங்களாக பல்வேறு மாவட்டங்களுடைய தலைநகரங்களிலே சென்று, இந்த விவரங்களையெல்லாம் சேகரிக்கின்றபோது, ஏற்கெனவே விற்பனை வரி மூலமாக சில ஆயிரம் கோடி ரூபாய் வரவேண்டியிருக்கிறது என்பதை...*(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள், மணி, பேசுங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் இங்கே குறிப்பிட்டதன் அடிப்படையில், நம்முடைய வரி பாக்கியை மட்டும் நாம் வசூலித்தோமேயானால், இந்த மாநிலத்தினுடைய பல்வேறு தேவைகளை..*(கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* மணி, நீங்கள் பேசலாம். *(கூச்சல்-குழப்பம்)* குழப்பம் விளைவிப்பவர்களை வெளியேற்ற வேண்டியிருக்கும்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உள்ள இந்த நிலைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்காமல், நான் சொல்வது, என்ன என்பது தெரிவதற்கு வாய்ப்பில்லை. *(கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருக்கையிலே உட்காருங்கள். மணி பேசி முடிக்கட்டும். மணி, பேசுங்கள். *(கூச்சல் - குழப்பம்)* ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக அமருங்கள். *(குறுக்கீடுகள்)* ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அமருங்கள். மணி, பேசுங்கள்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொல்வது என்ன என்பது நம்முடைய பத்திரிகை நிருபர்களுக்கும், அமைச்சர்களுக்கும்கூடத் தெரிவதற்கான வாய்ப்பு இல்லை. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். *(கூச்சல்-குழப்பம்)* தயவுசெய்து அமருங்கள். *(குறுக்கீடுகள்)* தயவுசெய்து அமருங்கள் *(கூச்சல்-குழப்பம்)* தயவுசெய்து அமருங்கள். மணி, நீங்கள் பேசுங்கள்.

[2003 மார்ச் 26

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய...(கூச்சல்-குழப்பம்)

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்துநின்று கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், சபாநாயகர் அனுமதிக்காமல் பேசுவது முறையல்ல. தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவு செய்து உட்காருங்கள். அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்காதீர்கள். தயவுசெய்து அமருங்கள். (கூச்சல்-குழப்பம்) தயவுசெய்து அமருங்கள். (கூச்சல்-குழப்பம்) அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்காதீர்கள். குந்தகம் விளைவித்தால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை வரும். தயவுசெய்து அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்காதீர்கள். நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு என்னை ஆட்படுத்தாதீர்கள். மணி, நீங்கள் பேசுங்கள்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய மாநிலத்தில் நிதிப் பற்றாக்குறை இருக்கின்ற இந்த நேரத்தில்... (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய உறுப்பினர்களைச் சட்டமன்றக் காவலர்கள் அவையைவிட்டு வெளியேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) முதலமைச்சரைப் பார்த்து அப்படிப் பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) திரு. மணி அவர்களே, நீங்கள் பேசுங்கள்.

முற்பகல் *11-25*

*(அவைக் காவலர்கள் கோஷமிட்டுக் கொண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களை அவையிலிருந்து வெளியேற்றினார்கள்.)*

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் நிதிப் பற்றாக்குறை இருக்கின்ற நேரத்தில் வணிக வரி மூலமாகவும், விற்பனை வரி மூலமாகவும், மாநிலத்தில் ஏறத்தாழ 6 ஆயிரம் கோடி, 7 ஆயிரம் கோடி ரூபாய் வரி பாக்கி இருப்பதாக பத்திரிகைகள் மூலமாக அறிகிறேன். (குறுக்கீடுகள்)

225514



2003 மார்ச் 26] [திரு. டி. மணி]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசி முடியுங்கள். நீங்கள் பேசுவது அவைக்குறிப்பில் பதிவாகிக்கொண்டு இருக்கிறது. நீங்கள் பேசுங்கள்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...(கூச்சல்- குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக்கு வெளியேயிருந்து யாரும் கோஷம் போடக்கூடாது. (குறுக்கீடுகள்) மணி, நீங்கள் பேசுங்கள்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய மாநிலத்தில் நிதி...

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. ஜி. பழனிசாமி:** தலைவர் அவர்களே....

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தலைவர் அவர்களே.....

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்களே, என்ன? சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளக்கம் அளித்தார்கள். நான் அதற்குள்ளே செல்ல விரும்பவில்லை. ஆனால் பாதிக்கப்பட்டவர்கள் என்ற முறையில், யார்மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருக்கிறதோ, அவர்கள் தங்களுடைய நிலையை எடுத்துச் சொல்வதற்கு ஒரு சந்தர்ப்பம் வேண்டுமென்று கேட்கின்ற நேரத்தில் நீங்கள் அவர்களை அனுமதிப்பதுதான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்களே, பாதிக்கப்பட்டவர் முதலமைச்சர் அவர்கள்தான். அவர்தான் பாதிக்கப்பட்டவர்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் அதற்குள்ளே போகவில்லை. நான் அதைப்பற்றிச் சொல்லவில்லை. அதைத் தப்பில்லையென்று..

[2003 மார்ச் 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்களே, நேற்றையதினம் நீங்கள் அவைக்கு வராத காரணத்தால் இதுபற்றிப் பேசப்பட்ட விவாதங்கள் உங்களுக்குத் தெரிந்திருப்பதற்கு நியாயம் இல்லை. நேற்றையதினம் இதுபற்றிப் பேராசிரியர் சொன்னதற்குக்கூட அனுமதித்தேன். துரைமுருகன் பேசியதற்குக்கூட அனுமதித்தேன். (குறுக்கீடு) உட்காருங்கள், சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், சொல்லிவிடுகிறேன். நேற்றையதினம் எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் அவர்கள் உங்களுடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களையே குறை சொல்லிப் பேசினார்கள். அன்றைக்கு நடைபெற்ற நிகழ்ச்சியில் உங்களுடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களையே குறை சொல்லிக் கிண்டல் பண்ணிப் பேசினார். அன்றைக்குப் பாதிக்கப்பட்டவர்கள்; பெருந் தலைவர் மூப்பனார் உட்பட அத்தனை பேரும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே தயவுசெய்து நீங்கள் நியாயம் கற்பிப்பதற்கு முற்படாதீர்கள். இங்கு அமர்ந்திருக்கின்ற முதலமைச்சர் அவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள்; மனப்புண்ணை ஏற்படுத்தி இருக்கிறது. அந்த வேதனையை வெளிப்படுத்துவதற்கு அவர்களுக்கு முழு உரிமை இருக்கிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் அதற்குள் போகவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நிச்சயமாக அதற்குள் செல்லவில்லை. அவர்கள்மீது நேருக்குநேர் குற்றச்சாட்டு சுமத்தியிருக்கிறார்கள். குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட நேரத்தில் வாய்ப்பு தர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே—முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும்—அனைத்துக் கட்சிக் கூட்டமே நடைபெற்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே கலந்து கொண்ட, உங்களுடைய கட்சியைச் சேர்ந்த சிதம்பரம் கலந்து கொண்ட கூட்டமே நடைபெற்றது. (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் பேசுகிறேன். அவர்களுடைய நிலையை, விளக்கம் சொல்ல அவர்களுக்கு அனுமதி அளிப்பதுதான் முறை..



2003 மார்ச் 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே விளக்கிவிட்டார்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் கூறுவதற்கு ஒரு விளக்கம். நேற்று திரு. துரைமுருகன் அவர்களும், திரு. பேராசிரியர் அவர்களும் நடந்த நிகழ்வுகளை அவர்களுக்கு உரிய முறையிலே சொன்னார்கள். அதற்கு புரட்சித் தலைவி அவர்கள் இன்று விளக்கம் அளித்து இருக்கிறார்கள். நேற்று புரட்சித் தலைவி அவர்கள் விளக்கம் சொல்லவில்லை. இன்றுதான் விளக்கம் சொல்லியிருக்கிறார்.

முற்பகல் *11-30*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவர்கள் விளக்கம் சொன்னதற்குத்தான், இவர்கள் விளக்கம் கேட்கிறார்கள்.

(அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் லாபியில் நின்றுகொண்டு கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை வளாகத்தில் கோஷமிடுபவர்களை வெளியேற்ற வேண்டுமென்று காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** எனவே அவர்களை அனுமதிப்பதுதான் முறையே தவிர, தாங்கள் அனுமதிக்கமாட்டேன் என்று சொல்வது சரியல்ல. என்னைப் பொறுத்தவரையில், எங்களைப் பொறுத்தவரையில், காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில், எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரையில் நாங்கள் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, அவர்களுக்கு பதில் அளிப்பதற்குச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்பதாகும். மீண்டும் இந்தப் பிரச்சினையை இன்று எழுப்பியிருக்க வேண்டாம். எழுப்பப்பட்டுவிட்டது. எழுப்பப்பட்ட நிலையிலே, மீண்டும் பேச அவர்களை அனுமதித்திருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மீண்டும் பிரச்சினை எழுப்பப்படவில்லை. திரு. சந்தானம் கேட்டதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம்தான் சொன்னார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** திரு. சந்தானம் நேற்றே அவரும் வந்திருந்தார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று முழுமையான விளக்கத்தை அவர்கள் சொல்லவில்லை. இன்றைக்கு அந்த விளக்கத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அவ்வளவுதான். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு தெளிவான விளக்கத்தைச் சொன்னார்கள். அந்தச் சம்பவத்தினுள்ளே போவதற்கு நான் விரும்பவில்லை. அந்தச் சம்பவத்தைப்பற்றி ஒன்றும் எங்களுக்குத் தெரியாது. சம்பவ நேரத்திலே நாங்கள் இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி., தயவுசெய்து உட்காருங்கள். அவர், திரு. மணி, பேசுகிறார். (குறுக்கீடுகள்) அவையினுடைய தாழ்வாரத்திலே நின்றுகொண்டு கோஷம் எழுப்பக்கூடியவர்களை அவைக் காவலர்கள் வெளியேற்ற வேண்டுமென்று உத்தரவிடுகிறேன். திரு. மணி, பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைச் சொன்னார்கள். அந்த விளக்கத்தைப் பற்றி நான் பேசவில்லை. அதை விரும்பவும் இல்லை. அந்தச் சம்பவம் நடந்த நேரத்தில் நாங்கள் இல்லை. எங்களுக்குத் தெரியாது. இருந்தாலும்கூட, எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கக்கூடிய பிரதான எதிர்க்கட்சியினுடைய தலைவர் அவர்களும், அந்தக் கட்சி உறுப்பினர்களும், அதற்கு விளக்கம் சொல்வதற்கு அவகாசம் கேட்கிறார்கள். அதைக் கட்டாயம் நீங்கள் கொடுக்க வேண்டும். அவையினுடைய அமைதியைக் கருதி, இந்த அவை அமைதியாக, நல்லமுறையில் நடைபெறுவதற்காக எதிர்க்கட்சி வரிசையிலே சொல்லக்கூடிய......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, நேற்றே அவர்கள் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லிவிட்டார்கள். நேற்றைக்குச் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லிவிட்டு—இன்றைக்குப் பத்திரிகையிலே வந்திருக்கிறது—ஆகவே அதைப்பற்றி ஒரு விளக்கம் சொல்லவேண்டுமென்று திரு. சந்தானம் அவர்கள் கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அன்றைக்கு நடைபெற்ற சம்பவங்களினுடைய உண்மை நிலைமைகள் முழுவதையும் இன்றைக்கு விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள். அதைத் தாங்கிக்கொள்ள முடியாமல் அவர்கள் போனால், அதற்கு நான் என்ன செய்வது?



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முதலில் விளக்கம் சொன்னது பற்றி நான் குறை சொல்லவில்லை. அதற்கு விளக்கம் சொல்ல அவர்களுக்கும் அனுமதி தரவேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தரப்பிலே விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். நடந்தவைகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதேநேரத்திலே, அதற்கு உண்மை நிலைமையினை அவர்கள் எடுத்துச் சொல்வதற்கு அவகாசம் கேட்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உண்மை நிலையினை முதலமைச்சர் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) உண்மை நிலையினை முதலமைச்சர் சொல்லிவிட்டார்கள். அதை அவர்கள் மூடி மறைப்பதற்கும், முலாம் பூசுவதற்கும் சந்தர்ப்பம் அளிப்பதற்கு நிச்சயமாக முடியாது. (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** அவையினுடைய அமைதியைக் கருதி, மீண்டும் அவர்கள் விளக்கம் அளிப்பதற்கு அனுமதியளிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, உட்காருங்கள்; திரு. டி. மணி, நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்கு, அவர்களுக்கு ஏதேனும் விளக்கம் கொடுப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்திருக்கலாம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றே பேச வேண்டியவற்றையெல்லாம் பேசிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) நேற்றே பேசிவிட்டார்கள். (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அவர்கள் விளக்கம் கொடுத்ததற்குப்பிறகு, அதற்கு மேலே நடவடிக்கை எடுப்பதற்கு உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்குப் பேச அனுமதித்தாலும், நேற்று பேசியதைத்தான் பேசப் போகிறார்கள் (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-லே சம்பவம் நடந்தபோது, நான் இருந்தவன்; சட்டமன்றத்திலே இருந்தவன். எஸ்.ஆர்.பி.யும் இருந்தார்; மற்றவர்களும் இருந்தார்கள். அதற்குப் பின்னால், மாண்புமிகு முதலமைச்சர் சொல்வதுபோன்று, தமிழ்நாட்டு மக்கள் யார் யாருக்கு எப்படித் தீர்ப்பு வழங்க வேண்டுமோ அப்படி வழங்கியிருக்கிறார்கள். அந்தச் சம்பவங்கள் காலங்கடந்து முடிந்த பின்னால், 14 ஆண்டுகளுக்குப் பிறகு, இன்றைக்கு நினைவுபடுத்தி வேதனைப்படுவதைவிட, இந்தச் சட்டசபை, தமிழ்நாட்டுப் பிரச்சினையில் கவனம் செலுத்துவது மிக முக்கியம். அதனால் எந்தப் பயனும் வரப்போவதில்லை. தமிழ்நாட்டு மக்களுக்கு வேண்டுமானால், செய்திகள் போய்க்கொண்டே இருக்கலாம். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அன்றையதினம் நானும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தவன்; உரிமைப் பிரச்சினையை நானும் கொடுத்தவன். திரு. அழகர்சாமியும், நானும் சேர்ந்து முதலமைச்சருக்குக் கொடுத்தோம். அந்தச் சம்பவங்கள் சட்டமன்றத்தினுடைய இறையாண்மையைக் கெடுக்கக்கூடிய சம்பவங்கள். தொடர்ந்து இந்தமாதிரி சம்பவங்கள் சட்டசபையில் நடக்கக்கூடாது என்பது என்னுடைய விருப்பம். இன்றும் அதுதான் விருப்பம். ஒன்று, ஜனநாயகபூர்வமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இந்தச் சட்டசபையிலே முழுமையாக, இதர அலுவல்களைக்கூட ஒத்திவைத்து விவாதிப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகையால், அவர்களுக்கும், எதிர்க்கட்சியைச் சார்ந்திருக்கிறவர்களுக்கும், அவர்கள் சொல்லக்கூடிய கருத்துகளுக்கு மறுப்பு அளிப்பதற்கு, என்ன சொல்கிறார்கள் என்கிற வாய்ப்பை, ஜனநாயகபூர்வமாக அளிப்பது என்பதுதான் ஒரு நீதியாக இருக்கும். அந்தவகையிலேதான், இதை உங்களிடத்திலே நாங்கள் கேட்டுக்கொள்கிறோமே தவிர, முதலமைச்சர் சொன்ன கருத்துகளுக்கு மாறுபாடு எதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று பேசிய பேராசிரியர் அவர்களும், துரைமுருகன் அவர்களும், இதில் சொல்ல வேண்டியவற்றையெல்லாம் சொல்லிவிட்டார்கள். அது இன்றைக்குப் பத்திரிகையிலே வந்திருக்கிறது. அவர்கள் சொன்னதெல்லாம் உண்மைக்கு மாறுபட்டது என்கிற காரணத்தால், முதலமைச்சர் அவர்கள், உண்மை நிலையினை விளக்கிச் சொல்வதற்காக இன்றைக்கு



[பேரவைத் தலைவர்]

அதை விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள். மறுபடியும், மறுபடியும், இதை வளர்த்துக் கொண்டே போவது என்பது சரிப்பட்டு வராது.

## 6. வரவு-செலவுத் திட்டம், 2003-2004,
### பொது விவாதம்— தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2003-2004* ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம், திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய மாநிலத்தில், நிதிநிலைமை நெருக்கடியாக இருக்கின்ற இந்த நேரத்தில், வணிக வரியின் மூலமாகவும், விற்பனை வரியின் மூலமாகவும், சில ஆயிரம் கோடி ரூபாய்கள் அரசுக்கு வரவேண்டியிருப்பதாக, பத்திரிகைகள் மூலமாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. எனவே அரசிடம் என்னுடைய வேண்டுகோளாக, வைத்துக்கொள்வது, வரவேண்டிய நிதியை, வரியை, நாம் வசூலிப்பதற்கு பெரிய முயற்சியை மேற்கொள்வோமானால், இந்த நெருக்கடி ஓரளவிற்குத் தீருவதற்கான வருவாய் நம்முடைய கையிலே வரும்.

*முற்பகல் 11-35*

குறிப்பாக நம்முடைய மதிப்பீட்டுக் குழுவின் சார்பிலே பல மாவட்டங்களிலே நாங்கள் சென்று—நம்முடைய மதிப்பீட்டுக் குழுவினுடைய தலைவர் அவர்கள் முயற்சியின் காரணமாகச் சென்று-பார்க்கின்றபோது, விற்பனை வரி மூலமாக அரசுக்கு வர வேண்டிய பல நூறு கோடி ரூபாய் பல்வேறு இடங்களிலே தேங்கி இருக்கின்ற நிலையைப் பார்க்க முடிந்தது. இதைச் சரிவர வசூலிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால், இந்த அதிகாரிகளே நமக்கு பல்வேறு தவறான தகவல்களை எல்லாம் தந்து இருக்கிறார்கள் என்பது நம்முடைய மதிப்பீட்டுக் குழுவினுடைய தலைவர் அவர்களுக்கு மிகத் தெளிவாகத் தெரியும். பல பேரை, அவர்கள் அன்றைய கூட்டங்களிலே சுட்டிக்காட்டினார்கள். அதிலே இன்னொன்று, நகை வியாபாரிகள் 50 பவுனுக்கு வியாபாரம் நடத்தினால் அவர்கள் 5 கிராம் விற்றதாக ரிக்கார்டு பண்ணுகிற ஒரு நிலை தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் இருக்கின்றது. எனவே, இதைக் கருத்திலேகொண்டு நம்முடைய வருவாயைப் பெருக்கிக்

கொள்வதற்குரிய நடவடிக்கை, இந்த வரி பாக்கி வைத்திருக்கின்றவர்களும் ஒழுங்காக வரியைக் கட்டுவதற்கான நடவடிக்கை ஆகியவற்றை மேற்கொள்வதன் மூலமாக நம்முடைய நிதி நெருக்கடிக்கு சில ஆயிரம் கோடி ரூபாய் அரசினுடைய கைக்கு வரும் என்று நான் கருதுகிறேன். அடுத்து, (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் விளக்கம் சொல்கிறார்.

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்து போன்று பல்வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் மற்றும் பத்திரிகைகள் வணிக வரி நிலுவையைப்பற்றி பல்வேறு வகையான விமர்சனங்கள் செய்தும் வருகின்றன. வணிக வரி நிலுவை பற்றிய உண்மைகள் என்ன என்பதை அவைக்குத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டுள்ளேன். வணிகவரித் துறையில் வரி நிலுவை என்பது 1952 ஆம் ஆண்டிலிருந்தே இருந்து வருகின்றது.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய கடந்த ஆட்சியின்போது, 1991-96 ஆம் ஆண்டு நிலுவை 2,184 கோடியாக இருந்தது. மீண்டும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் 2001 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பு ஏற்கின்றபோது நிலுவை வரி 7,244 கோடி ரூபாயாக உயர்ந்து இருந்தது. கடந்த 1996-2001-ல் தி.மு.க. ஆட்சியின்போது வரி நிலுவை சுமார் 5,060 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. இதற்கு முக்கியக் காரணம், கடந்த தி.மு.க. ஆட்சியிலே தன்னிடம் வணிக வரித் துறை பொறுப்பை வைத்திருந்த முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி அவர்களே ஆவார். வரி விதிப்புகளை முடிப்பதில் தவறான அணுகுமுறையினைக் கையாண்டதாலும், வரி வசூலில் தீவிர கவனம் செலுத்தாததாலும், வரி நிலுவை அதிகரித்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் 30-6-2002 வரை இருக்கின்ற மொத்த வரி நிலுவை 8,670 கோடி ரூபாயாகும். இதிலே அரசு தடையாணை, ஆணையர் தடையாணை 70 கோடி ரூபாய்; அதேபோல் உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம், சிறப்புத் தீர்ப்பாயம் போன்றவை மூலம் 1,195 கோடி ரூபாய்; அதேபோல் நலிவுற்ற தொழில் மற்றும் நிதி புனர் அமைப்பு வாரியம் (B.I.F.R.) செலுத்த வேண்டிய தொகை 384 கோடி ரூபாய்;



காலம் தாழ்த்தி வரி செலுத்தும் தொகை இனங்களில் உள்ள தொகை அதாவது டெஃப்ரல் 1,780 கோடி ரூபாய்; மத்திய வரி வருவாய்/ வரி மீட்பு மற்றும் பிற அலுவலகங்களில் உள்ள தொகை 2,433 கோடி ரூபாய்; நீதிபதிமுன் வழக்குகள் 338 கோடி ரூபாய்; வரித் தள்ளுபடி 211 கோடி ரூபாய்; நீக்கப்பட வேண்டிய வரி பாக்கி இனங்கள் உள்ள தொகை, 1,838 கோடி ரூபாய்; இதுபோன்ற நிலுவைகளில் இருக்கின்றதேயொழிய, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல, நிலுவைக் கடன் என்பது, இன்று ஏதோ வரி வசூல் செய்யாமல் இருப்பதுபோல் அல்ல என்பதையும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பின்னர் இன்றையதினம் முறையாக வரி வசூல் செய்ததால்தான் இன்று நமது தமிழகத்தின் வரி வசூல் இந்தியத் துணைக் கண்டத்திலேயே இரண்டாவது மாநிலம் என்ற அளவிலும், இன்று 14.86 சதவீதம் வரி வசூலை அதிகப்படுத்தி இருக்கிறோம் என்பதையும், முறையாகத்தான் வரி வசூல் செய்து வசூல் வந்திருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே மாமன்றத்திற்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நேரத்தை மாண்புமிகு அமைச்சர் விளக்கத்தைச் சொல்வதற்காக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றியைக் கூறுகின்றேன். எனவே என்னுடைய நேரத்தை அதிலே எடுத்துக்கொள்ளக்கூடாது என்ற என்னுடைய வேண்டுகோளை மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் முன்னாலே வைக்கின்றேன். எனவே... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, எனக்கு மணியும் (நேரம்) முக்கியம்; மணியும் முக்கியம்! (சிரிப்பு) ஆகையினால் இன்னும் இரண்டு மணித் துளிகள் எடுத்துக்கொள்ளுங்கள்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மாவட்டத்தினுடைய பல நிலைகளை நான் விளக்க வேண்டிய பல்வேறு கோரிக்கைகள் இருக்கின்றன.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுடைய மாவட்டத்திற்கு வருகை தந்து பல்வேறு திட்டங்களையெல்லாம் அறிவித்திருக்கிறார்கள். என்னுடைய நன்றியை மாவட்ட மக்களின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்திலே அங்கே இருக்கிற

மருத்துவக் கல்லூரிக்கு அவர்கள் 5 கோடி ரூபாய் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த 5 கோடி ரூபாயை வைத்துக்கொண்டு அடுத்த கல்வி ஆண்டிலேயே அந்தக் கல்லூரியை நாம் ஆரம்பிக்க முடியாது. எனவே 10 கோடி ரூபாய் இதற்குத் தருவதன் மூலமாகத்தான் அந்தக் கல்லூரியை அடுத்த கல்வி ஆண்டிலாவது ஆரம்பிப்பதற்கான வாய்ப்பு ஏற்படும். அந்த வகையிலே உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

அடுத்து மழைநீர் பாதுகாப்பிற்காக நம்முடைய மாநில அரசாங்கம் மிகப் பெரிய விளம்பரங்களை எல்லாம் செய்து, ஒரு நல்ல காரியத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். அதேநேரத்திலே நம்முடைய ஆறுகளிலே இப்போது வருகிற தண்ணீர் பூராவும் வீணாகின்ற சூழ்நிலை இருக்கிறது. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலே தாமிரபரணி ஆறு, வள்ளியாறு, பழையாறு என மூன்று ஆறுகள் உள்ளன. இவற்றிலே தடுப்பணைகள் கட்டுவதன் மூலமாக அந்தத் தண்ணீரைச் சேமித்துக்கொள்வதற்கும், நிலத்தடி நீரைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் வாய்ப்பாக அமையும். அந்த வகையிலே குழித்துறை நகராட்சி எல்லைக்குள்ளே வருகிறபோது ஓர் உடைந்துபோன சப்பாத்து இருக்கிறது. அங்கே ஒரு தடுப்பணை கட்டுவதன் மூலமாகவும், அதுபோன்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, ஒரு மணித்துளியில் உரையை முடியுங்கள். கடைசி வாக்கியத்தைச் சொல்லி முடியுங்கள்.

**திரு. டி. மணி:** நான் ஏற்கெனவே தங்களுடைய அறைக்கு வந்து எனக்கு 7 நிமிடங்கள் வேண்டுமென்று கேட்டிருந்தேன். தயவுசெய்து எனக்குப் பேச நேரம் தர வேண்டும். மாவட்டம் குறித்து சில விவரங்களைச் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே 6 நிமிடங்கள் பேசி விட்டீர்கள். நீங்கள் கேட்டதைத்தான் சொல்கிறேன்.

**திரு. டி. மணி:** நம்முடைய கைத்தறியைப் பொறுத்தவரையில் கோவை, மதுரை மாவட்டங்களில் கைத்தறித் தொழிலாளர்கள், விசைத்தறித் தொழிலாளர்கள் வரியின் காரணமாக வேலைநிறுத்தம்



செய்து வருகிறார்கள். மத்திய அரசாங்கத்தினுடைய கலால் வரி என்பது இன்று அவர்கள் மேல் சுமத்தப்படுகிறது. அதைச் சுமத்தக் கூடாது என்று ஒரு பரிந்துரையை மாநில அரசு, மத்திய அரசுக்குச் சொல்ல வேண்டும்.

அடுத்து நம்முடைய அரசுக்குச் சொந்தமான சர்க்கரை ஆலை, நூற்பாலைகளினுடைய பங்குகளை இன்று தனியாருக்கு விற்பதற்கான சில முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகச் சொல்கிறார்கள். அது தடுக்கப்பட வேண்டும். அதேபோன்று தூத்துக்குடி மாவட்டத்திலே, இன்று மீனவ மக்கள்மீது, ஏதோ ஒரு தகராறு ஏற்பட்டு பல நாட்களாக மீன் பிடிக்கச் செல்லவில்லை. பேசி முடித்து நல்ல தீர்வை அதிலே ஏற்படுத்த வேண்டும்.

குழித்துறை நீதிமன்றத்திலே-சப்-கோர்ட்டிலே— இருக்கின்ற நீதிபதி தவறு செய்ததன் காரணமாக ஒரு மாத காலமாக வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களைப் புறக்கணித்து இருக்கிறார்கள். ஒரு சத்தியாகிரகப் போராட்டத்தை, உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அந்த நீதிபதியை இடம் மாற்றினாலே பிரச்சினை தீர்ந்து விடும். ஆக அந்தவகையிலே நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து போக்குவரத்துத் துறை. இதனை தனியார்மயம் ஆக்கக்கூடாது என்ற ஒரு காரணத்திற்காக நேற்றையதினம் அந்தத் தொழிலாளர்கள் ஒரு பேரணியை நடத்தி, அரசுக்கு ஒரு வேண்டுகோளையும் வைத்து இருக்கிறார்கள். ஆக அதனுடைய அடிப்படையிலே, அரசுத் துறையை தனியாருக்குக் கொடுக்கக்கூடாது என்ற கோரிக்கையை வைத்து இருக்கிறார்கள். அரசு, அதைக் கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

கன்னியாகுமரி மாவட்டத்தில், முந்திரி ஆலைகளிலே வேலை செய்கின்ற 50,000 தொழிலாளர்கள், தங்களுடைய சம்பள பாக்கிக்காக, புதிய சம்பள விகிதத்திற்காக ஒரு வேலை நிறுத்தப் போராட்டத்திலே ஈடுபட்டு இருக்கிறார்கள். எனவே நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அந்தத் துறையின் மூலமாக அந்தப் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள். (குறுக்கீடு) அப்புறம் பேசலாம். டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெறுகிற பொது விவாதத்திலே கலந்துகொண்டு மாண்புமிக்க இந்த மாமன்றத்திலே பேசுகின்ற அரிய வாய்ப்பை உருவாக்கித் தந்த நாடு போற்றும் நல்லவர், துன்பங்கள், துயரங்கள், இன்னல்கள், கஷ்டங்கள், இடர்ப்பாடுகள் என எதிர்வந்த அத்துணை சோதனைகளையும் தாங்கி சொல்லொணாத் துயரங்களையும் தாங்கி, இன்றைக்கு அந்தச் சோதனைகளை சாதனைகளாக மாற்றி 'நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வையும் நிலத்திலே யாருக்கும் அஞ்சாத நெஞ்சம்' என செல்கின்ற திசையெல்லாம் வெற்றி, வெற்றி, வெற்றி என மக்கள் ஆதரவு என்கின்ற வெற்றியைக் குவித்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, இந்த அரிய வாய்ப்பைக் கொடுத்ததற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

மாநிலங்காவலன் என்பான் மண்ணுயிர்க்குங் கால்
தன்னால் தன் பரிசனத்தால் ஊனமிகு பகைதிறத்தால்
உயிர்தம்மால் கள்வரால் ஆனபயம்
ஐந்தும் தீர்ப்பான் அவனல்லோ மன்னன்!
என்று இலக்கியத்திலே நாலடியார் சொல்லி இருக்கிறார்.

*முற்பகல் 11-45*

இது நாட்டை ஆளுகின்ற நல்லவர் யார் என்பதற்கு நாலடியார் தந்துள்ள இலக்கணம். 5 பயங்களை அவர் குறிப்பிடுகிறார். அந்த 5 பயங்களை யார் தீர்க்கிறார்களோ, அந்த 5 பயங்களை யார் இந்த நாட்டிலே போக்குகிறார்களோ, அவர்தான் ஒரு மாநிலத்தினுடைய முதல்வராக இருக்கக்கூடிய தகுதி படைத்தவர் என்பதை நாலடியார் பல ஆண்டுகளுக்கு முன்னாலே சொல்லி இருக்கிறார். என்ன சொல்லி இருக்கிறார் 'தன்னால்' என்று சொல்கிறார். 'தன்னால்' என்றால் முதலமைச்சரால். எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தன்னையும், இந்த நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் அர்ப்பணித்துக்கொண்ட அவராலே இந்த நாட்டுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. நல்லதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.



அதற்குப் பின்னாலே நாலடியார் என்ன சொல்கிறார். 'தன் பரிசனத்தால்' என்று சொல்கிறார். 'தன் பரிசனத்தால்' என்றால் தன்னுடைய உறவுக்காரர்களால், தன்னுடைய சொந்தக்காரர்களால் என்று பெயர். இன்றைக்கு எங்களுக்கு மதுரையிலே ஒரு பிள்ளை, கோவையிலே ஒரு பிள்ளை, சென்னையிலே ஒரு பிள்ளை. இன்னும் சொல்லப் போனால் மகன்களாலும், மருமகன்களாலும் எங்களுக்கு பிரச்சினை கிடையாது. இன்னும் சொல்லப் போனால் சென்னைக்கும் மதுரைக்கும் மத்தியஸ்தம் செய்யக்கூடிய கூடுதல் பொறுப்பும் எங்களுக்குக் கிடையாது என்பதையும் இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்த பயம் என்னவென்று நாலடியார் சொல்கிறார் தெரியுமா? 'ஊனமது பகை திறத்தால்' என்று சொல்கிறார். 'ஊனமது பகை திறத்தால்' என்றால் உள்நாட்டுத் தீவிரவாதிகளால். கடந்த ஆட்சியிலே தினம் ஒரு குண்டுவெடிப்பு. கடந்த ஆட்சியிலே தாமிரபாணி நதியின் மேலே மரண ஓலம். கடந்த ஆட்சியிலே இரத்தம் தோய்ந்த தினசரிச் செய்திகள். ஆனால் இன்றோ, எங்கள் தாயினுடைய தலைமையிலே தமிழகம் அமைதிப் பூங்காவாக திகழ்ந்துகொண்டு இருக்கிறது என்பதை நான் ஆணித்தரமாக சொல்லக் கடமைப்பட்டு இருக்கின்றேன். டி.என்.ஆர்.டி. தமிழ் தேசியப் படை இன்றைக்கு இருக்கும் இடம் தெரியவில்லை. 'டி.என்.எல்.ஏ' தமிழர் விடுதலைப் படை இன்றைக்கு ஒடுக்கப்பட்டு இருக்கின்றது.

அடுத்து நாலடியார், 'உயிர்தம்மால் கள்வரால்' என்று சொல்கிறார். விலங்குகளாலே, திருடர்களாலே ஓர் ஆட்சிக்கு பயம் இருக்கக் கூடாது என்று சொல்கிறார். இன்றைக்குக் காவல் துறை மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. சட்டம்-ஒழுங்கு காப்பாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. பிரிவினை பேசுகின்ற இயக்கங்கள் இன்றைக்கு முடமாக்கப்பட்டுவிட்டன. இன்னும் சொல்லப்போனால், தீவிரவாதத்தினுடைய ஆதரவாளர்கள் எல்லாம் இன்றைக்கு பொடாவில் ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆக நாலடியார் சொல்லுகின்ற அந்த நல்லாட்சி, தன்னால், தன் பரிசனத்தால், ஊனமிகு பகை திறத்தால் - உயிர்தம்மால் கள்வரால் ஆனபயம் ஐந்தும் தீர்க்கின்ற இந்த மாநிலத்தின் காவலராக, மக்களுடைய காவலராக, ஏழை எளிய விவசாயிகளுடைய காவலராக, தாய்மார்களினுடைய காவலராக, மாணவ சமுதாயத்தினுடைய காவலராக, கல்வியின் காவலராக, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் பெருமையோடு பதிவு செய்ய விரும்புகின்றேன்.

நிதி நெருக்கடிகளை லாவகமாகக் கையாண்டு, ஏழை எளிய மக்களினுடைய ஏற்றம் ஒன்றையே எண்ணத்திலே கொண்டு, எங்கள் அம்மா அவர்களினுடைய அரசு தந்திருக்கக் கூடிய இந்த பட்ஜெட்டை, இன்றைக்கு மக்கள் பாராட்டிக்கொண்டு இருக்கின்றார்கள், ஆன்றோர்கள் பாராட்டிக்கொண்டு இருக்கிறார்கள், அறிவுசால் அறிஞர்கள் இன்றைக்குப் பாராட்டிக் கொண்டு இருக்கிறார்கள்.

ஒரு சிறந்த, முறையான வரிவிதிப்பு என்பது எப்படி இருக்க வேண்டும் என்று முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். 'வண்டு மலர் மீது அமர்ந்து, மலரும் நோகாமல், வண்டிற்கும் நோகாமல் தேனை எடுக்குமே' அதுபோல மக்களிடமிருந்து எடுத்து கருவூலத்திலே நிதியைச் சேர்க்க வேண்டும் என்று பெரியோர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதைப் பின்பற்றி இன்றைக்கு ஏற்றுமதி நேர்வுகளைப் பொறுத்த வரையிலே, ஏற்றுமதி விற்பனைக்கு வரிவிலக்கு தொடர்ந்து கொண்டிருக்கின்றது. ஏற்றுமதி மீது வரியானது பூஜ்ஜியம் விழுக்காடு இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய அளவிலே நீண்ட காலக் கொள்கையாக இருக்கக்கூடிய மதிப்பு கூட்டு வரி Value Added Tax என்று சொல்வார்களே, VAT இப்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்குத் தயார் ஆவதற்காக ஒரு பகுதியாக வணிக வரித் துறையை 100 சதவிகித கணினிமயமாக்கும் பணி 100% Computerisation of Department-இப்போது நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் வரி விதிப்பைப் பற்றிச் சொல்லும்போது 'Pat the Poor; Tap the Rich' என்று சொல்லி இருக்கிறார்கள். Diversion of Trade என்பது வணிக முறை மாற்றம். வணிக வரி மாற்றத்தையும், அந்த வரி ஏய்ப்பையும் தடுப்பதற்காக சில குறிப்பிட்ட பொருள்களுக்கு நம் மாநிலத்திலே நுழைவு வரி -Entry Tax- விதிக்கப்பட்டது பாராட்டத்தக்கது, பயன்பெறத்தக்கது, முன்னேற்றத்திற்கு வழிவகை செய்யத்தக்கது, வரவேற்கத்தக்கது என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்படியாக வரியவர் மேலே எந்தச் சுமையும் செலுத்தாமல் ஏழை எளியவர்களுக்கு எந்தக் கஷ்டத்தையும் தராமல், வரி விதித்திருக்கும் பாங்கினைப் பார்க்கின்றபோது, We are proud to say that Amma is the only pride of Indian Sub-continent என்று நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.



திட்டங்களைக் கண்டு இன்றைக்கு வியந்துகொண்டிருக்கின்றோம். சென்னையிலே இரண்டாவது தகவல் தொழில் நுட்பப் பூங்கா; கார்னல் பல்கலைக்கழகத்துடன் இணைந்து உயிரியல் தொழில் நுட்பப் பூங்கா; திண்டுக்கல் மாவட்டத்திலே சுற்றுப் புறச் சூழல் வளம் சார்ந்த உற்பத்திக்கான தொழில் பூங்கா; சென்னை மற்றும் திருப்பூரிலே; ஆடைப்பூங்கா; சிறுசேரியிலே தகவல் தொழில் நுட்பப் பூங்கா; இப்படி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக பல தொழில் பூங்காக்களை நிறுவி நாட்டின் வளர்ச்சிக்கு டாக்டர் அம்மா அவர்கள் உழைத்துக் கொண்டிருக்கின்ற வேளையிலே, இந்த நாட்டிலே, சிலரோ தொல்லை தரும் காப்பியப் பூங்காக்களை எல்லாம் எழுதி வயதான நக்கீரர்களினுடைய வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

வேளாண்மைத் துறையிலே பல புதிய அறிவிப்புகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. மண்ணைப் பொன்னாக்கும் விவசாயக் குடும்பத்திலே குடும்பத் தலைவியான நம்முடைய தாய்மார்கள் விளைச்சல் அமோகமாக இருக்கின்ற காலத்திலே தன்னுடைய பிள்ளைக்கு அரிசிச் சோற்றை நெய்யிலே பிசைந்து, பாசத்தையும் சேர்த்து அவர்களுக்கு ஊட்டுவார்கள். ஆனால் வறட்சிக் காலத்திலே அந்தத் தாய் என்ன செய்வாள் என்றால், அரிசிச் சோற்றை ஒரு நாளும், கேப்பைக் களியை ஒரு நாளுமாக, மாறி மாறி ஊட்டுவார்கள். ஆனால் இதையெல்லாம் தாண்டி நம்முடைய அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு இன்றைக்கு அரசு ஊழியர்களுக்கு 3 சதவிகித அகவிலைப் படியைக் கொடுத்திருக்கிறார்கள். சிறு, குறு விவசாயிகளுக்கு நிவாரணத் தொகையை அளித்திருக்கிறார்கள். இதுதான் ஒரு தாய்மை தலைமையேற்றிருக்கும் அரசு என்பதை நான் ஆணித்தரமாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எங்கள் தாய் அவர்கள் வறட்சிக்காலத்திலே ஏழைகளுக்கு அரிசிச் சோறு வழங்கிக் கொண்டிருக்கக்கூடிய ஆற்றல் மிக்கவர் என்பதை இந்த நோத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-50

நெற்றி வேர்வை நிலத்திலே சிந்தி, பாடுபட்டு உழைக்கும் ஏழை விவசாயிகளை மனதிலே கொண்டு தமிழக சிறு, குறு விவசாயிகளுக்காக இன்றைக்கு சுமார் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எதற்காக? இந்த நிதியானது மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் Tamil Nadu Electricity Regulatory Commission-ஆல் கொண்டுவரப்பட்டிருக்கின்ற மின் கட்டணச் சீரமைப்பிலிருந்து விவசாயப் பெருங்குடி மக்களுடைய சுமையை தமிழக அரசு தாயுள்ளத்தோடு தாங்கிக் கொள்கிறது என்ற செய்தியைக் கேட்டு சிறு, குறு விவசாயிகள் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒழுங்குமுறை ஆணையம் தந்திருக்கக்கூடிய ஆலோசனைகளை அடிப்படையாகக் கொண்டு சிறப்பான மின் பகிர்வும், தாமான மின்சாரமும் தொடர்ந்து வழங்க அம்மா அவர்கள் அரசு தந்திருக்கின்ற உறுதி. அந்த உறுதிக்காக ரூ.155.50 கோடிக்கான புதிய திட்டங்களும், தமிழகத்தை இனி வெளிச்சம் நிறைந்த மாநிலமாக்கும் என்பதிலே எங்களுக்கும் மக்களுக்கும் ஆயிரமாயிரம் Watt நம்பிக்கை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னும் சொல்லப்போனால், சூரிய ஆற்றலை அடிப்படையாகக் கொண்ட மின் இணைப்புக்கான சிறப்புத் திட்டம் ஒன்று 2003-2004ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படும் என்கின்ற அறிவிப்பு மக்களுக்கு மகிழ்ச்சியையும், சில பேர்களுக்கு அதிர்ச்சியையும் கொடுத்திருக்கிறது. அந்த அதிர்ச்சிக்கான காரணம், சூரிய ஆற்றலைக் கொண்ட மின் இணைப்பு என்பது கடந்த இரண்டு ஆண்டு காலமாகத்தான் எங்கள் அம்மா இருக்கின்ற காரணத்தாலே தமிழகத்திலே சூரியனுக்கு ஆற்றலே இல்லையே என்கின்ற சந்தேகம் பலருக்கு. ஐயா, இது ஆற்றல் மிக்க வானத்துச் சூரியன் என்று நாங்கள் அவர்களுக்கு விளக்கம் தரவேண்டியிருக்கிறது.

அதுமட்டுமல்ல. ஓசூர், தேனி, நீலகிரி மாவட்டங்களிலே புதிய வேளாண்மை ஏற்றுமதி வர்த்தக மண்டலத்திற்கு, நீலகிரியிலே ரூ.15.89 கோடியிலும், தேனி மாவட்டத்திலே ரூ.24.60 கோடியிலும் பணிகள் மேற்கொள்ளப்படுவது பாராட்டத்தக்கது.



நடப்பு நிதி ஆண்டிலே சொட்டு நீர்ப் பாசனத்திற்கு ரூ.11.79 கோடி என்ற அளவிலே இருந்த அந்த நிதி ஒதுக்கீடுகள் எல்லாம் 2003-2004 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டிலே ரூ.30 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது வேளாண்மைத் துறை இனி வேகமெடுக்கும் என்பதிலே ஐயமில்லை. இன்றைக்கு இந்தச் சூழ்நிலையிலே நாம் இருந்து கொண்டிருக்கிறோம்.

தமிழகத்திலே இயற்கை நம்மை ஏமாற்றிவிட்டது. பருவமழை பொய்த்து விட்டது. கடுமையான வறட்சியினாலே இன்றைக்கு விவசாயிகள் பெருமளவிலே பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்த இந்த அரசு தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு தென்னை மரக் கன்றுகளை நடுவதற்கு நிதி உதவி வழங்கிட மட்டும் ரூ.30.50 கோடி ஒதுக்கியுள்ளது என்பது பாராட்டத்தக்கது. தமிழகத்து விவசாயிகளை தென்னை கைவிட்டாலும் எங்கள் அன்னை கைவிடவில்லை என்பதை நான் ஆணித்தரமாக சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு விவசாயிகளுக்கு மட்டுமல்ல, கைத்தறி நெசவாளர்களுடைய துயர் துடைக்கும் பொருட்டு, சந்தை ஊக்கத் தொகை மற்றும் கைத்தறித் தள்ளுபடிக்காக ரூ.83 கோடி ஒதுக்கீடு செய்திருக்கின்றோம். உழைத்துப் பிழைக்கின்ற ஒப்பற்றத் தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்ற வகையிலே பீடித் தொழிலாளர்களுக்காக மட்டும் 2,000 புதிய வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ள செய்தி ஏழைத் தொழிலாளர்களுடைய ஈர மனதிலே புதிய நம்பிக்கையைப் புறப்பட வைத்திருக்கிறது.

மீன்பிடித்தொழில் நடைபெறாத பருவ காலங்களிலே மீனவர்களுக்காக நிவாரணத் தொகை வழங்கிட மட்டும் ரூ.25.13 கோடி ஒதுக்கீடு; மீனவர்களுக்கான வீட்டு வசதித் திட்டத்திற்கு ரூ.10.21 கோடி ஒதுக்கீடு; குடிசைப் பகுதிகளுடைய மேம்பாட்டிற்கு ரூ.47.82 கோடி ஒதுக்கீடு; சுற்றுலா மையங்களை மேம்படுத்த ரூ.20.00 கோடி ஒதுக்கீடு என திட்டங்களுடைய பட்டியல் நீண்டு கொண்டேயிருக்கிறது. எத்தனையோ சீர்மிகு திட்டங்கள் பட்ஜெட்டிலே பட்டியலிடப்பட்டிருக்கின்றன.

இன்றைக்கு சில பேர் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்னும் கதையாக, ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை என்று. இந்த பட்ஜெட்டிலே ஒன்றுமே

இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறவர்களுக்கு நான் பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நல்ல மனிதனுக்கு வெள்ளை நிறம் எல்லாம் பாலாகத் தெரியும். ஆனால் கண்ணிலே விளக்கெண்ணெய் ஊற்றிக்கொண்டு பார்க்கின்றவர்களுக்கு வெள்ளை நிறமாக இருந்தாலும் அவர்களுக்கு வேறொன்றாகத்தான் தெரியும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே அவையிலே இருப்பார்கள் என்பதற்காக நான் சில விவரங்களைப் பேச எடுத்து வந்திருந்தேன். அவர்கள் இல்லை. இருந்தாலும் நம்பிக்கை இருக்கிறது. நிச்சயமாக வெளியிலே இருந்து, ஓரத்திலே நின்று கொண்டு ஒட்டுக் கேட்டுக் கொண்டிருப்பார்கள்.

பகவத் கீதையிலே அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

"க்ரோதாத் பவதிஸம்போஹ: ஸம்போஹாத் ஸ்ம்ருதி; விப்ரம;, ஸ்ம்ருதி ப்ரம்சாத் புத்தி நாஸோ புத்தி நாஸாத் ப்ரணச்யதி" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

கோபத்தால் மனக் குழப்பம் வரும். மனக் குழப்பத்தாலே நினைவு தடுமாற்றம் வரும். நினைவு தடுமாற்றத்தாலே புத்தி நாசம் வரும். புத்தி நாசத்தாலே மனிதன் தன்னுடைய நிலையிலிருந்து வீழ்ச்சியடைகிறான் என்று பகவத் கீதையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி வீழ்ச்சி அடைந்த மனிதர்களுக்கு இந்த பட்ஜெட் ஒன்றுமில்லாத பட்ஜெட்டாகத்தான் தெரியும். மக்கள் மன்றத்தாலே புறக்கணிக்கப்பட்டவர்களுக்கு இந்த பட்ஜெட் ஒன்றுமில்லாத பட்ஜெட்டாகத்தான் தெரியும். மக்கள் மன்றத்தாலே விரட்டப்பட்டவர்களுக்கு, ஓரங்கட்டப்பட்டவர்களுக்கு எல்லாம் இந்த பட்ஜெட் ஒன்றுமில்லாத பட்ஜெட்டாகத்தான் தெரியும். களத்திலே தோல்வி கண்டவர்களுக்கு இந்த பட்ஜெட் ஒன்றுமில்லாத பட்ஜெட்டாகத்தான் தெரியும் என்பதை இந்த நேரத்திலே பணிவோடு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால் பெரியவர்கள் சொல்வார்கள், எந்த பிரம்பைக் கொண்டு அடித்தாலும், செக்கு மாடு சுற்றிக் கொண்டுதான் வரும், ஊர் போய்ச் சேராது என்று.



அதுபோல செக்குமாட்டினுடைய பண்பும், அவர்களுடைய பழக்க வழக்கங்களும் இப்படித்தான் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன், குத்திக்காட்ட விரும்புகிறேன் என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

எங்களுடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிர்ணயித்துள்ள, இந்தியாவிலே, தமிழகத்தை முதலிடமாக்குவது என்ற முன்னேற்றப் பாதையிலே, இலக்கை நோக்கி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையில் பட்ஜெட்டைத் தாக்கல் செய்திருக்கிறார்கள். இந்த நாட்டிலே எரியும் நெருப்பிலே எண்ணெயை வார்த்து, வார்த்து பழக்கப்பட்ட சிலபேர் இந்த பட்ஜெட்டைப் பற்றி ஒரு வரியில் சொல்கிறார்களாம். என்ன ஒரு வரியிலே சொல்கிறீர்கள், 'வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவது போல் உள்ளது' என்று ஒரு வரியில் சொல்கிறார் ஒருவர். உண்மையிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய நிருவாகச் சீர்கேட்டால், நிருவாகத் திறமையின்மையால் ஆட்சி நடத்தத் தகுதியில்லாத காரணத்தால்தான், நிதிநிலைமை வெந்துவிட்டது. பொருளாதாரம் புண்பட்டது. நிதியாதாரம் முடக்கப்பட்டது. கஜானா காலியான நிலையிலே பொறுப்பேற்ற எங்கள் அம்மா அவர்கள், புண்பட்ட பொருளாதாரத்திற்கு இப்போது மருந்து போட்டுக் கொண்டிருக்கிறார்கள். மருந்து போட்டு, பொருளாதாரத்தை, நிதிநிலைமையை இன்றைக்குக் காப்பாற்றி, சீரமைக்கின்ற முயற்சியிலே படிப்படியாக வெற்றியும் கண்டு கொண்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொருளாதாரம் என்பது வேறு, ஊர் ஊராகச் சென்று புத்தகம் விற்பது வேறு என்பதுகூட இவர்களுக்குப் புரியவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் அழுத்தந்திருத்தமாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவினுடைய முதல் பெண் டாக்டர், தமிழகத்தைச் சார்ந்த டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள், தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளுக்கு அரை நூற்றாண்டுகளுக்கு முன்னரே எண்ணக் குமுறலோடு ஒரு கடிதத்தை எழுதுகிறார். அந்தக் கடிதத்தினுடைய சில வரிகளை நான் இந்த

அவையிலே வாசிக்க ஆசைப்படுகின்றேன். 'இன்றைய சமுதாயத்திலே பெண்களுக்கு கல்வியறிவு பெறவும், உள்ளத்தையும் உடலையும் முன்னேற்றவும், எண்ணிய எண்ணத்தை வெளியிடவும் பெண்களுக்கு போதிய வசதிகள் இந்த நாட்டிலே கிடைப்பதாக இல்லை; இவற்றைக் களைவதற்கு ஏதாவது ஒரு வழி செய்ய வேண்டும்' என்று தேசப்பிதா காந்தியடிகளுக்கு அன்று இந்தியாவினுடைய முதல் பெண்மணி எண்ணக் குமுறலோடு ஒரு கடிதத்தை எழுதுகிறார். அந்த எண்ணக் குமுறலை இப்பொழுது இந்த நூற்றாண்டிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இதயதெய்வம் அம்மா அவர்கள் மகளிர் சுயஉதவிக் குழு என்ற திட்டத்தின் மூலமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், மூதோர்கள் சொல்வார்கள் 'பெண்களுக்கு மரியாதை செய்யாத தேசமும், பெண்களுக்கு மரியாதை செய்யாத சமுதாயமும், பெண்களுக்கு மரியாதை செய்யாத மக்களும் எப்போதும் பெருமையடைந்ததில்லை, எதிர்காலத்தில் பெருமை அடையப் போவதுமில்லை' என்று சொல்லியிருக்கிறார்கள். பெண்களுக்கு பெருமை சேர்க்கக்கூடிய இந்த வரிகளுக்கு உயிர் கொடுக்கக்கூடிய வகையிலே, பட்ஜெட்டிலே கண்ணுங்கருத்துமாக, கவனமாக இங்கே கையாண்டிருக்கிறார் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன். அவர்களுக்குப் புரியாது; ஏனென்றால், பெண்களை இழிவுபடுத்த வேண்டுமென்பதற்கே பிறந்தவர்கள் அவர்கள். ஆக, பெண்களை இழிவுபடுத்தப் பிறந்தவர்களுக்கு, பெண்களை பெருமைப்படுத்தத் தெரியாது என்பதைத்தான் இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்கூட சுட்டிக்காட்டினார்கள். ஆக நிதியாண்டிலே 5 இலட்சம் கூடுதலான மகளிர்களை உறுப்பினர்களாகக் கொண்ட புதிய 25 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைப்பதற்கு மட்டும் ரூ.22.50 கோடியை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். ஒரு லட்சம் மகளிர் பயன்படக்கூடிய வகையிலே மகளிருக்கான தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தைத் தந்திருக்கிறார்கள். பல கோடி ரூபாய்ச் செலவிலே 50 ஆயிரம் மகளிருக்குத் தொழில் திறன் மற்றும் மேம்பாட்டுப் பயிற்சியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.



பெண் குழந்தை பாதுகாப்பிற்கென புதிய திட்டத்திற்கு ரூ.6.1 கோடியை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். சமூகப் பாதுகாப்புறுதித் திட்டத்தின்கீழ் சத்துணவுப் திட்டத்திற்குக் கூடுதலாக ரூ.20.98 கோடியை ஒதுக்கியிருக்கிறார்கள். இந்தத் திட்டங்களெல்லாம் உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையா? இந்தத் திட்டங்களெல்லாம் உங்கள் கருத்துகளுக்கு எடுபடவில்லையா? இந்தத் திட்டங்களை ஏன் நீங்கள் மறுத்துக்கொண்டிருக்கிறீர்கள்? தூங்குபவர்களை எழுப்பலாம். ஆனால் தூங்குவதைப் போல நடித்துக் கொண்டிருப்பவர்களை எழுப்ப முடியாது என்பது உண்மை. இன்றைக்கு அன்னை தெரசா அவர்களாலே பாராட்டப்பட்ட மாண்புமிகு அம்மா அவர்களுடைய தொட்டில் குழந்தைத் திட்டத்திலே 2003-2004 ஆம் ஆண்டிலே பெண் குழந்தை பாதுகாப்பிற்காக மட்டும் ரூ.14 கோடி ஒதுக்கியிருப்பது பாராட்டத்தக்கது.

பெற்று பாசப்பட்ட பிள்ளைகளிலே எந்தப் பிள்ளைக்கு ஆட்சிக் கட்டில் தரலாம் என்று ஆளாய்ப் பறந்துகொண்டிருக்கின்ற அப்பாக்கள் இருக்கின்ற இந்த நாட்டிலே, யாரோ பெற்று வீசப்பட்ட பிள்ளைக்கு அரசு தொட்டில் தந்து கொண்டிருக்கிற அதிசயம் எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நண்பகல் 12-00

கல்வித் துறையிலே புரட்சிகரமான பல்வேறு சாதனைகளைத் தொடர்ந்து நடப்பு நிதியாண்டிலும் இந்தச் சாதனைகள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன. 30 புதிய மேல்நிலைப் பள்ளிகள் திறக்கப்பட இருக்கின்றன. 30 புதிய உயர்நிலைப் பள்ளிகள் திறக்கப்பட இருக்கின்றன. அதற்காக மட்டும் ரூ.80.64 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. 300 பள்ளிகளிலே ஆங்கில மொழி கற்பிப்பு ஆய்வகங்கள் தொடங்கப்பட ரூ.1.69 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலனுக்காக ரூ.439.05 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. 150 மாணவர் இல்லங்கள் கட்டுவதற்காக மட்டும் ரூ.47.25 கோடி ஒதுக்கீடு மற்றும் சிறப்புப் படிப்பு உதவி மானியத் திட்டம் தொடங்கப்பட இருக்கிறது. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக மேலும் 100 விடுதிகள் கட்டுவதற்காக ரூ.31.53 கோடியும் ஒதுக்கீடு

செய்யப்பட்டிருக்கிறது. இதன்மூலம் டாக்டர் அம்மா அவர்களுடைய அரசு மக்கள் நலன் காக்கும் அரசு மட்டுமல்ல, இது மாணவர் நலன் காக்கும் அரசு என்பதும் இப்போது நிரூபணம் ஆகிக்கொண்டிருக்கிறது.

மக்கள் அயர்ந்து தூங்க வேண்டுமென்றால் காவல் துறை அயராது கண்விழிக்க வேண்டும். காவல் துறையினுடைய சிறப்பான எதிர்காலப் பணியினை மனதிலே கொண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காவல் படையை நவீனமயமாக்கக்கூடிய வகையிலே ரூ.130.98 கோடி ஒதுக்கியிருப்பது வரவேற்பிற்குரிய திட்டமாகும். ஒதுக்கீடுகள் வெறும் பணத்தோடு நின்றுவிடாமல், வெறும் பொருளோடு நின்றுவிடாமல் விலை மதிப்புள்ள ஐந்து நாட்களை எங்கள் அம்மா அவர்கள் ஒதுக்கித் தந்து காவல் துறை அதிகாரிகள், ஆண், பெண் காவலர்களுடைய குறை களைய முற்பட்டது தமிழக அரசியல் வாலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் என்பதை இந்த நேரத்திலே நான் பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கிராமங்களை இதயமாகக் கொண்டு இந்தியா வாழ்கிறது என்ற அண்ணல் காந்தியினுடைய அசைக்கமுடியாத நம்பிக்கைக்கு வலு சேர்க்கக்கூடிய வகையிலே வகைபடுத்தப்படாத சாலைகளுடைய பராமரிப்புக்கு தேடிப் பிடித்து ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. 5,000 கிலோ மீட்டர் மாநில நெடுஞ்சாலை மற்றும் மாவட்டச் சாலைகளுடைய பராமரிப்புக்கு மட்டும் ரூ.180 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

30 ஆண்டு கால மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையிலே தொலைநோக்குப் பார்வையிலே இதுவரை எந்த ஒரு அரசும் ஒதுக்கீடு செய்யாத நிலையிலே ஊரகக் குடிநீர் வழங்கலுக்காக Minimum Needs Programme என்ற திட்டத்திற்கு மட்டும் ரூ.411 கோடி ஒதுக்கப்பட்டிருப்பது கிராமப்புற மக்களுடைய குடிதண்ணீர்த் தேவையைத் தீர்க்கக்கூடிய மிகப் பெரிய முயற்சியாகும் என்பதை நான் ஆணித்தரமாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஊரகப் பகுதிகளிலே மேலும் 6,309 ஒருங்கிணைந்த துப்புரவு வளாகங்கள் கட்ட ரூ.104.42 கோடி ஒதுக்கீடு என்ற இலக்கை நோக்கி நம்முடைய பயணம் வெற்றிகரமாக சென்றுகொண்டிருப்பது என்பது இவர்கள் கண்ணுக்குத் தெரிய வாய்ப்பில்லை. ஆனால் பட்ஜெட்டை அவையில் படிப்பதற்கு முன்பே இந்த அவைக்கு நீண்ட காலமாக வராமல், சேப்பாக்கம் மக்களுடைய தீர்ப்புக்குத் தலை வணங்காமல்



வெளியில் இருக்கும் தலைவருடைய உத்தரவுப்படி நாட்டு நடப்பு எதுவாக இருந்தாலும் எங்கள் நடப்பு வெளிநடப்பு என்ற ஒற்றைக் கொள்கையிலே இவர்கள் உறுதியாக இருக்கிறார்கள். ஆக வெளிநடப்புச் செய்வது ஒன்றையே வழக்கமாகக் கொண்டிருக்கும் மலிவான அரசியல் நடத்தும் எதிர்க் கட்சிகளுடைய விமர்சனத்தைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை. ஏனென்றால் நாங்களும் கவலைப்படவில்லை; நாடும் கவலைப்படவில்லை என்பதைத்தான் உள்ளங்கை நெல்லிக்கனியாக சாத்தான்குளம் இடைத் தேர்தலிலே தெளிவாக்கப்பட்டுவிட்டது. சிங்கத்தினுடைய வீரத்தைப்பற்றி சிறு நரிகள் புகழவேண்டுமென்ற எதிர்பார்ப்பு எங்களுக்கு இல்லை. கோபுரத்தினுடைய வான்புகழைக் குப்பை மேடுகள் வாழ்த்த வேண்டுமென்ற ஏக்கமும் எங்களுக்குக் கிடையாது. ஏனென்றால் தங்கத்தினுடைய தரத்தைப்பற்றி உறைகல்லினுடைய விமர்சனத்தை வேண்டுமானால் ஏற்கலாம். ஆனால் உப்புக் கற்களுடைய உளறல்களுக்கு எல்லாம் செவிமடுக்க வேண்டிய அவசியம் எங்களுக்குக் கிடையாது. அதற்கு மக்கள் தீர்ப்பு தருவார்கள் என்பதை இந்த நேரத்திலே பணிவோடு சுட்டிக்காட்டி, '2003-2004 ஆம் ஆண்டிலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற இந்த பட்ஜெட் தெளிந்த பாலிலே தேனை ஊற்றித் தந்தது போல் உள்ளது' என்ற ஒற்றை வரியிலே சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஆர். இராமசாமி.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை மீது பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்திலே இன்றைக்குக் கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இந்த வறட்சியினால் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்றைக்கு விவசாயத்தை நம்பி வாழக்கூடிய மக்கள் வறட்சியினுடைய கொடுமையால் விவசாயிகள் விவசாயம் செய்வதா அல்லது விவசாயத்தை விட்டுவிட்டுச் செல்வதா என்கிற நிலை தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறது. மின் கட்டண உயர்வு, டீசல் விலை உயர்வு, உரத்தினுடைய விலை உயர்வு, இதுபோன்ற விவசாய சம்பந்தப்பட்ட பொருள்கள் விலை உயர்ந்திருக்கிறது. ஆனால் விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுடைய விலை அதற்கேற்றாற்போல் விலை உயர்வு ஏற்படவில்லை. இதை எண்ணும்போது விவசாயிகளுடைய நிலை

மிக, மிக மோசமான நிலைமைக்கு இன்று தள்ளப்பட்டிருக்கிறது. விவசாயிகள் சம்பந்தப்பட்ட துயர் துடைப்புப் பணிகள் இன்னும் நடைபெறவில்லை. வறட்சிக் கொடுமை இருக்கும்போது வறட்சி நிவாரண வேலைகளை நமது அரசு இன்னும் ஆரம்பிக்கவில்லை. உடனடியாக வறட்சி நிவாரணப் பணிகளைத் தொடங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கண்மாய்கள், குளங்கள், வாத்துக்கால்கள் போன்றவை தூர் வாரப்பட்டு சரி செய்யப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு மின்சாரத்தினுடைய...

*பிற்பகல் 12-05*

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு வருடங்களாக பருவ மழை பொய்த்ததன் காரணமாக ஏற்பட்ட கடுமையான வறட்சி நிலைமையினையொட்டி அரசு சார்பாக அனைத்து மாவட்டங்களிலும் பல்வேறு வகையான வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு உதவி கிடைப்பதற்கு முன்பே இவ்வளவு நிதி நெருக்கடியிலும் வறட்சிப் பணிகளை ஆரம்பிப்பதற்கு புரட்சித் தலைவி அரசு உத்தரவிட்டு அந்த நிதி மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டு வறட்சிப் பணிகள் நடந்து வருகின்றன என்பதை நான் இப்போது மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** குறிப்பாக இராமநாதபுரம், சிவகங்கை போன்ற மாவட்டங்களிலே வறட்சிப் பணிகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என்று நான் சொல்கிறேன். அதேபோன்று...

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திலும், சிவகங்கை மாவட்டத்திலும் வறட்சிக்கான பணிகளுக்காக நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் இந்தப் பணிகளை உடனடியாக நிறைவு செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதோடு 100 ஆண்டு கால தமிழக வரலாற்றில்



இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அனைத்து கண்மாய்களையும் தூர் வாருவதற்கும் அதனுடைய வரத்துக்கால்களை சரி செய்வற்கும், கண்மாய்களை ஆழப்படுத்துவதற்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தைத் தத்தெடுத்துக்கொண்டு அதற்காக 75 கோடி ரூபாயை சிறப்பு நிதியாக ஒதுக்கித் தந்து இந்த ஆண்டு அந்தப் பணிகளை முழுவதுமாக நிறைவேற்றுவதற்கு—3 கட்டமாக அந்தப் பணிகள் நிறைவேற்றப்பட இருக்கின்றன—முதல் கட்டப் பணிகளுக்காக 24 கோடியே 48 இலட்சம் ரூபாய்க்கு வேண்டிய அனுமதியைத் தந்திருக்கிறார்கள் என்பதையும், அந்த மாவட்ட மக்களின் சார்பில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மாவட்டத்து மக்கள் எல்லாம் இதை ஒரு மிகப் பெரிய உதவியாக இந்த நூற்றாண்டில் இதற்கு முன்னால் நடைபெறாத இனிமேலும் நடைபெறமுடியாத உதவியாக கருதிக்கொண்டு அங்கே இருக்கிற விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சியுடன் காணப்படுகிறார்கள் என்பதையும் இந்த விஷயம் நம்முடைய திருவாடனை சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு இராமசாமி அவர்களுக்கும் தெரியும் என்பதையும் நான் பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி மாநிலம் - வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற 28 மாநிலங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்ற மாநிலங்கள் என்று அரசு அறிவித்து இருக்கிறது. (குறுக்கீடு) ஆம், 28 மாவட்டங்களும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. வளர்ச்சிப் பணிகள் நடைபெறவில்லை என்று உறுப்பினர் குற்றம் சுமத்தவில்லை. ஆனால் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்பட்ட பிறகும் வறட்சி நிவாரணப் பணிகள் முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை என்றுதான் சொல்கிறார். குளங்கள் தூர் வாருவது ஒரு வறட்சி நிவாரணப் பணிதான். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் வறட்சி நிவாரணப் பணி என்று சொன்னால் விவசாயிகளைப் பொறுத்தவரையில் சில வகைக் கடன்களை இரத்து செய்தாக வேண்டும். நிலவரி இரத்து செய்யப்பட்டிருக்க வேண்டும். அதேபோல கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டிருக்க வேண்டும். வட்டி தள்ளுபடி செய்யப்பட்டிருக்க வேண்டும். அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டிருக்க வேண்டும். இதுபோன்ற நிவாரணப் பணிகள்

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2003 மார்ச் 26

மேற்கொள்ளப்படவில்லை என்பதுதான் உறுப்பினருடைய குற்றச்சாட்டு.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து மாவட்டங்களிலும் வறட்சி நிவாரணப் பணிகளுக்கென 149.48 கோடி ரூபாய்க்கு அரசு ஆணையிட்டிருக்கிறது. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தக் கடுமையான வறட்சி நேரத்திலும் தமிழகத்தில் எந்தப் பகுதியிலும் குடிநீருக்குப் பற்றாக்குறை வரக்கூடாது என்பதனை எடுத்துக்கூறி 149.48 கோடி ரூபாய் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக குடிநீர்த் தேவைக்கென ஒதுக்கப்பட்டிருக்கிறது. 28 மாவட்டங்கள் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டு 341.92 கோடிக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கும் பெரும் திட்டம் ஒன்றை அரசு ஆய்வு செய்கின்ற நிலையில் கூடிய விரைவில் பாதிக்கப்பட்ட 28 மாவட்டங்களிலும் வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதனையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-10*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் கூட்டுறவுக் கடன் வசூலிப்பதுகூட நிறுத்தப்படவில்லை. பல இடங்களில் நாங்கள் ஜப்தி செய்வோம் என்று மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் உடனடியாக நிறுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடனுக்காக எந்தப் பகுதியிலும் ஜப்தி நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** எடுக்கப்பட்டது என்று நானும் சொல்லவில்லை. அச்சுறுத்திக்கொண்டிருக்கிறார்கள். எடுப்போம் என்று சொல்கிறார்கள். விவசாயிகள் உடனடியாக....

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இதைப் பற்றி வேறு ஒரு சட்டமன்ற உறுப்பினர் இந்தப் பிரச்சினைகளை எழுப்பி நேற்று இதற்கெல்லாம் விரிவான பதிலை அரசு கொடுத்துவிட்டது. அந்த நேரத்தில்



2003 மார்ச் 26] [செல்வி ஜெ ஜெயலலிதா]

மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. இந்த அவைக்கு வரவில்லை. கூட்டுறவுக் கடன்களை வசூல் செய்யக்கூடாது, அபராத வட்டியையும் வசூல் செய்யக்கூடாது என்று ஏற்கெனவே உத்தரவு கொடுக்கப்பட்டுவிட்டது; Direction கொடுக்கப்பட்டு விட்டது. அதைப்போலவே வறட்சி மாவட்டங்கள் என்று அறிவிக்கப்பட்ட 28 மாவட்டங்களிலும் நில வரியை, kist, land revenue-ஐ வசூல் செய்யக்கூடாது என்று ஏற்கெனவே சொல்லிவிட்டோம். அதாவது வறட்சி மாவட்டம் என்று அறிவிக்கப்பட்டாலே அங்கு நில வரி வசூல் செய்யப்படுவதில்லை. ஆனால் இறுதி ஆணைகள் இன்னும் வழங்கப்படவில்லை. காரணம் ஏப்ரல், மே நேரத்தில், ஜமாபந்தி எனப்படும் நேரத்தில்தான் இறுதி ஆணைகள் வழங்கப்படும். அந்த நடவடிக்கையையும் துரிதப்படுத்த இந்த அரசு தேவையான உத்தரவுகளைப் பிறப்பிக்கும் என்று நேற்றே தெரிவித்தேன். அதை நிச்சயமாகச் செய்வோம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி மாவட்டங்கள் என்று அறிவிக்கப்பட்டவுடன், குறிப்பாக மாநிலமே வறட்சியால் பாதிக்கப்பட்டது என்று அறிவிக்கப்பட்டதற்குப் பின்னாலே உடனடியாக அரசாங்கம் உத்தரவுகளைப் பிறப்பித்திருக்க வேண்டும்; ஆணைகளைப் பிறப்பித்திருக்க வேண்டும். கிஸ்தி வசூலை நிறுத்திவைக்க வேண்டுமென்று ஆணைகள் பிறப்பித்திருக்க வேண்டும். பிறப்பிக்கப்படவில்லை என்றுதான் நாங்கள் சொல்கிறோம்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் கண்மாய்களைத் தூர் வாருவதற்காக நமது அரசு நிதியை ஒதுக்கியிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏறத்தாழ ஓராண்டுக்கு முன்பாக சட்டமன்றத்திலே அறிவிக்கப்பட்டது. ஆனால் இன்னும் ஓராண்டு முடியும் தருவாயிலும்கூட அந்த வேலைகளை அங்கே செயல்படுத்துவதற்கு ஏன் அதிகாரிகள் இன்னும் காலம் கடத்துகிறார்கள் என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மின்சாரத்தைப் பொறுத்தமட்டில் இலவச மின்சாரத்தை இரத்து செய்திருக்கிறீர்கள். இதுகுறித்து இரண்டு நாட்களாக விவரமாக இங்கே விவாதங்கள் நடந்தன. அதிலே ஒன்று, ஏழை விவசாயிகளுக்கு வறட்சிக்கு இலக்காகும் திட்டத்தின்கீழ்

[திரு. கே.ஆர். இராமசாமி] [2003 மார்ச் 26

ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து அதிலிருந்து விவசாயத்திற்கு தண்ணீர் எடுத்து பயன்படுத்தி வந்தார்கள். அதற்கு நமது அரசு, மின் வாரியம் இரண்டு மாதங்களுக்கு முன்பாக ஓர் உத்தரவைப் பிறப்பித்தது. அந்த ஆழ்குழாய்க் கிணறுகளுக்கு இவ்வளவு நாட்களாக இலவச மின்சாரத்தைத்தான் பயன்படுத்திக்கொண்டிருந்தார்கள். இரண்டு மாதங்களுக்கு முன்பு ஓர் உத்தரவை அரசு பிறப்பித்தது. என்னவென்றால் ஒரு H.P. மோட்டாருக்கு ஓர் ஆண்டுக்கு 250 ரூபாய் செலுத்த வேண்டும். இந்தத் தொகையை கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் நீங்கள் செலுத்த வேண்டும், இல்லையென்றால் மின்சாரத்தை துண்டித்துவிடுவோம் என்று சொன்னார்கள். இதன்படி விவசாயத்திற்கு பயன்படுத்தக்கூடிய ஆழ்குழாய்க் கிணறுகளுக்கு மின்சாரத்தைத் துண்டித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, that may be an unauthorised irrigation. ஒருவேளை ஆறுகளிலிருந்து அனுமதி இல்லாமல் எடுக்கப்பட்ட தண்ணீர் என்றால் தண்டத் தீர்வை என்று பொருள். அனுமதி இல்லாததாக இருக்கலாம். அப்படி அந்தத் தகவலைத் தாருங்கள். அல்லது அவர்கள் மின் கட்டணத்திற்கு பணம் கட்டி தண்ணீர் எடுக்கின்ற அனுமதியைப் பெற்ற அந்தப் பிரத்தியேக Category-ல் அவர்கள் வரலாம். எது என்று சரியான விவரத்தை அரசுக்குத் தாருங்கள். அது குறித்து அரசு ஆயும்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** ஆழ்குழாய்க் கிணறுகளை அரசாங்கமே இலவசமாக அனுமதித்து, கூட்டுறவு முறையிலே அங்கேயிருக்கக்கூடிய விவசாயிகளை ஒன்றாக இணைத்து, அந்தக் கூட்டுறவு அமைப்பை நிர்வகிக்கக் கூடிய அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். தொடர்ந்து ஏறத்தாழ 15, 20 ஆண்டுகளாக விவசாயிகள் அதைப் பயன்படுத்தி வந்தார்கள். இப்போதுள்ள உத்தரவின்படி மின்சாரம் துண்டிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலை விவசாயிகளுக்கு இன்னும் பெரிய கொடுமையை ஏற்படுத்தும் என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டும்.

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எங்கே, எந்த ஊரில் என்ற விவரத்தைச் சொல்லுங்கள்.



2003 மார்ச் 26]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, whether it is lift irrigation?

**திரு. கே.ஆர். இராமசாமி:** ஆழ் குழாய்க் கிணறு.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஆற்றிலிருந்து எடுக்கின்ற தண்ணீரா? ஆழ் குழாய்க் கிணறு, சமுதாயக் கிணறு போன்ற அந்தத் தகவலை நீங்கள் முழுமையாகத் தாருங்கள். என்ன என்பதை சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பி, ஆய்ந்து அதற்கேற்ற நடவடிக்கையை அரசு எடுக்கும்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** சிவகங்கை மாவட்டத்திலே கண்ணன்குடி என்கிற இடம்; கப்பலூர் என்கிற இடம். இதுபோன்று வரிசையாக அந்தப் பகுதியில் நிறைய ஆழ்குழாய்க் கிணறுகள் அரசாங்கத்தால் அமைக்கப்பட்டு விவசாயிகள் பயன்படுத்தி வந்தார்கள். இன்றைக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களிலே, உயர்நீதிமன்றத்திற்கு வந்து தடையாணை பெற்றிருக்கிறார்கள். இவற்றைச் சரி செய்து தர வேண்டும். இதிலே ஏற்பட்டிருக்கக்கூடிய சந்தேகம் என்னவென்றால், அந்த ஆழ்குழாய் கிணறுகளுக்கெல்லாம் இப்போது மானியமாக நீங்கள் கொடுக்கின்ற தொகை அவற்றிற்குக் கிடைக்குமா என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன். இதேபோன்று இன்றைக்கு மின்சாரம்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு மணித்துளிகளில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது--அரசு சிறு, குறு விவசாயிகளுக்குத்தான், 3 குதிரைத் திறன் கொண்ட மோட்டார் பம்புசெட்டுகளுக்கு ஆயிரம் ரூபாய் என்றும், 5 குதிரைத் திறன் கொண்ட பம்புசெட்டுகளுக்கு 1,250 ரூபாய் என்றும் சலுகைகள் காட்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது-- தனிப்பட்ட விவசாயியாக இருக்காது என்று நினைக்கிறேன். ஒரு கூட்டுறவு சொசைட்டி மூலம் இவர்கள் அந்த மின்சாரத்தைப் பயன்படுத்துகின்ற ஒரு சூழ்நிலை இருக்குமென்று கருதுகிறேன். சரியான தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தரும்பட்சத்தில் அதுபற்றி தீர விசாரித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரியான தகவலைத் தரும்பட்சத்தில் மின்சார வாரியம் தேவையான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** அதற்குரிய ஆதாரங்களை நான் அமைச்சரிடம் வழங்குகிறேன். அடுத்தபடியாக குடிதண்ணீர் பிரச்சினை. குடிதண்ணீர் பிரச்சினை மிக மோசமான நிலையிலே எங்களது மாவட்டங்களில் எல்லாம் இருக்கிறது. குறிப்பாக கடற்கரை சார்ந்த கிராமங்களுக்கு குடிதண்ணீர் கிடைப்பதிலே பல பிரச்சினைகள் இருக்கின்றன. குடிதண்ணீர் வழங்குவதில் உள்ள ஒரு பிரச்சினை என்னவென்றால், இன்றைக்கு ஊராட்சி மன்றங்களால் நிர்வகிக்கப்படக்கூடிய கூட்டுக் குடிதண்ணீர் திட்டங்களுக்கான மின்சாரக் கட்டணத்தை ஊராட்சி மன்றங்களுக்குப் போதிய நிதி இல்லாத காரணத்தால் அவர்களால் கட்ட முடியாத நிலை உள்ளது. ஆக, இதற்காக நமது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் எவ்வளவு பணம் கட்ட முடியுமோ அந்த நேரத்திற்கு மாத்திரம் இந்த மோட்டார்களை இயக்குங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். குடிதண்ணீருக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்சினையைப் போக்குவதற்கு அரசாங்கமே இதை மானியமாக செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இப்போது ஊராட்சி மன்றங்களுடைய நிலை என்ன என்பது நமக்கு நன்றாகத் தெரியும். அவர்களால் பணம் கட்ட முடியாத நிலை ஏற்படும்போது, ஏழை மக்களுக்குக் குடிதண்ணீர் கிடைப்பதிலே பிரச்சினை ஏற்படுகிறது. இதைச் சரி செய்து தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று. அரசாங்கத்திலே 504 கிராமங்களுக்குத்தான் குடிதண்ணீர் கிடைக்கவில்லையென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஆயிரக்கணக்கான கிராமங்களுக்கு இன்னமும் குடிதண்ணீர் கிடைக்காத நிலை இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக எங்களது மாவட்டத்திலே மீனவர்கள் பிரச்சினை மிக மோசமான நிலையிலே இருக்கிறது. இன்றைக்கு அன்னிய நாட்டிலிருந்து நமது மீனவர்களைக் கடத்திச் செல்கிறார்கள். பலரைச் சுட்டுக் கொல்கிறார்கள். இது தொடர்ந்து நடக்கிறது. இராமநாதபுரம்



மாவட்டத்திலே தொடர்ந்து இந்தப் பிரச்சினை நடந்து கொண்டே இருக்கிறது.

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மார்ச் 3 ஆம் தேதியும், 4 ஆம் தேதியும் இலங்கைக் கடற்படையினர் இராமேசுவரத்தைச் சேர்ந்த நபர்களைப் பிடித்துச் சென்றுவிட்டார்கள். மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய முயற்சியினால்தான் இதுவரைக்கும் நடைபெறாத அளவிலே, 3, 4 தினங்களில் அவர்கள் விடுவிக்கப்பட்டது நமது சட்டமன்ற உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும். அதற்கென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்போது ஒரு குழுவை அமைத்து இருக்கின்றார்கள். மீன்வளத் துறை அமைச்சரான என்னை சேர்மனாகவும், இராமநாதபுரம் மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர், காவல் துறையினுடைய கண்காணிப்பாளர், மீனவர்களுடைய பிரதிநிதி மற்றும் வெளிவிவகாரத் துறை அதிகாரி ஆகியவர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்திருக்கின்றார்கள். இது Government of India, New Delhi-க்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. மத்திய அரசாங்கம் அதற்கான ஆணையைப் பிறப்பித்தவுடன் இந்தப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, இதுபோன்ற மீனவர்களுடைய பிரச்சினைகள் சுமூகமாகத் தீர்த்துவைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில், கடல் எல்லை என்ன என்பதை எங்களால் அறிந்துகொள்ள முடியவில்லை என்று மீனவர்கள் சொல்கிறார்கள். கடலில் நமது எல்லையைத் தாண்டி அவர்கள் மீன் பிடிக்கச் செல்கிறார்கள் என்று சொல்லி, அண்டை நாட்டவர்கள் நமது மீனவர்களைக் கடத்திச் செல்கிறார்கள். எனவே, அந்த எல்லைக் கோட்டை கூடிய விரைவிலே, எவ்வளவு வேகமாக...

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயும் இதுபற்றி பேசப்பட்டது. தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின் பேரில்

அதற்கான மதிப்பீடு எங்களுடைய துறையின் மூலமாக தயாரிக்கப்பட்டு, அதுவும் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. அந்த உத்தரவு கிடைக்கப்பட்டவுடன் அதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** ஏறத்தாழ ஓராண்டுக்காலம் கடந்துவிட்டது. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த மிதவையை அமைப்பதாக சென்ற ஆண்டு அறிவித்தார்கள் என்று எண்ணுகிறேன். ஓராண்டுக்காலமாக அந்த உத்தரவை மத்திய அரசு ஏன் காலதாமதப்படுத்துகிறது என்பது எனக்குப் புரியவில்லை. அதற்கிடையிலே பல பிரச்சினைகளை மீனவர்கள் சந்திக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே அந்தப் பிரச்சினைகளில் நமது அரசு கவனம் செலுத்தி, கூடியவிரைவிலே, அந்த மீனவர்களுக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல சாலை. சாலைகளைப் பொறுத்தமட்டில் மிக மோசமான நிலை நமது தமிழகத்திலே இருக்கிறது. சாலைகளிலே, ஒன்றியச் சாலை, மாவட்டச் சாலை, நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலைகள், என இப்படி பல செப்பனிடப்பட வேண்டிய சாலைகள் இருக்கின்றன. இந்தச் சாலைகளைச் செப்பனிடாவிட்டால், பல கிராமங்களுக்குச் செல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே நயது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய மாவட்டங்களிலே நிறைய சாலைகளை நீங்கள் சரி செய்து தர வேண்டும். குண்டும் குழியுமாக இருக்கின்றன.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலைகளைப் பொறுத்தவரையில் கடந்த காலங்களில் மிகப் பழமையான சாலைகள், வருடாந்திரம் புதுப்பிக்கப்பட வேண்டிய சாலைகள் ஆகியவை கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில், பருவகாலத்தில் சாலைகள் புதுப்பிக்கப்படாததால் மிகப்பெரிய அளவில் சாலைகள் போட வேண்டிய ஒரு சூழ்நிலை நம்முடைய அரசுக்கு இருந்தது. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து, உலக வங்கியினுடைய நிதியுதவியின்ன இன்னும் இரண்டொரு



மாதங்களில் பெறுவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, பெற இருக்கின்றோம். அந்த நிதியுதவி மூலம் தமிழ்நாட்டிலே இருக்கின்ற முக்கியச் சாலைகளை, உலகத் தரம் வாய்ந்த சாலைகளாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது என்பதையும், அவ்வப்போது ஏற்படுகின்ற பழுதுகளைச் சரிபார்ப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் 20 கோடி ரூபாயை நடப்பு ஆண்டில் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதையும், 90 கோடி ரூபாய் என்ற அளவுக்கு 2,500 கிலோ மீட்டருக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அந்தச் சாலைகள் பணி இன்னும் ஓரிரு மாதங்களில் நடைபெற இருக்கின்றது என்பதையும், நடப்பு ஆண்டில், அதாவது வரும் ஆண்டில் 2003-2004 ஆம் ஆண்டிற்கு 5,000 கிலோ மீட்டர் என்ற அளவிற்கு, 180 கோடி ரூபாய் அளவிற்குச் சாலைகள் போடுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள் என்பதையும், கடந்த காலங்களில் ஏற்பட்டுவிட்ட பின்னடைவுகளை நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் வருங்காலத்திலே சாலைகள் அனைத்தையும் நல்லமுறையிலே பழுது பார்ப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். நெடுஞ்சாலைத் துறை சாலை தவிர ஊராட்சிப் பகுதிகளில் இருக்கின்ற சாலைகள் ஊராட்சியினுடைய உள்ளாட்சி அமைப்புகளின் பராமரிப்பில் இருக்கின்றன. அவற்றை உள்ளாட்சித் துறை மூலமாக பழுது பார்த்து சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றது. உறுதியாக வருகின்ற ஆண்டுகளில் சாலைகளை மேம்படுத்துவதற்கும், உறுதிப்படுத்துவதற்கும், புதுப்பிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-25

**திரு. கே.ஆர். இராமசாமி:** சாலைகளைப் பொறுத்தமட்டில், எங்களது மாவட்டத்திலே கடற்கரை ஓரமாக, கிழக்குக் கடற்கரைச் சாலை செல்கிறது. அந்தச் சாலை பல ஆண்டுகளாக மிக மிக மோசமான நிலையிலே இருக்கிறது. முதலிலே இந்தச் சாலையைச் செப்பனிட்டுத் தர வேண்டும். அந்த பெரிய திட்டத்திலே சேர்த்து இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்தத் திட்டம் வரும்பொழுது அந்தச் சாலையை பெரிதுபடுத்தலாம். ஆனால் அதற்கு இடையிலே இருக்கக்கூடிய குண்டும், குழிகளையும் சீர்செய்து தர ஏற்பாடு செய்து தரவேண்டும்

என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு தமிழகத்திலே பல தொழிற்சாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** குறிப்பாக பஞ்சாலைகள் எல்லாம் நிறைய மூடப்பட்டு இருக்கின்றன. மூடப்பட்ட ஆலைகளைத் திறப்பதற்கு நமது அரசு என்ன செய்து இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். இதுபோன்று பஞ்சாலைகள், சில தொழிற்சாலைகளை மூடிக்கொண்டே சென்றால் அதிலே வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளிகளுடைய நிலை மிக மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கிறது.

அடுத்தபடியாக இன்றைக்கு சிமெண்டின் விலை அதிகரித்து இருக்கிறது. நமது நிதி அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு சிமெண்டினுடைய விலை ஏற்றத்திற்குப் பல காரணங்களைச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு மறுபடியும் விலை அதிகரித்து இருக்கிறது. இதற்கு....

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே சிமெண்ட் விலை மூட்டை ஒன்றுக்கு 200 ரூபாய்க்கு மேலாக இருந்தது. மாண்புமிகு இதய தெய்வம் முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சி வந்தபிறகு அது ரூ.135/-ஆகக் குறைக்கப்பட்டது என்பது மீண்டும் இப்பொழுது மூட்டைக்கு 20 ரூபாய் கூடியிருக்கிறது. இதன் விலையைக் குறைப்பதற்கு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அம்மாவினுடைய அரசு தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருக்கிறது. மிக விரைவிலே சிமெண்ட் விலை இன்னும் குறைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** இப்பொழுது சிமெண்ட் ஏறத்தாழ 195 ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு....

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமெண்டின் விலை இப்பொழுது 165 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இன்னும் விலை குறைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையாகவே சிமெண்ட் விலை இன்றையதினம் 195 ரூபாய்க்குத்தான் மார்க்கெட்டிலே விற்கப்படுகிறது. சிலருக்குக் குறைவாகக் கிடைக்கலாம். அதுதான் உண்மையான நிலைமை. இன்றையதினம் மார்க்கெட்டிலோ, சந்தையிலோ வாங்கவேண்டும் என்று சொன்னால் சிமெண்டினுடைய விலை 195 ரூபாய்தான்.

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் சிமெண்ட் விற்பனை விலை ரூ.195 எனக் குறிப்பிட்டார்கள். கோவையில் பென்னார் சிமெண்ட் 138 ரூபாய்க்கும், டால்மியா சிமெண்ட் 140 ரூபாய்க்கும், அதேபோன்று அரசு சிமெண்ட் 140 ரூபாய்க்கும், செட்டி நாடு சிமெண்ட் 155 ரூபாய்க்கும், ராம்கோ சிமெண்ட் 150 ரூபாய்க்கும் இன்றைய நிலையில் இருக்கின்றது. இன்று நான் காலையில் தெரிந்துகொண்டுதான் கூறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள், ஏன், நீங்கள் டெல்லியில் விசாரித்தீர்களா?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** விலைவாசி ஏறுவதற்கு பல காரணங்கள் உள்ளன. இப்பொழுது சிமெண்ட் விலை ஏறிக்கொண்டு இருக்கிறது. அதைத்தான் நான் நிதி அமைச்சர் அவர்களிடத்திலேகூட குறிப்பிட்டேன். நீங்கள் கொண்டு வருகின்ற மதிப்புக் கூட்டு வரிக்கு எதிர்ப்பான வாதத்தைச் சொல்லிக் கொண்டு இருக்கிறார் என்று சொன்னார்கள். ஏனென்றால் இன்றைக்கு வரி இருக்கிறது. இன்றையதினம் எங்கள் காதுக்கு வருகின்ற செய்திகள், நாங்கள் தெரிந்துகொண்டு இருக்கின்ற செய்திகள் இவை. நாங்கள் தெரிந்துகொண்டு இருக்கின்ற செய்திகளைச் சொல்லுகிறோம். 190 ரூபாய்க்கும், 195 ரூபாய்க்கும் விற்பதாகச் செய்திகள் வருகின்றன. நாளையதினம் நான் சரியாகச் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் காதுக்கு வருகின்ற செய்தியே தவிர சிமெண்ட் 165 ரூபாய்க்குத்தான் விற்கப்படுகிறது. இன்று மாலையிலேகூட சிமெண்ட் ஆலை அதிபர்களுடைய கூட்டத்தைக் கூட்டியிருக்கிறோம். விலையைக் குறைப்பதற்கு முயற்சி செய்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர்கள் சொல்வதற்கு இடையிலேயே எவ்வளவு வேறுபாடு. இவர் 140 ரூபாய் என்று சொல்கிறார். அவர் 165 ரூபாய் என்று சொல்கிறார். 25 ரூபாய் வேறுபாடு இருக்கிறது.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர்கள் சொல்வதில் எந்த மாறுபாடும் இல்லை. அதில் நேரடியாக வாங்குவதற்கு, லாரிக் கணக்கில், டன் கணக்கில் வாங்குபவர்களுக்கு விலை குறைவாகவும், விற்பனை விலையிலும் மாறுதல் இருக்கிறது. நாம் இருவரும் கோவையைச் சேர்ந்தவர்கள். கோவையில் இருக்கக்கூடிய நிலவரத்தை காலையில் தெரிந்துவிட்டு நான் கூறினேன். அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொள்ளுங்கள்.

*பிற்பகல் 12-30*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விற்பனையாளர்கள் விலை என்பது வேறு. விற்பனையாளர்களிடத்திலே வாங்குகிற விலை என்பது வேறு. விற்பனையாளர்களிடத்திலே சில்லறையிலே வாங்குகிறபோது இருக்கின்ற விலையைத்தான் நான் சொல்கிறேன். விற்பனையாளர்களுக்கான டீலர்ஸ் விலை வேண்டுமானால் குறைவாக இருக்கலாம். ஆனால் விலை அதிகம்தான். அமைச்சரே 165 ரூபாய் என்று ஒப்புக் கொண்டிருக்கிறார், அதற்குமேலே, நான் நாளையதினம் கேட்டு வந்து சொல்லுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமசாமி, அரை மணி நேரம் ஆகிவிட்டது. ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

**•திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமூர்த்தி பவனிலே சிமெண்ட் விற்றுக் கொண்டிருந்தார்கள். அங்கே 195 ரூபாய்க்கு விற்கிறார்களா? என்று அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமெண்டினுடைய விலையைக் குறைக்க வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் இந்தப் பிரச்சினையை இங்கே எழுப்பியிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்னும் சிமெண்டினுடைய விலையைக் குறைப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக அவரை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள். அடுத்த வாய்ப்பு வரும்போது பேசுங்கள். (குறுக்கீடு) கடைசி வாக்கியத்தைச் சொல்லி முடியுங்கள்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** என்னுடைய தொகுதியில் தேவகோட்டை அரசு மருத்துவமனையிலும், திருவாடனை அரசு மருத்துவமனையிலும் போதிய டாக்டர்கள் இல்லாமல் இருக்கிறார்கள். அங்கு போதிய டாக்டர்களை நியமனம் செய்துதர வேண்டும்.

அதேபோல தொண்டியில் இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையத்தை ஜி.எச்.-ஆக, அரசு மருத்துவமனையாக மாற்றித்தர வேண்டும்.

இன்னொன்று. என்னுடைய தொகுதியிலே கண்டதேவி என்ற இடத்திலே மிகப் பெரிய பிரச்சினையாக, 4 ஆண்டுகளாக தேர் ஓடாமல் இருந்தது. அந்தத் தேரை, நம்முடைய முதல்வர் அவர்களுடைய ஏற்பாட்டால் நல்லமுறையிலே எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல், அந்தத் தேரோட்டத்தை நடத்திக் கொடுத்த நமது முதலமைச்சருக்கும், அதைச் சார்ந்த அதிகாரிகளுக்கும் நாங்கள் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) நல்லது செய்யும்போது நிச்சயமாக நாங்கள் உங்களைப் பாராட்டுவோம். அதிலே தவறில்லை. மிகப் பெரிய சாதனையாக—பல பிரச்சினைகள் அதிலே இருந்தன—அதிலே ஒரு துளி இரத்தம்கூட வீணாகாமல் சுமூகமாக—பெரிய சாதிப் பிரச்சினைகள் எல்லாம் ஏற்படும் என்ற நிலை இருந்தும் அங்கே துணிவாக அந்தத் தேரோட்டத்தை நடத்திக் கொடுத்த உங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளில் தற்போது காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்களை நிரப்புவதற்காக இந்த ஆண்டு மட்டும் 500 புதிய டாக்டர்களை நியமிப்பதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். விரைவிலே தமிழ்நாடு பணியாளர் தேர்வாணைக் குழு மூலமாக இந்தப் பணி தொடங்கவிருக்கிறது என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2003 மார்ச் 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையிலே உரையாற்றுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைவிடவும் மிகச் சிறப்பாக நம்முடைய மன்னார்குடி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய ஆற்றல் எங்களுக்கே தெரியாமல் இருந்தது. எங்களுடைய வீர தீரம் எங்களுக்குத் தெரியாமல் இருந்தது. எங்களுடைய வீர பராக்கிரமங்கள் எல்லாம் எங்களுக்குத் தெரியாமல் இருந்தன. நேற்றைக்கு இங்கே உரையாற்றுகிறபோது 50 காசு சூடத்திலேயும், 50 காசு சாம்பிராணியிலேயும் ஒரு மாநிலத்தினுடைய ஆட்சியைப் பிடிக்க பாரதிய ஜனதா கட்சியினாலே முடியும் என்கிற ஓர் அற்புதமான கருத்தைச் சொன்ன அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்...(குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற அந்த அர்த்தத்தைப் பார்த்தால், குஜராத் மாதிரி ஆகிவிடுமோ என்றுகூட ஓர் அச்சம் இருக்கிறது.

**திரு. எச். ராஜா:** அதாவது, தகரம் கண்டுபிடிப்பதற்கு முன்பே உண்டியல் கண்டுபிடித்து, உண்டியல் குலுக்கி உண்டு உறங்கும் சந்தை மடம், பாரதிய ஜனதா கட்சியைப் பற்றிப் பேசக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ராஜா சொன்னதை நான் வரவேற்கிறேன். நன்றி சொல்லுகிறேன். ஏனென்றால் தகரத்தில் உண்டியலைத் தயார் செய்வது என்பது சாதாரணம் இல்லை. மனிதனுக்கு மூளை வேண்டும். விஞ்ஞான பூர்வமாக அதைச் செய்ய வேண்டும். அவர்களுக்கு அதைப்பற்றி எல்லாம் தெரியாது. அவர் கோயில் உண்டியல் குலுக்கிக் கொண்டிருப்பவர் (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் அது தெரியாது.

**திரு. எச். ராஜா:** கோயில் உண்டியல் வைப்பது நம்முடைய full time உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக அல்ல. அது மக்களுக்கு நன்மை செய்வதற்காக. இது கட்சியை வளர்ப்பதற்காக. ஆகவே வித்தியாசம் இருக்கிறது.



2003 மார்ச் 26]

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் உண்டியல் குலுக்கிப் பழக்கமே தவிர, உண்டியல் எடுத்து பழக்கம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு). சிவபுண்ணியம் நான் பேசிவிடுகிறேன். உண்டியல் குலுக்குவதைப்பற்றி மாண்புமிகு பா.ஜ.க. உறுப்பினர் சொன்னார். நாங்கள் உண்டியல் குலுக்கிப் பழக்கமே தவிர, கோயில் உண்டியலை எடுத்துப் பழக்கமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்"

என்ற திருக்குறளை முன்வைத்து என்னுடைய உரையை நிகழ்த்த முற்படுகிறேன். இன்றைக்கு பத்திரிகைகளிலேயெல்லாம் தினம் தினம் நம்முடைய அரசியல்வாதிகளைவிட மிகச்சிறப்பாக அண்ணா பல்கலைக்கழகத்திலே இருப்பவர்கள் அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். என்னவென்று சொன்னால் தனியார் பொறியியல் கல்லூரிகளிலே இந்த ஆண்டு மாணவர்களெல்லாம் எப்படி சேர்க்கப்படுவார்கள் என்று படித்துப்பார்ப்பவர்களுக்கே மிகக் குழப்பமாக இருக்கின்ற வகையிலே அறிக்கைகளை விட்டுக்கொண்டு இருக்கிறார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சரைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்திலே வருகிறபோது நம்முடைய தமிழக அரசும் தன்னை ஒரு தரப்பாக அதிலே இணைத்துக்கொண்டு இந்த உத்தரவு சரியல்ல என்று வாதாடுவதற்கு முற்படாதது ஏன் என்பதை இந்த நேரத்திலே நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அரசன் அவர்கள் சொல்வதைப்போல இதுகுறித்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் எதுவும் நிலுவையில் இல்லை.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அக்டோபர் மாதத்திலே தனியார் பொறியியல் கல்லூரிகளினுடைய உரிமையாளர்கள் எல்லாம் உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்து தனியார் சுய நிதி பொறியியல் கல்லூரிகளிலே மாணவர்களைச் சேர்ப்பதற்கு ஓர் உத்தரவினைப் பெற்றிருக்கிறார்கள். இது பத்திரிகைகளிலே எல்லாம் வந்திருக்கிறது. அதற்கு மாற்றாக ஒரு ஏற்பாட்டை நம்முடைய அரசாங்கம் செய்திருக்கிறது. இப்போது இல்லை என்பது வேறு. ஆறு மாத காலத்திற்கு முன்னாலே வழக்கு வந்தது. அப்படி வழக்கு வருகின்றபோது நம்முடைய தமிழக அரசு தன்னையும் ஒரு கட்சியாக அதிலே இணைத்துக்கொண்டு நம்முடைய கருத்துக்களைச் சொல்லி, தனியார் பொறியியல் கல்லூரி உரிமையாளர்கள் இப்படிப்பட்ட ஓர் உத்தரவினைப் பெறாத அளவிற்கு முயற்சிக்கவில்லை என்பதை நான் கோடிட்டுக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால்....

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைத் தர வேண்டாம். அன்றைக்கே உச்ச நீதிமன்றத்திலே வழக்கு நடைபெற்றபோது State-ம் ஒரு Impleading Petition போட்டு தன்னை இணைத்துக்கொண்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, நன்றி. அதற்குப் பின்னாலே இன்றைக்கு உத்தரவினைப் பெற்று....

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்திலே இருக்கின்ற மணிபால், திரு. டி.ஏ.பை. என்ற நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் வழக்கு தொடர்ந்து உச்ச நீதிமன்றத்திலே தீர்ப்பினைப் பெற்றார்கள், அவர்களுக்கு சாதகமாக. அந்த சாதகமான உத்தரவு தனியார் பொறியியல் கல்லூரிகளுக்கு ஆதரவாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி அதை நீக்குவதற்காக தமிழக அரசு மேல் முறையீடு செய்ய அக்டோபர் 30-லிருந்து இதுவரையிலே நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டை.....

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணி அவர்கள் உச்ச நீதிமன்றத்திலே சொல்லப்பட்ட தீர்ப்பிற்கு ஏன் அப்பீல் செய்யவில்லையென்று கேட்கிறார்கள். நான் ஒன்றைத் தெளிவாகச் சொல்கிறேன். வழக்கறிஞர்கள் இங்கே நிறைய இருக்கிறார்கள். உயர் நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில் ஒரு நீதிபதி



சொன்ன தீர்ப்புக்கு Bench-க்கு அனுப்பலாம். இரண்டு நீதிபதிகள் தீர்ப்பு சொல்லலாம். அந்த இரண்டு நீதிபதிகள் சொல்கின்ற தீர்ப்பிற்கு சுப்ரீம் கோர்ட்டிற்கு அப்பீல் செய்யலாம். ஆனால், இந்தத் தீர்ப்பு *11* Judge-கள் அடங்கிய முழு Bench தீர்ப்பு. இதற்கு அப்பீலே கிடையாது. அப்பீல் செய்ய முடியாது. *(குறுக்கீடு)* No, No அது தவறான தகவல். அதைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

•**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுப்ரீம் கோர்ட்டில் *11* நீதிபதிகள் அடங்கிய ஒரு Constitution Bench, Full Bench அமர்ந்து ஒரு தீர்ப்பு சொன்ன பிறகு அதன் மீது மீண்டும் மேல் முறையீடு செய்வதற்கு சட்டத்திலேயே இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்று, நீதிமன்றம் வாயிலாக அதைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கலாம். அதே நேரத்திலே 69 சதவிகித இடஒதுக்கீடு கொடுப்பதாக நம்முடைய தமிழக அரசு முயற்சிகளை எடுத்தது. உச்ச நீதிமன்றம் 50 சதவீதம் என்று வரையறுத்துச் சொல்லிவிட்ட பிறகு மீண்டும் அந்த 69 சதவீத இடத்தை வழங்குவதற்கு அரசு என்ன முயற்சிகளை மேற்கொண்டதோ அதைப்போலவாவது முயற்சிகளை எடுக்கலாம் அல்லவா? அந்த முயற்சிகளைக்கூட நம்முடைய தமிழக அரசு எடுக்கவில்லை என்பதுதான் உண்மை.

*பிற்பகல் 12-40*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் கூறியதுபோல சட்டத்திருத்தம் கொண்டு வரலாம். Education is in the Concurrent list. It falls under the purview of the Union list of Government of India. மைய அரசிலே நீங்கள் இடம் பெற்றிருக்கிறீர்கள். மைய ஆட்சியிலே நீங்கள் இடம் பெற்றிருக்கிற காரணத்தால் மைய அரசில் முயற்சித்து சட்டத் திருத்தம் கொண்டு வருகிற பொறுப்பை நீங்கள்தான் எடுக்க வேண்டும். நாங்கள் மைய ஆட்சியிலே இல்லை.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. ஜி.கே. மணி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் சட்டத் திருத்தம் என்பது நாடாளுமன்றத்தின் வாயிலாகக் கொண்டுவருவது உண்மை; அதை நான் மறுக்கவில்லை. அதே நேரத்திலே கல்வித் துறை என்பது தமிழக அரசின் கட்டுப்பாட்டிலே இருக்கிறது. உச்ச நீதிமன்றம் சொல்லியிருந்தாலும்கூட, அதை நீதிமன்றத்தின் வாயிலாகவோ அல்லது அந்த மக்களுக்கு நன்மைகளைச் செய்யக்கூடிய வகையிலோ ஏதாவது மாற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமா, வேண்டாமா? அதை விடுத்து, பொறியியல் கல்லூரிச் சங்கங்கள் என்ன சொல்கிறதோ....

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** இல்லை, இல்லை, தவறு. (குறுக்கீடு) இல்லை, இல்லை. அப்படியில்லை. (குறுக்கீடு) அது தவறு, நீங்கள் சொல்வது தவறு, நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது A.I.C.T.E.-யில் guide lines கொடுத்திருக்கிறார்கள். அதனுடைய guide lines படிக்கு, தனியார் சுய உதவிக் கல்லூரிகளிலே Non-minority Institutions-லே 15% management quota-வுக்கும் Minority Institutions-லே 50% Management quota-வுக்கும் கொடுக்க வேண்டுமென்று அதிலே guide lines இருக்கிறது. ஆகவே பாரதிய ஜனதா கட்சியின் கோரிக்கை, அதையும் இங்கே அப்படியே செயல்படுத்த வேண்டுமென்பது. ஏன் என்றால், அங்கே ஏற்கெனவே 50 சதவீதம் Non-minority-க்கும், 70 சதவீதம் minority-க்கும் quota கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை, மத்திய A.I.C.T.E guide lines-படி செயல்படுத்த வேண்டுமென்பது பாரதிய ஜனதாவினுடைய கோரிக்கை.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** இல்லை, இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ராஜா அவர்கள் இந்தக் கருத்தைச் சொல்கிறார். அவர் சொல்வதற்கு முன்பாகவே, தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், 70 சதவீதம் minority-க்கு ஒதுக்கினாலும், அவர்கள் அந்த இடங்களைப் பூர்த்தி செய்ய முடியாத பட்சத்தில் நமக்கு surrender செய்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதோடு, முழுக்க முழுக்க அவர்கள் minority-களை அங்கு சேர்க்க முடியாத நிலையில், மற்றவர்களுக்கும் அதிலே வாய்ப்பு கொடுப்பதற்கும் நாங்கள் அவர்களுக்கு அனுமதி



வழங்கியிருக்கிறோம். எனவே இதிலே எந்தக் குறைபாடும் இருக்கத் தேவையில்லை. தமிழகத்திலே இருக்கிற அனைத்து நலிந்தவர்களுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் இடம் கிடைப்பதிலே எந்தத் தடையும் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். இடஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில், தனியார் கல்லூரிகள் மாணவர்களைச் சேர்க்கிறபோது எங்களுடைய வழிமுறையின்படி நாங்கள் சொல்லியிருப்பது கட்டாயமாக இடஒதுக்கீட்டைப் பின்பற்ற வேண்டுமென்று உறுதியாகச் சொல்லியிருக்கிறோம், உத்தரவிட்டிருக்கிறோம். அதைப் பின்பற்றுவதாக அவர்களும் உறுதியளித்திருக்கிறார்கள். அந்த அறிவிப்பு வந்த பிறகு உங்களுடைய கட்சியினுடைய நிறுவனத் தலைவரே, இது எங்களுக்கு, அதாவது எதிர்க்கட்சிகளுக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றி என்று அவரே பாராட்டிருக்கிறார்.

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தனியார் சுய நிதிக் கல்லூரிகள் இந்த reservation-ஐ follow செய்ய வேண்டுமென்று, reservation policy-யைப் பின்பற்ற வேண்டும் என்று உத்தரவிட்ட பிறகு உங்களுடைய தலைவரே அதை வரவேற்று அவருக்குக் கிடைத்த வெற்றியாகச் சொல்லியிருக்கிறார். எனவே இதிலே இட ஒதுக்கீடு பின்பற்றப்படவில்லை, இட ஒதுக்கீட்டை நாங்கள் முழுமையாகப் பின்பற்றவில்லை என்பதற்கு இடமே இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, இதிலே விவாதத்திற்கு இடமில்லை. நீங்கள் பேசும்போது, வாய்ப்பு கிடைக்கும்போது பேசுங்கள். (குறுக்கீடு) பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது பேசுங்கள். அவருடைய வாய்ப்பு பறிபோய்விடும். (குறுக்கீடு) அரசன், பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசக்கூடிய வாய்ப்பு. வரும்போது பேசுங்கள். (குறுக்கீடு) முக்கியமான பிரச்சினைதான். உங்கள் வாய்ப்பு வருகிறபோது விளக்கமாகப் பேசுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். இதிலே இனி விவாதம் வளர வேண்டாம். அவர் உரையை முடிக்கட்டும். அவர் பேசி முடிக்கட்டும். திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் இன்னொன்றையும் கொண்டுவர விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, அடுத்து உங்களுடைய உறுப்பினர் பேசும்போது சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடு) அது இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை; சரிதான். நீங்கள் பேசுகிறபோது வாய்ப்பு இருக்கிறது. அதிலே பேசுங்கள். இப்போது அவருடைய வாய்ப்பைப் பறிக்காதீர்கள். அரசன், பேசுங்கள்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இன்னொன்றையும் நான் கொண்டுவர விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருக்கிறபோது மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலே முதல் மூன்று வகுப்பில் தமிழிலேதான் பயிற்றுவிக்க வேண்டுமென்று ஓர் உத்தரவைப் போட்டார்கள். ஒரு நாட்டினுடைய வளர்ச்சிக்கு தாய் மொழியிலேதான் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்று பெரியவர்களெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அப்படி அவர்கள் உத்தரவிட்டதை நம்முடைய உயர் நீதிமன்றம் இரத்து செய்து நம்முடைய அரசு உச்ச நீதிமன்றத்திலே மேல் முறையீடு செய்திருக்கிறது. சென்ற ஆண்டும் அந்தச் சட்டம் நடைமுறைக்கு வரவில்லை. இந்த ஆண்டாவது உச்ச நீதிமன்றத்தை நம்முடைய அரசு அணுகி, மிக விரைவிலே மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலே முதல் மூன்று வகுப்புகளிலே மாணவர்களுக்கு தமிழிலே கற்பிப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று நான் நம்முடைய கல்வியமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அரசன் அவர்கள் சொன்னதைப்போல நீதிமன்றத்திலே இந்த வழக்கு இருப்பது உண்மை. ஒரு மொழியை பயிற்று மொழியாகவோ, பாட மொழியாகவோ பயில ஒருவரைக் கட்டாயப்படுத்தக்கூடாது, ஒருவர் மீது திணிக்கக்கூடாது என்பது நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, இன்றைக்கு தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 872 மெட்ரிக்குலேஷன் பள்ளிகளிலே தமிழே இல்லாமல் அந்த மாணவர்கள் படித்து வருகிறார்கள். அதைப்



பல தலைவர்கள்கூட இங்கே சுட்டிக்காட்டினார்கள். ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் இருமொழிக் கொள்கையிலும், அதேபோல, தமிழை கட்டாயமாக தமிழகத்திலே இருக்கிற அனைத்துப் பள்ளிகளிலும் படிக்கிற மாணவ மாணவியர் படித்தாக வேண்டும் என்ற அந்த நிலையிலே எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உறுதியாக இருக்கிறார்கள். ஆனால் கோர்ட்டினுடைய தீர்ப்பின் அடிப்படையிலே அதை அமல்படுத்த முடியாத ஒரு நிலையிலே, இன்றைக்கு இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதற்கும் ஒரு வழியைக் கண்டுபிடித்து தமிழகத்திலே இருக்கிற அனைத்துப் பள்ளிகளிலும்-அது மெட்ரிகுலேஷன் பள்ளியாக இருக்கட்டும் அல்லது தனியார் சுய நிதிப் பள்ளியாகட்டும் அல்லது அரசுப் பள்ளியாகட்டும், தமிழகத்திலே இருக்கிற அனைத்துப் பள்ளிகளிலும்-தமிழை கட்டாயமாகப் படிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குகிற வகையில் நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதற்கும் வழி கண்டிருக்கிறார்கள். அது கல்வி மானியக் கோரிக்கையின்போது புதிய அறிவிப்பாக அறிவிக்கப்படும் என்ற அந்தச் செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோல தமிழகத்திலே மிகக் குறிப்பாக இரண்டு பிரச்சினைகள் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒன்று நம்முடைய காவிரி நதிநீர்ப் பிரச்சினை. இன்னொன்று பவானி ஆற்றின் குறுக்கே கேரள அரசு கட்டுகிற அணைக்கட்டினுடைய பிரச்சினை**

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எந்த அடிப்படையில் பேசுகிறார் என்று தெரியவில்லை. இதுவரை தமிழ்நாட்டில் இருந்த முதலமைச்சர்களிலேயே காவிரிப் பிரச்சினையில் எப்போதும் அதிக அக்கறை காட்டிய முதலமைச்சர் நான்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே அர்த்தமற்ற இத்தகைய குற்றச்சாட்டுகளைச் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசன், ஏற்கெனவே இதை நீங்கள் சொல்லி, முதலமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார்கள். மறுபடியும் அதையே ஏன் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? *(குறுக்கீடுகள்)*

**திரு. ப. அரசன்:** மாண்புகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள்மீது நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, காவிரிப் பிரச்சினையை விட்டுவிட்டு, வேறு பிரச்சினை ஏதாவது பேசுங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்புகளைச் சரியாகத் தயாரித்துக் கொண்டு பேசினால் நலமாக இருக்கம். ** நடுவர் மன்றத்தின் முன்னால், இந்த வழக்கு 1991 ஆம் ஆண்டிலிருந்தே இருக்கிறது. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசன் பேசியது அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. காவிரிப் பிரச்சினை தொடர்பாக அவர் சொன்னது அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. அடுத்த பிரச்சினை ஏதாவது பேசுங்கள்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையிலே பல்வேறு திட்டங்களையெல்லாம் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். பல்வேறு வரவேற்கத்தக்க திட்டங்களையெல்லாம் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களைப் பாராட்டவும், வாழ்த்தவும் கடமைப்பட்டிருக்கிறேன். பக்கம் 14-ல் இன்றியமையாத வளர்ச்சித் தேவைகள் என்கிற தலைப்பின் கீழே வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் மலரியல் போன்ற துணை வேளாண்மைப் பணிகள், கால்நடை வளர்ப்பு, மீன் வ்ளம், பாசனம், ஊரக வளர்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கிய முதன்மைத் துறைக்குப் புத்துணர்வு அளிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-50*

தேசப் பிதா காந்தி அவர்கள் கிராமத்திலேயிருந்துதான் பொருளாதார வளர்ச்சி வர வேண்டுமென்று சொன்னார்கள். அதை மனதிலே கொண்டு நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



கிராமப்புறத்திலிருந்து, வளர்ச்சிக்கான திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல பக்கம் 15-லே 'வேலைவாய்ப்பு வசதிகளைப் பெருக்குவதற்காக, தகவல் தொழில்நுட்பவியல், சுற்றுலா ஆகியவற்றை உள்ளடக்கிய பணிகள் துறைகளுக்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்படும்' என்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் இந்த நேரத்திலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கு அடுத்தாற்போல அனைத்துக் கிராமங்களிலும் உள்ள தனிப்பட்ட உழவர்களுக்குச் சொந்தமான நிரந்தரமான மற்றும் நடப்பு நிலவரப்படியான தரிசு நிலங்களை, வேளாண் அடிப்படையிலே ஆய்வு செய்து சிறந்த அணுகுமுறை மூலம், ஆதாயம் தரத்தக்க பொருளாதார நடவடிக்கைகளின்கீழ் கொண்டு வரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்காகவும் நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், விவசாயத்தை... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2 மணித் துளிகளில் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. ப. அரசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் நாடாளுமன்ற இடைத் தேர்தலிலிருந்து இரட்டை இலைக்கு வாக்குகளைத் தாருங்கள் என்று கேட்டுக் கேட்டு, இந்த இரண்டு நிமிடம் என்பதை தாங்கள் மறக்காமல் இருக்கிறீர்கள். எனக்கு 5 நிமிடம் பேசுவதற்குத் தரவேண்டும் என்பதை நான் உங்களிடத்திலே பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே ஒரு நிமிடம் போய்விட்டது. இன்னும் ஒரு நிமிடம்தான் பேச இருக்கிறது.

**திரு. ப. அரசன்:** குறுக்கீடுகள் நிறைய இருந்த காரணத்தினாலே எனக்கு மேலும் 5 நிமிடங்கள் பேச வாய்ப்பு தர வேண்டுமென்று நான் உங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தரிசு நில மேம்பாட்டைப் பொறுத்தவரையிலும் தனியாரிடத்திலே கொடுப்பதைவிட, கிராமங்களில் எந்தெந்த விவசாயிகளிடத்திலே தரிசு நிலங்கள் இருக்கின்றன என்பதை ஆய்வு செய்து அவர்களுக்கு அரசு உதவி செய்து...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றுதான் இந்தப் பேரவையில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தனியாருக்கு நிலம் வழங்கப்படமாட்டாது என்று தெளிவாக அறிவித்தேன். மாண்புமிகு உறுப்பினர் விவரம் அறிந்து பேசினால் நலமாக இருக்கும்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்போது நான் அவையிலே இல்லை என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே தரிசு நில மேம்பாட்டில் தனிப்பட்டவர்களை ஊக்குவித்து, அவர்களுடைய கிராமப் பொருளாதாரம் வளர்வதற்கான வாய்ப்பினை நல்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பாசனத் தொகுப்புக்கு உட்பட்ட மற்றும் உட்படாத நீர்நிலைகளைத் தூர்வாரி புதுப்பிப்பதற்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள். இந்த 100 கோடி ரூபாய் போதாது. இன்னும் கொஞ்சம் அதிகமாக நிதி ஒதுக்கித் தர வேண்டுமென்று நான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதற்குப் பின்னால், 100 ஏக்கருக்குக் குறைவான ஆயக்கட்டினைக் கொண்டுள்ள ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டிலே இருக்கக்கூடிய நீர்நிலைகளுக்காக 50 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். இதை 385 ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பிரித்துப் பார்த்தால், ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 13 இலட்சம் ரூபாய்தான் வருகிறது. இதற்கும் கொஞ்சம் கூடுதலாக நிதி ஒதுக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. இராஜரெத்தினம்.

**திரு. ப. இராஜரெத்தினம்:** வள்ளன்மையோடு வாரி வழங்கும் வான் மேக நெஞ்சம் கொண்டு, கள்ள சிந்தை கொண்டு வரும் பகையை துள்ளியெழுந்து, துண்டாடி, தூளாக்கி, தமிழகத்திலே பொற்கால நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கிற, என்னை வாழ வைத்த தெய்வமாம் தமிழகத்தின் ஒப்பற்ற முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருப்பாதங்களில் என்னுடைய நன்றியை பணிவாகச் சமர்ப்பித்து இந்த உரையைத் தொடங்குகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகத்திலே பிறந்தவர் ஜெகத்தினை ஆளுவார் என்ற முதுமொழியை மெய்மொழியாக்கி, இன்றைக்குத் தமிழகத்தை வாழவைத்துக் கொண்டிருக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே, 2003-2004 ஆம் ஆண்டிலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற அற்புதம் கலந்த, அருமையான, இன்னும் சொல்லப்போனால், தித்திக்கும் தேனாய், தெவிட்டாத தெள்ளமுதாய், இனிக்கின்ற வரவு-செலவுத் திட்ட அறிக்கையை நான் சார்ந்திருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வரவேற்றுப் பேச விழைகிறேன்.

பிற்பகல் 12-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தப் பொது விவாதத்திலே பேசுவதற்கு முன்னால், இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு நான் சார்ந்திருக்கின்ற பெரம்பலூர் மாவட்டத்தின் சார்பாக பணிவான நன்றியைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் என்று சொன்னால், 1995 ஆம் வருடத்திலே இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்லாட்சி நடத்திய நேரத்திலே ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்தைப் பிரித்து, பெரம்பலூர் மாவட்டத்திலே தாழ்த்தப்பட்ட மக்கள் நிறைந்து வாழ்கிறார்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் நிறைந்து வாழ்கிறார்கள், அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்று அம்மா அவர்கள் திருச்சி மாவட்டத்தைப் பிரித்து, பெரம்பலூர் என்ற தனி மாவட்டமாகக் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு, 1996-லேயிருந்து 2001 வரை 5 ஆண்டு கால திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே பெரம்பலூர் மாவட்டம் வஞ்சிக்கப்பட்டிருந்த நிலைமையை மாற்றி கடந்த 6-3-2003 ஆம் தேதி அன்று, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெரம்பலூருக்கு வந்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். 200 கோடி ரூபாய்க்கு ஏழை எளிய மக்களுக்கு வளர்ச்சித் திட்டங்களை, நல்ல திட்டங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரத்தால் பெரம்பலூருக்கு வருகை தந்து அம்மா அவர்கள் கொடுத்தார்கள். தாயே, அதற்காக பெரம்பலூர் மாவட்ட மக்களின் சார்பாக என்னுடைய பணிவு கலந்த நன்றியை முதலிலே உங்களுடைய பாதங்களிலே வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எனக்கு முன்னாலே நேற்றும், நேற்றைய முன்தினமும் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் கேட்டார்கள். இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால், தி.மு.க. உறுப்பினர் மாண்புமிகு ஸ்டாலின் அவர்கள் கேட்டார்கள். என்ன ஆச்சு, என்ன ஆச்சு என்று கேட்டார்கள். நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். 1996 முதல் 2001 வரை நீங்கள் செய்து வைத்திருந்த நிதிச் சீர்கேட்டை இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சரி செய்துகொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 1996 முதல் 2001—லே நீங்கள் வீணான திட்டங்களை, விரயமான திட்டங்களை, வெற்றுத் திட்டங்களை, பகட்டான திட்டங்களைப் போட்டதனால் தமிழகம் black-list-க்கு வரக்கூடிய ஒரு சூழ்நிலையைத் தடுத்து நிறுத்திய பெருமை தமிழகத்தை ஆண்டுகொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு. அதுமட்டுமல்லாமல் bankrupt என்று சொல்வார்களே, திவாலாகக்கூடிய ஒரு சூழ்நிலையிலே தமிழகத்தினுடைய கஜானாவை நீங்கள் வைத்துவிட்டுச் சென்றீர்கள். அவற்றையெல்லாம் இன்றைக்கு தமிழகத்தின் முதலமைச்சர் தன்னுடைய அறிவுபூர்வமான சிந்தனையாலே, தன்னுடைய அறிவுபூர்வமான திட்டங்களினாலே சீர் செய்து, திவாலாகக்கூடிய சூழ்நிலையை மாற்றி தமிழகத்தைக் காப்பாற்றிய பெருமை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு என்பதை இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் கேட்டார்கள். எவ்வளவு வளர்ச்சி உங்களுடைய ஆட்சியிலே ஏற்பட்டு இருக்கிறது என்று கேட்டார்கள். நான் பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த நிதிநிலை அறிக்கை என்பது வேலைவாய்ப்பைப் பெருக்கக்கூடிய வகையிலே தீட்டப்பட்டிருக்கின்றது. வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற மக்களின் நலனைக் காக்கின்ற வகையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே இந்த நிதிநிலை அறிக்கை இன்றைக்கு சிறப்பாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் ஒட்டுமொத்த தமிழகத்தினுடைய பொருளாதார வளர்ச்சியை, பொருளாதார முன்னேற்றத்தை மையப் பொருளாக வைத்து புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து



இருக்கிறார்கள் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Gross State Domestic Product என்று சொல்வார்களே, GSDP அதிலே Primary Sector-லே 1 சதவிகிதத்திலே இருக்கின்ற வளர்ச்சியை 6 சதவிகிதமாக இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயர்த்துவதற்கு திட்டம் தீட்டியிருக்கிறார்கள். அதேபோல Secondary Sector என்று சொல்லப்படுகின்ற அந்தத் துறையிலே 8 சதவிகிதமாக இருக்கின்ற வளர்ச்சியை 16 சதவிகிதமாகக் கொண்டுவருவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திட்டம் தீட்டியிருக்கின்றார்கள். Service Sector என்று சொல்லப்படுகின்ற துறையிலே 15 சதவிகிதமாக இருக்கின்ற வளர்ச்சியை 18 சதவிகிதமாக உயர்த்துவதற்கு இதய தெய்வம் தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைக்கு திட்டத்தைத் தீட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஒருபுறத்திலே வேலைவாய்ப்பைப் பெருக்க வேண்டும்; மறு புறத்திலே—புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தெளிவாக ஒரு பேட்டியிலே 'Attack on poverty is my priority' என்று சொன்னார்கள்—வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்களை உயர்த்துவதுதான் என்னுடைய முதன்மையான இலட்சியம் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னார்களே, அதை மையப்படுத்தித்தான் இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கின்றது என்பதை நான் பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1-00

இன்னொன்றையும் தெளிவாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதய தெய்வம். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருபுறத்திலே விவசாயிகளுடைய நலனை உயர்த்துவதற்காக பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். மறுபுறத்திலே சாதாரண, சாமானிய ஏழை மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்னொருபுறத்திலே ஆலைகளும், தொழிற்சாலைகளும் ஆலயங்களாகத் திகழக்கூடிய ஒரு சூழ்நிலையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 13-7-2001-லே, Confederation of Indian Industry என்று சொல்லப்படுகின்ற அந்தக் கூட்டமைப்புக்குச் சென்று, அங்கே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தக்

இருக்கிறார்கள் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Gross State Domestic Product என்று சொல்வார்களே, GSDP அதிலே Primary Sector-லே 4 சதவிகிதத்திலே இருக்கின்ற வளர்ச்சியை 6 சதவிகிதமாக இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயர்த்துவதற்கு திட்டம் தீட்டியிருக்கிறார்கள். அதேபோல Secondary Sector என்று சொல்லப்படுகின்ற அந்தத் துறையிலே 8 சதவிகிதமாக இருக்கின்ற வளர்ச்சியை 16 சதவிகிதமாகக் கொண்டுவருவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திட்டம் தீட்டியிருக்கின்றார்கள். Service Sector என்று சொல்லப்படுகின்ற துறையிலே 15 சதவிகிதமாக இருக்கின்ற வளர்ச்சியை 18 சதவிகிதமாக உயர்த்துவதற்கு இதய தெய்வம் தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைக்கு திட்டத்தைத் தீட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஒருபுறத்திலே வேலைவாய்ப்பைப் பெருக்க வேண்டும்; மறு புறத்திலே— புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தெளிவாக ஒரு பேட்டியிலே 'Attack on poverty is my priority' என்று சொன்னார்கள்—வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்களை உயர்த்துவதுதான் என்னுடைய முதன்மையான இலட்சியம் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னார்களே, அதை மையப்படுத்தித்தான் இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கின்றது என்பதை நான் பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 1-00*

இன்னொன்றையும் தெளிவாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருபுறத்திலே விவசாயிகளுடைய நலனை உயர்த்துவதற்காக பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். மறுபுறத்திலே சாதாரண, சாமானிய ஏழை மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்னொருபுறத்திலே ஆலைகளும், தொழிற்சாலைகளும் ஆலயங்களாகத் திகழக்கூடிய ஒரு சூழ்நிலையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 13-7-2001-லே, Confederation of Indian Industry என்று சொல்லப்படுகின்ற அந்தக் கூட்டமைப்புக்குச் சென்று, அங்கே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தக்





கூட்டமைப்பிலே பேசுகின்ற நேரத்திலே தெளிவாகச் சொல்கிறார்கள். புரட்சித் தலைவி சொல்கிறார்; தொழிலதிபர்கள் கூடியிருக்கின்ற அந்தக் கூட்டத்திலே, புரட்சித் தலைவி, தமிழகத்தினுடைய முதலமைச்சர், அந்தத் தொழிலதிபர்களை, 'தமிழ்நாட்டிற்கு வாருங்கள், தமிழ்நாட்டிலே முதலீடு செய்யுங்கள், தமிழ்நாட்டிலே இருக்கின்றவர்களுக்கு வேலைவாய்ப்பைத் தாருங்கள்' என்று தெரிவிக்கின்ற நேரத்திலே, அம்மா அவர்கள் அற்புதமாக ஓர் உரையை ஆற்றுகின்றார். அந்த உரையிலே கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார்:

"My Government has pledged to make Tamil Nadu the most attractive investment destination in India. To achieve this, we have proposed to initiate several business policies such as investors friendly and transparent decision making, high priority to infrastructure development, human resources development, continuous efforts to improve the power availability" என்று தெளிவாகக் குறிப்பிடுகின்றார். இதன் வாயிலாக தமிழகத்திலே இன்றைக்குத் தொழிலதிபர்கள் வந்து குவிந்தவண்ணம் இருக்கிறார்கள். இந்தியாவிலே 29 மாநிலங்கள் இருந்தாலும்கூட, இன்றைக்குத் தொழில் துறையாக இருந்தாலும் சரி, அல்லது Information Technology என்று சொல்லப்படுகின்ற தகவல் தொழில்நுட்பவியல் துறையாக இருந்தாலும் சரி, அவர்கள் தேர்ந்தெடுக்கக்கூடிய மாநிலம், இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆண்டு கொண்டிருக்கின்ற மாநிலம்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு கல்வித் துறையிலே மிக அற்புதமான சாதனைகளை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் படைத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் ஒரு பட்டியலை வாசிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே, 1996 முதல் 1997 வரை Primary School என்று சொல்லப்படுகின்ற தொடக்கப் பள்ளிகள் 85 தொடங்கப்பட்டதாக ஒரு குறிப்பு இருக்கிறது. அதைப்போல நடுநிலைப் பள்ளிகள் 21, உயர்நிலைப் பள்ளிகள் 99, மேல்நிலைப் பள்ளிகள் 81 தொடங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இதயதெய்வம் அம்மா அவர்கள், கடுமையான நிதி நெருக்கடியிலே, மிக இக்கட்டான ஒரு சூழ்நிலையிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நம்மை தத்தளிப்பிற்கு உள்ளாக்கிவிட்டுச் சென்ற நேரத்திலும்கூட, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு 2001-2002-லே தமிழகத்திலே, புரட்சித்

தலைவி அம்மா அவர்களுடைய ஆணையினால் தொடங்கப்பட்ட தொடக்கப் பள்ளிகள் 452; நடுநிலைப் பள்ளிகள் 197; உயர்நிலை பள்ளிகள் 100; மேல்நிலைப் பள்ளிகள் 125. அதேபோல 2002-2003 ஆம் ஆண்டிலே தொடக்கப் பள்ளிகள் 304; நடுநிலைப் பள்ளிகள் 479; உயர்நிலைப் பள்ளிகள் 120; மேல்நிலைப் பள்ளிகள் 135;. இந்த ஒப்பீட்டிலேயிருந்து நீங்கள் நன்றாகப் புரிந்துகொள்ளலாம். கல்வித் துறையிலே மாபெரும் சரித்திரப் புகழ் மிக்க ஒரு புரட்சியை ஏற்படுத்துவதற்காக, தமிழகத்திலே இருக்கிற மக்கள் அனைவரும் கல்வி என்று சொல்லப்படுகின்ற அந்த இலட்சியத்தை எய்துவதற்காக இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் கல்வித் துறையிலே அற்புதமான சாதனைகளையெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அதற்குப் பிறகு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, நான் காவல் துறையைச் சேர்ந்த ஒரு சாதாரண காவலர், போலீஸ்காரருடைய பையன். இன்றைக்கு காவல் துறை முழுவதும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பெருமைகளைப் பேசிக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலே எத்தனையோ முதல்வர்கள் இருந்தாலும்கூட, எந்த ஒரு முதல்வரும் ஒரு சாதாரண constable-ஐ, காவல் துறையைச் சார்ந்த ஒரு காவலரை கோட்டையிலே தன்னுடைய அறையிலே நேரடியாக அழைத்து, அவர்களுடைய குறைகளைக் கேட்டதாக வரலாறு இல்லை. ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 5 நாட்கள் ஒதுக்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காவல் துறையினருடைய குறைகளைக் கேட்பதற்காக 5 நாட்களை ஒதுக்கி, 10,519 பேர்களிடத்திலே குறைகளைக் கேட்டு, அவர்களுடைய குறைகளைப் போக்கிய ஒரே முதல்வர் இந்தியத் துணைக் கண்டத்திலே புரட்சித் தலைவி அம்மா ஒருவர்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நல்ல நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, தீட்டப்படுகின்ற திட்டங்கள் ஏழை மக்களுடைய இதயங்களைத் தொட்டாக வேண்டும் என்பதை இலட்சியமாகக் கொண்டவர்தான் நம்முடைய அன்னை புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆதிதிராவிட மக்களுக்கு, அவர்களுடைய நலனைப் பாதுகாப்பதற்கு அம்மாவைத் தவிர யாருமே, எந்த முதல்வருமே எந்தக் கால கட்டத்திலுமே, எந்தச் சாதனையும் செய்ததில்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





பிற்பகல் 1-05

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2001-லே ஆட்சிக் கட்டிலிலே அமர்ந்தார்கள். அமர்ந்தவுடன் தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு plus One, plus Two படிக்கின்ற பெண்களுக்கு இலவச சைக்கிளை வழங்கினார்கள். பாரதி சொன்னானே,

'பட்டங்க ளாள்வதுஞ், சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்'

என்று சொன்னானே, அந்த மகாகவியினுடைய ஒரே இலக்கணமாகத் திகழக்கூடிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த இரண்டு ஆண்டுகளிலே 1,05,000 மகளிருக்கு, ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த பெண்களுக்கு மிதி வண்டியைக் கொடுத்து அவர்களுடைய கல்வியின் தரத்தை உயர்த்தியிருக்கிறார் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இன்றைக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி சரித்திர சாதனைகளை, இப்படி அற்புதங்களை ஆற்றிக் கொண்டிருக்கின்ற நேரத்தில்தான், இன்றைக்கு எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கோயபல்ஸ் பிரச்சாரத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள். கோயபல்ஸ் பிரச்சாரத்தைச் செய்வது அவர்களுக்கு ஒன்றும் புதிதல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருக்குப் புதிதல்ல. நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஜெர்மனியை ஆண்ட ஹிட்லரிடம் ஒருவர் இருந்தார். அவரை கோயபல்ஸ் என்று சொல்வார்கள். உலகத்திலே அண்டப் புளுகு என்பதற்கு ஓர் உதாரணம் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கோயபல்ஸ் என்று சொல்வார்கள். அவர் சொல்வாராம் "Repeat a lie hundred times, it becomes truth" என்று சொல்வாராம். அதைப்போல திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருக்கு இது ஒன்றும் புதிதல்ல. நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 1984-லே புரட்சித் தலைவர் அவர்கள் புரூக்ளின் மருத்துவமனையிலே இருந்த நேரத்திலே இதே தி.மு.க. தலைவர் கருணாநிதி பொய்ப் பிரச்சாரத்தைச் செய்தார். புரட்சித் தலைவருடைய உடல் நலத்தைப் பற்றிக் கொச்சையாகப் பேசினார். ஐஸ் பெட்டியில் வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார். ஆனால் அன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைக்

காப்பாற்றியது, தமிழக மக்களைக் காப்பாற்றியது நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கருணாநிதியினுடைய கோயபல்ஸ் பிரச்சாரத்தை தமிழகம் முழுவதும் சுற்றிச் சுழன்று பிரச்சாரம் செய்து புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நலமோடு இருக்கிறார். அவரை நான் தமிழகம் முழுவதும் அழைத்து வருகிறேன் என்று அன்றைக்குச் சொன்னவர் நம்முடைய புரட்சித் தலைவி. அன்றைக்கே தமிழக மக்கள் 1984-லேயே புரட்சித் தலைவியினுடைய வாக்கை நம்ப ஆரம்பித்துவிட்டார்கள்.

அதற்குப் பிறகு 1996—2001-லே நடந்த கதை உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். இதே அவையிலே ராஜீவ் காந்தி கொலையாளிகளான தணுவும், சிவராசனும் அம்மா அவர்களோடு படத்திலே இருக்கிறார் என்று ஒரு போட்டோவைக் காண்பித்து, கருணாநிதி அவர்கள் சொன்னார்கள். ஒரு பழமொழி சொல்வார்கள், பேரவைத் தலைவர் அவர்களே, கெட்டிக்காரனுடைய புளுகு எட்டு நாட்கள் வரையிலும் என்று சொல்வார்கள். ஆனால் காலையிலே 10—1/2, 11-00 மணி வாக்கிலே முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்கள் இதே இடத்திலே ஒரு புகைப்படத்தைக் காட்டுகிறார். ஆனால் புரட்சித் தலைவி அவர்கள், கெட்டிக்காரர் புளுகு எட்டு நாட்கள் வரை என்கிற பழமொழியைப் பொய்யாக்கிவிட்டு 8 மணி நேரத்திலே, அவர்கள் தணுவும் அல்ல, சிவராசனும் அல்ல, அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் வழக்கறிஞர்கள் நஞ்சே கவுடா, தாட்சாயினி என்று அன்றைக்கு அந்த கோயபல்ஸ் பிரச்சாரத்தை முறியடித்த பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும் என்பதை இந்த நேரத்திலே நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டுத் துறையாக இருந்தாலும் சரி, எந்தத் துறையாக இருந்தாலும் சரி hat-trick என்று ஒரு வார்த்தை சொல்வார்கள். அதாவது தொடர்ந்து மூன்று முறை வெற்றி மேல் வெற்றி பெற்று சாதனை செய்வதை hat-trick என்று சொல்வார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு பொய்ப் பிரச்சாரங்களை எல்லாம் முறியடித்துவிட்டு, புரட்சித் தலைவி அவர்கள், துள்ளுகின்ற மின்னலாய் இருக்கின்ற நேரத்திலே, அவர்களுக்கு எதிராக மின்மினிப் பூச்சிகளாக வரபயந்து, சோம்பித் திரிபவர்கள், சூழ்ச்சித் தொழில் உடையோர் மக்களை மாக்கள் என்று நினைக்கும் வக்கணைகள், இவர்களையெல்லாம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, நீங்கள் கரம் உயர்த்தி இரட்டை

விரல் காட்டிவிட்டால் நிலைகுலைந்து விரைந்து ஓடிவிடுவார்கள் என்கிற சரித்திரத்தை, மூன்று இடைத் தேர்தல்களிலே, இதுவரைக்கும் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே அம்மா அவர்கள் தலைமையிலே அமர்ந்ததற்குப் பிறகு நடைபெற்ற அனைத்து இடைத் தேர்தல்களிலுமே (குறுக்கீடு) ஐந்து இடைத் தேர்தல்களிலுமே, நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். தவறான தகவலாக இருந்தால் மன்னித்துக்கொள்ள வேண்டும், அம்மா அவர்களே என்று சொல்லி...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் hat-trick என்று சொல்லிவிட்டார். Hat-trick என்றால் தொடர்ந்து மூன்று முறை தொடர்ச்சியாக வெற்றி பெறுவது என்பதாகும். அதை மெய்ப்பிக்க வேண்டுமென்பதற்காக மூன்று இடைத் தேர்தல்களில் வெற்றி பெற்றோம் என்கிறார். ஐந்து இடைத் தேர்தல்களில் வெற்றி பெற்றிருக்கிறோம்.

*பிற்பகல் 1-10*

**திரு. ப. இராஜரெத்தினம்:** இதயதெய்வம் அம்மா அவர்களிடம் என்னுடைய பணிவான மன்னிப்பைக் கேட்டுக்கொள்கிறேன். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே இப்படிச் சாதனைகள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் ஸ்டாலின் அவர்கள், என்ன ஆச்சு, என்ன ஆச்சு என்று கேள்விக் கணைகளை அவர் பேசுகின்ற நேரத்திலே தெரிவித்தார்கள். நான் ஒன்றைக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியினுடைய திட்டங்கள் அனைத்தும் பெரும்பான்மையான மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்ற இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 18 மாவட்டங்களிலே சுற்றுப் பயணம் மேற்கொண்டு 4,098 கோடி ரூபாய்க்கு மேல் நலத் திட்ட உதவிகளை பொதுமக்களுக்கு நேரடியாகக் கொடுத்திருக்கின்றார்கள். 2,71,457 பேருக்குத் தன்னுடைய பொற்காத்தால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு நல்ல திட்டங்களையெல்லாம் கொடுத்திருக்கிறார்கள். 19 மாவட்டங்களிலே இன்றைக்கு பல கோடி ரூபாயை அம்மா அவர்கள் வாரி வழங்கியிருக்கிறார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே நடைபெற்ற, நடத்தப்பெற்ற, இன்னும் சொல்லப்போனால்,



மாண்புமிகு உறுப்பினர் ஸ்டாலின் அவர்களால் நேற்றைய முன்தினம் கேட்கப்பட்ட ஒரு திட்டத்தைப் பற்றி நான் கூற விரும்புகிறேன். அதுதான் சமத்துவபுரம் திட்டம் என்று சொல்லப்படுகின்ற திட்டம். Innovative Housing Scheme என்று சொல்லப்படுகின்ற ஒரு திட்டத்தின் மூலம் மைய அரசிடமிருந்து பணத்தைத் வாங்கி, அந்தப் பணத்தை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவச மனைப் பட்டாக்களாகவும், தொகுப்பு வீடுகளாகவும் கொடுப்பதற்குப் பதிலாக சமத்துவபுரம் என்ற திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே தீட்டினார்கள். 100 வீடுகள் என்ற குடியிருப்புகளை ஏற்படுத்தி 150 இடங்களிலே அவர்கள் கட்டி முடித்தார்கள். அதனுடைய மதிப்பு 116 கோடியே 36 இலட்சம் ரூபாய். நான் கேட்க விரும்புவதெல்லாம், பல்லாயிரக்கணக்கான ஆதிதிராவிட மக்களுக்குப் போய்ச் சேரவேண்டிய பணத்தை, பல்லாயிரக்கணக்கான பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் போய்ச் சேரவேண்டிய பணத்தை நீங்கள் கூறுகூறாக்கி, ஒருசில ஆயிரம் பேருக்கு, அதுவும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கின்ற பயனாளிகளுக்குக் கொடுத்து—நான் இன்னும் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்—தமிழகம் முழுவதும் அதனுடைய திறப்பு விழா நடைபெறுகின்ற சூழ்நிலையிலே முன்னாள் முதல்வர் 57 இடங்களிலே சமத்துவபுரத்தைத் திறக்கிறார். ஆனால் இந்த அவையிலே உறுப்பினராக இருக்கின்ற முன்னாள் சென்னை மேயர், திரு. ஸ்டாலின் அவர்கள், சென்னையில் மட்டுமல்ல; தமிழ்நாட்டிலே 14 இடங்களிலே போய் சமத்துவபுரத்தைத் திறக்கிறார். சென்னையிலே மேயராக இருக்கின்ற ஒருவர் எப்படி தமிழ்நாடு முழுவதும் நடைபெறுகின்ற அரசு விழாக்களிலே சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்ள முடியும்? முன்னாள் முதல்வர் திறக்கலாம். அதேபோல முன்னாள் அமைச்சர்களாக இருந்தவர்கள் திறக்கலாம். அந்த நேரத்திலே சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள் திறக்கலாம். ஆனால் சென்னை நகரத்திலே மேயராக இருந்த ஒருவர், எப்படி தமிழ்நாடு முழுவதும் சென்று சமத்துவபுரத்தைத் திறந்தார் என்பதை நான் பணிவோடு கேட்டுகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் கேட்பதெல்லாம் சென்னை மேயராக இருக்கின்ற ஒரு சூழ்நிலையிலேயே உங்களுக்கு அத்தகைய அதிகாரம் வந்துவிட்டதா? நீங்கள் செய்தது சட்டத்தின் ஆட்சிதானா? அல்லது, ஜனநாயக நெறிமுறைப்படி நீங்கள் ஆட்சி நடத்தினீர்களா? அல்லது, என்றோ தொலைந்துவிட்ட, என்றோ முடிந்துபோய்விட்ட மன்னர் ஆட்சியை

நீங்கள் நடத்தினீர்களா? உங்களுக்கு ஏது அந்தப் பெருமை? நீங்கள் தமிழ்நாடு முழுவதும் சென்று திறப்பதற்கு உங்களுக்கு அருகதை இருந்ததா என்பதை இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே பற்பல சாதனைகள்; தினம் தினம் புதுப்புது சிந்தனைகள், தினம் தினம் புதுப்புது சாதனைகள், அற்புதங்கள் ஆயிரம் ஆற்றிடும் அம்மாவின் ஆட்சி, அனாதைக் குழந்தைகளுக்காக ஆடிடும் தொட்டில்கள் என்று பல்வேறு சாதனைகளைப் படைத்து வருகின்ற இந்தச் சூழ்நிலையிலே இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, உங்கள் ஒருவருக்குத்தான் இந்தியத் துணைக் கண்டத்திலே எல்லாப் பெருமைகளும் இருக்கின்றன. இன்றைக்கு உலகில் தோன்றியவர்களெல்லாம் உன்னத நிலையை அடைந்ததில்லை. மனிதப் பிறவி எடுத்தவர்களெல்லாம் மகத்தான சாதனைகளைப் படைத்ததில்லை. அரசியல் வானில் தோன்றியவர்களெல்லாம் அற்புத நிலாவாக ஒளி வீசியதில்லை. ஆனால் உன்னதத்தின் உன்னதமாய், மகத்துவத்தின் மகத்துவமாய், அற்புதத்தின் அற்புதமாய் ஒவ்வொரு நாளும் புதுப்புது சாதனைகள், ஒவ்வொரு நாளும் புதுப்புது சிந்தனைகள் என்று படைத்து வருகின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, இன்று உங்களுடைய ஆட்சி தமிழகத்திலே, நாளை உங்களுடைய தலைமை பாரதத்திலே என்று தெரிவித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே 2003-2004 ஆம் ஆண்டிற்காக படைக்கப்பட்டிருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையை மனதார வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன்.

**•திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பை அளித்த சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் ஐயா அவர்களுக்கும், சட்டமன்றக் கட்சியினுடைய தலைவர் திரு. ஜி.கே. மணி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டிருக்கின் திட்டங்களிலே கிராம ஊராட்சியிலே சிறுகுளங்கள் மற்றும் 10 ஏக்கருக்குக் குறைவான ஆயக்கட்டினைக் கொண்டுள்ள ஊராட் ஒன்றியங்களின் கட்டுப்பாட்டிலுள்ள ஏரிகள் ஆகியவற்றைத் தூர வாரி மேம்படுத்த, வரும் ஆண்டில் 50 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதையும், அதைப்போல நெடுஞ்சாலைத் துறைக்கோ, அல்லது ஒன்றியத்திற்கோ சேராமல் இருக்கின்ற 12 ஆயிரம் கி.மீ. சாலைகளைப் பராமரிக்கும் பொறுப்பை ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைத்து, அதைப் பராமரிப்பதற்கு 50 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கின்ற அந்த அறிவிப்பையும், இலாபகரமான நீர் பயன்பாடு உத்திகளைக் கையாண்டு வெற்றி கண்டுள்ள இஸ்ரேல் நாட்டு அனுபவத்தின் அடிப்படையில், திட்டம் ஒன்றை, வரும் ஆண்டில் எங்களுடைய தருமபுரி மாவட்டத்திலே ரூபாய் இரண்டு கோடி செலவிலே செயல்படுத்தக் கருதியுள்ளதாக அறிவித்துள்ளதையும் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நிதிநிலை அறிக்கையிலே, பக்கம் 2, பத்தி 3-லே 'தமிழ்நாடு, அதன் வரலாற்றிலேயே, இதற்குமுன் காணாத மிகவும் கடுமையானதொரு வறட்சியின் பிடியில் சிக்கித் தவிக்கிறது. தொடர்ச்சியாகப் பருவமழை பொய்த்துப் போனதால், பாசனத்திற்கும் குடிநீருக்கும் கடுமையான நீர்ப் பற்றாக்குறை நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டுக்குச் சேரவேண்டிய நீரின் பங்கைக் கருநாடக அரசு, காவிரியிலிருந்து மேட்டூர் அணைக்குத் திறந்து விடாதது, பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கியுள்ளது. குறுவை பயிரிடப்படாத நிலையில், விவசாயிகள் தற்போது, சம்பா மற்றும் தாளடிப் பயிர்களை இழந்துள்ளார்கள்' என்று அந்த வறட்சியினுடைய நிலையை நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கின்றீர்கள்.

தமிழகத்தில், இன்றைக்கு வறட்சியின் காரணமாக, 28 மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்து இருக்கின்றீர்கள். என்னுடைய தருமபுரி மாவட்டத்திலே மிகக் கடுமையான வறட்சி இப்போது இருந்துகொண்டிருக்கிறது. வறட்சியால், வேலை தேடி தினமும் ஏராளமானோர் பக்கத்திலே இருக்கின்ற கருநாடகத்திற்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். பெங்களூருக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். அப்படி ஏறத்தாழ ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் என்னுடைய மாவட்டத்திலிருந்து வெளியேறியிருக்கின்றார்கள். இப்படி கடுமையான வறட்சி நிலவுகின்ற

[திரு. கி. பாரிமோகன்] [2003 மார்ச் 26

சூழ்நிலையிலே, தமிழக அரசு போர்க்கால நடவடிக்கையிலே, இதற்கு நிவராணம் தேடி இருக்கின்றதா? தமிழக அரசினுடைய அதிகாரிகள், மாவட்ட அளவிலே, ஒன்றிய அளவிலே இருக்கின்றவர்கள் இதற்கு போர்க்கால அடிப்படையிலே மக்களை அணுகி இதற்குத் தீர்வை ஏற்படுத்திக் கொண்டு இருக்கின்றார்களா என்று பார்க்கின்றபோது, நம்முடைய வறட்சி சூழ்நிலையைத் தமிழக முதல்வர் அறிவித்த பின்னால், மத்திய அரசிலேயிருந்து ஒரு குழு வந்து பார்வையிட்டு விட்டுச் சென்றது. அதற்குப் பின்னால், தமிழக அரசின் சார்பிலே மாநில அளவிலோ அல்லது மாவட்ட அளவிலோ அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்லது தொண்டு நிறுவனங்கள், அதிகாரிகளை உள்ளடக்கிய குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு மாவட்ட அளவிலே உரிய நடவடிக்கைகளை எடுத்ததா?

அதைப்போல் மாவட்ட அளவிலே குடிநீர் வறண்டு பாதிக்கப்பட்ட கிராமங்கள், தண்ணீர் வறண்டுவிட்ட பாசனக் கிணறுகள், ஆழ்துளைக் கிணறுகள் கிராமவாரியாக, மாவட்ட அளவில் எடுக்கப்பட்டுள்ளதா? இப்போது தமிழகத்தில் பல்வேறு இடங்களிலே கால்நடைகளை வளர்க்க முடியாத சூழ்நிலையிலே, மிகவும் குறைந்த விலையில் அவற்றை விற்றுக் கொண்டிருப்பதாக செய்திகள் எல்லாம் வந்து கொண்டிருக்கின்றன. அதைப்பற்றி புள்ளிவிவரங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றதா?

அதைப்போல உணவுப் பஞ்சத்தால் அல்லது வேலையில்லாத காரணத்தால் தமிழகத்தின் பல்வேறு கிராமங்களிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். கிராம அளவிலே, மாவட்ட அளவிலே அந்தப் புள்ளிவிவரங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா? தமிழகத்திலே ஒட்டுமொத்த பயிர் பாதிப்பு எத்தனை ஆயிரம் ஏக்கர்களிலே ஏற்பட்டிருக்கின்றது? இன்றைக்குத் தென்னை மரங்கள் காய்ந்து போய்விட்டதால் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளனர் என்று குறிப்பிட்டு, தகுதிவாய்ந்த பயனாளிகளுக்கு மரக் கன்றுகள் மீண்டும் நடுவதற்கு நிதியுதவி வழங்க ரூ.30.50 கோடி ஏற்பளித்துள்ளதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்போல பல ஏக்கர்களில் பயிர் செய்து அதனால் பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு நிவாரண உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கின்றதா; அல்லது வழங்கப் போகிறீர்களா என்பதையும் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



2003 மார்ச் 26]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருவமழை பொய்த்ததனாலும், கருநாடகத்திலிருந்து காவிரியில் போதிய அளவு தண்ணீர் திறந்து விடாததாலும், காவிரி டெல்டா மாவட்டங்களில் ஏற்பட்டுவிட்ட குறுவை மற்றும் சம்பா பயிர்களின் பாதிப்பையும், எந்த அளவிற்கு பாதிப்பு ஏற்பட்டு இருக்கின்றது என்பதையும் ஆய்வு செய்யும்படி பணிக்கப்பட்டிருக்கின்றார்கள். அந்தந்த மாவட்டங்களிலே இருந்து அறிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. முழுவதுமாக, குறுவை மற்றும் சம்பாப் பயிர்களின் பாதிப்புகள் பற்றிய விவரங்கள் வந்தபின், உரிய நிவாரணம் அவர்களுக்கு வழங்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-20

**திரு. கி. பாரிமோகன்:** தமிழகத்தினுடைய மக்கள் தொகை இப்போது 6.2 கோடியாக இருக்கிறது. அரசாங்க புள்ளிவிவரப்படி, 35 சதவிகிதத்தினர் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருந்துகொண்டிருக்கிறார்கள். வறட்சியால், வறுமைக்குத் தள்ளப்பட்டவர்களும், அந்த எண்ணிக்கையிலே கூடிக்கொண்டே இருக்கிறார்கள். அவர்களைக் காப்பாற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், அந்த வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்றவர்களைப் போய்ச் சேர்ந்திருக்கிறதா? தற்போது, இரண்டுமுறை, டெல்டா மாவட்டங்களிலே, நிவாரணத் திட்டங்களை நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். அதைப்போல 28 மாவட்டங்கள், வறட்சியாலே பாதிக்கப்பட்டதாக அறிவித்த பின்னால், இலவச மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அதற்குப் பின்னர், அது இலவச அரிசி வழங்குகின்ற திட்டமாக மாற்றப்பட்டது. இலவச உணவு வழங்குகின்றபோது, அதிலும் சிலபேர் விவசாயிகளோ அல்லது பாதிக்கப்பட்டவர்களோ, அந்த மையத்திற்கு வந்து சாப்பிடுவதற்குச் சங்கடப்பட்டார்கள். அதேபோல் அந்த ஊரிலே மையம் இல்லை என்றால், பக்கத்திலே, ஒரு கிலோமீட்டர், இரண்டு கிலோமீட்டர், மூன்று கிலோமீட்டர் சென்று சாப்பிடமுடியாத நிலை இருந்தது. ஆகவே இவற்றையெல்லாம் அறிந்து, இலவச அரிசி என்ற அந்தத் திட்டத்தை அறிவித்தார்கள். அதன்படி இலவச அரிசி, ஒரு மையத்திற்கு 50 பேர்களுக்கு வழங்கப்படுகிறது. அதற்குப் பின்னர், முதல்வர் அவர்கள் கடந்த கூட்டத் தொடரிலே ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். யார் இலவச அரிசி வேண்டுமென்று

விண்ணப்பிக்கிறார்களோ அவர்களிடமிருந்து மனுக்களை எல்லாம் வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும் என்று அறிவித்தார்கள். அந்த மனுக்களை மக்கள் கொடுத்தார்கள். ஆக கொடுத்த அனைவருக்கும் இப்போது வழங்கப்படுகிறதா? அல்லது மதிய உணவைச் சாப்பிட்டவர்கள் அனைவருக்கும் அது வழங்கப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டில் ஏற்பட்டிருந்த கடுமையான வறட்சியின் காரணமாக, யாருக்கும் உணவு இல்லை என்ற நிலை இருக்கக்கூடாது என்பதற்காக, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தேவைப்படுகின்றவர்களுக்கு உணவு வழங்குகின்ற திட்டத்தினை அறிவித்தார்கள். அதன்படி, 3 முறை பதிவு செய்து கொள்வதற்கும் வாய்ப்புகள் வழங்கப்பட்டன. வாய்ப்புகள் வழங்கப்பட்டு, பதிவு செய்தவர்களுக்கு அந்தந்தப் பகுதிகளிலே இருக்கின்ற மையங்களில் உணவு வழங்கப்பட்டது. உணவு வழங்கப்பட்டதற்குப் பின்னர், அதில் பல்வேறு சிரமங்கள் இருப்பதாக, பல்வேறு கோரிக்கைகள், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு வந்தன. இங்குகூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். அதன் அடிப்படையில், உணவு வாங்கிச் சாப்பிட்ட அந்தக் குடும்பங்களுக்கு, தேவைப்படுகின்ற குடும்பங்களுக்கு, அரிசியாக வழங்குகின்ற திட்டத்தினை, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். அதைப்போல ஒரு குடும்பத்தில் 5 பேர் சாப்பிட்டால், 5 பேர்களுக்கும், தனித்தனியாக அரிசி வழங்காமல் ஒரு குடும்பத்திற்கு 30 கிலோ என்ற அளவில் அந்தத் திட்டத்தினை அறிவித்தார்கள். யார் யார் உணவு சாப்பிட்டார்களோ, அவர்களுக்கெல்லாம் அரிசி வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கி. பாரிமோகன்:** அந்தவகையிலே, அந்தத் திட்டம், ஏழைகளைச் சென்றடைந்ததா என்பதுதான் நம் முன்னால் இருக்கின்ற கேள்வி.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு குறு விவசாயிகளுக்கும், ஏழையெளிய நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும், அவர்தம் குடும்பத்ினருக்கும் இலவசமாக மதிய உணவு வழங்குகின்ற திட்டத்தை அறிவித்தபோது, அந்த உணவு தேவைப்படும் அனைவரும், ஜனவரி மாதம் 13 ஆம்



தேதிக்குள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று அரசு அறிவித்தது. அதன் பின்னர், 3 முறை அந்தக் கால அவகாசம் நீட்டிக்கப்பட்டு, ஜனவரி 31 ஆம் தேதிவரை, யார் விரும்பினாலும் பதிவு செய்துகொள்ளலாம் என்று அறிவித்தோம். அதன்படி 14 இலட்சம் பேர் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த 14 இலட்சம் பேருக்கும்—14 இலட்சம் குடும்பத்தினருக்கும்—தற்போது ஒவ்வொரு குடும்பத்திற்கும் 30 கிலோ அரிசி, இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. கி. பாரிமோகன்:** அந்தவகையிலே, இப்போது பல பேர்களுக்கு மதிய உணவு சாப்பிட்டவர்கள் அல்லது இலவச அரிசி வேண்டுமென்று விண்ணப்பித்தவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறது என்பதைத்தான் நான் சொல்ல வருகிறேன். அந்தவகையிலே, என்னுடைய தருமபுரி தொகுதியிலே, தருமபுரி ஒன்றியத்திலே, ஒட்டப்பட்டி என்ற ஒரு மையத்திலே இலவச மதிய உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள், அதற்குப் பின்னரும் இலவச அரிசிக்கும் விண்ணப்பித்துக் கொண்டவர்களுக்குக் கிடைக்கவில்லை. தமிழக அரசு கொடுத்த கூப்பன் இருக்கிறது. (குறுக்கீடு)

(திரு. கி. பாரிமோகன், தனது கையில் இருந்த கூப்பனை அவையில் காட்டினார்.)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச அரிசிக்காக, தனியாக விண்ணப்பங்கள் பெறப்படவில்லை. அதற்காக விண்ணப்பங்கள் கோரப்படவில்லை. முதலில் அறிவித்தது, இலவச மதிய உணவுத் திட்டம். அந்த உணவைப் பெற வேண்டுமென்று விரும்புகிறவர்கள் பதிவு செய்து கொள்ளலாம் என்றுதான் அறிவித்தோம். அந்தக் காலக்கெடு ஜனவரி 31 ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டது. ஜனவரி 31 ஆம் தேதி வரை யார் யார் பதிவு செய்து கொண்டார்களோ அவர்களுக்கு ஒரு குடும்பத்திற்கு 30 கிலோ வீதம் இலவசமாக அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

பிற்பகல் 1-25

**திரு. கி. பாரிமோகன்:** இப்படி மதிய உணவைச் சாப்பிட்ட... (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது முதலமைச்சர் அவர்கள் இங்கே தெளிவாக விளக்கினார்கள். இந்தப் பொறுப்பு என்பது, மையங்களிலே 50 நபர்களுக்கு என்று சொல்லி, அந்த ஊராட்சி மன்றத் தலைவரிடத்திலே, கிராம நிர்வாக அலுவலரிடத்திலே ஒப்படைத்தீர்கள்.....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத் திரும்பத் திரும்ப மறுத்து இருக்கிறோம். ஆனால் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் திரும்பத் திரும்ப ஒரு ஒன்றியத்திற்கு அல்லது ஒரு மையத்திற்கு 50 பேருக்குத்தான் உணவு வழங்கப்படும் என்று அரசு அறிவித்தது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி எந்த உத்தரவும் அரசால் பிறப்பிக்கப்படவில்லை. 50 குடும்பங்கள்தான் என்று நாங்கள் எந்த ஒரு லிமிடேஷனையும் போடவில்லை. இதற்கு மீண்டும் மீண்டும் இந்த அவையிலேயே நான் புள்ளிவிவரங்களோடு விளக்கம் அளித்திருக்கிறேன். சில மையங்களில் ஆயிரம் பேருக்கு மேல் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் உணவு பெற்று வந்தார்கள். இப்போது அரிசியைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, அவர்கள் சொன்னது 50 டோக்கன் என்று சொல்லி, பத்திரிகையிலே வந்த செய்தி; எல்லா இடங்களிலேயும்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில பத்திரிகைகள் வேண்டுமென்றே, அரசைக் குறை கூற வேண்டுமென்பதற்காக இப்படித் தவறான செய்திகளை வெளியிட்டன. அதனடிப்படையில் பல மாமன்ற உறுப்பினர்கள் இந்த அவையில் இதுசம்பந்தமான கேள்விகளைக் கேட்டார்கள். அதற்குப் பல முறை அரசு விளக்கம் அளித்துவிட்டது. 50 குடும்பங்களுக்குத்தான் வழங்க வேண்டும் என்று இந்த அரசு எந்த ஒரு காலகட்டத்திலும் கூறவில்லை.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காக பல்வேறு போராட்டங்கள், சாலை மறியல்கள் எல்லாம் நடந்தன. சில ஒன்றியங்களிலே 50 டோக்கன் என்ற காரணத்தினாலே, அந்த ஒன்றியங்களுக்கே வேண்டாம் என்ற புறக்கணிப்பு எல்லாம் நடந்துகொண்டிருந்தது. என்னுடைய தொகுதியிலேகூட 600 பேர், 1,000 பேர் மனு கொடுத்தவர்களில் 50 பேர்களுக்கு மட்டுமே



வழங்கப்பட்டது. இது உண்மை. இன்னும் பாதிப்பு உள்ளது. இதை முதலமைச்சரின் கவனத்திற்கு, அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம். நடந்தது உண்மை.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு வாங்கிச் சாப்பிட்டவர்களுக்கு அரிசி வழங்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் ஆதாரத்துடன் சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் உணவு வாங்கிச் சாப்பிட்டு, அரிசி வாங்காத யாராக இருந்தாலும், ஆதாரத்தோடு சொன்னால், அதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறுகிறார். அதற்கு நன்றி. ஆனால் பாரிமோகன் அவர்கள் உணவு வாங்கிச் சாப்பிட்டுவிட்டு, அரிசிக்கு விண்ணப்பம் செய்தும், அரிசி கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டைத்தான் கூறுகிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இருந்தால் அதைக் கொடுங்கள். உணவு வாங்கிச் சாப்பிட்டவர்களுக்கு, உணவுக்காக பதிவு செய்துகொண்டவர்களுக்கு, அந்தக் குடும்பத்திற்கு அரிசி கிடைக்கவில்லை என்றால், அந்தக் குற்றச்சாட்டை நீங்கள் கொடுங்கள்; அதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிய உணவு வாங்கிச் சாப்பிட்ட அவர்களுக்கு அரிசி வழங்கவில்லை என்பதற்கு ஆதாரத்தோடு மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தமிழக அரசு கொடுத்த டோக்கனோடு இந்தக் கடிதம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பாரிமோகன், அந்தக் குறிப்பைக் கொண்டுவந்து கணேசன் என்னிடத்திலே காட்டினார். அது ஒன்றும் ஆதாரமில்லை. அது அவர் எழுதி இருக்கிற விண்ணப்பம். அது பதிவு செய்யப்பட்டு இருக்கிறதா? உணவுக்காகப் பதிவு செய்து இருக்கிறார்களா? (குறுக்கீடு) அது இருந்தால் அமைச்சரிடத்தில் கொடுங்கள்.

**திரு. கி. பாரிமோகன்:** தமிழக அரசு கொடுத்த கூப்பன் இருக்கிறது. மதிய உணவு சாப்பிட்டவர், ஓர் ஏழை எளிய விதவைத் தாய்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த மனுவைச் சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் கொடுங்கள். நீங்களே அதை வைத்துக்கொண்டால் எப்படி?

**திரு. கி. பாரிமோகன்:** கொடுத்துவிடுகிறேன். ஆகவே அந்தவகையிலே இந்தத் திட்டம் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கின்றவர்களைச் சென்றடைய வேண்டும்; முதல்வர் அறிவித்ததன் நோக்கம் நிறைவேற வேண்டும் என்றுதான் நான் சொல்கிறேனே தவிர, மற்ற எந்தவிதத்திலும் அதை நான் குறை கூறுவதாக நீங்கள் நினைக்க வேண்டியதில்லை.

இன்றைக்கு வறட்சி நிவாரண நிதி, மத்திய அரசிடம் தமிழக அரசு சார்பாக ஏறத்தாழ 2,094 கோடி ரூபாய் கேட்கப்பட்டு 250 கோடி ரூபாய் அறிவித்து இருக்கிறார்கள். அதுபோல் 50 ஆயிரம் டன் அரிசியும் அறிவித்து இருக்கிறார்கள். இன்னும் கூடுதலாக நிதியும் அரிசியும் பெற அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு மணித்துளியில் பேசி முடியுங்கள்.

பிற்பகல் 1-30

**திரு. கி. பாரிமோகன்:** இன்றைக்கு இந்த நிதி நெருக்கடி நேரத்திலே தலைமைச் செயலகக் கட்டடத்தை முதலிலே மகாபலிபுரத்திலே கட்டுவதாகச் சொன்னார்கள். அதற்குப் பின்னால் லேடி வெலிங்டன் பள்ளிக்கு அருகிலே கட்டுவதாகச் சொல்லப்பட்டபோது, அங்கே மீனவர்கள் எதிர்த்தார்கள். இன்றைக்கு இராணி மேரி கல்லூரியை இடித்துவிட்டு அங்கே கட்டப் போவதாக பத்திரிகையிலே செய்தி வந்து கொண்டிருக்கிறது.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (27-3-2003) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



# 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

50. மதுரை அங்காடிக் குழுவின் அறிவிக்கப்பட்ட பகுதியிலிருந்து சில அங்காடிப் பகுதிகளை நீக்கம் செய்வது குறித்தும், சில வகையான வேளாண் விளைபொருள்களை செயல் நோக்கத்திற்காக தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் அறிவிக்கப்பட்ட பகுதியாக அறிவிப்பது குறித்தும், 4-1-2003 முதல் தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் அங்காடிக் குழுக்கள் ஏற்படுத்துவது குறித்தும் வேளாண்மைத் துறையின் 3-1-2003ஆம் நாளிட்ட 3ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4) (சி) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

51. 2001-2002ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முப்பத்தி இரண்டாவது ஆண்டறிக்கை (1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

52. 1999-2000ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை [(1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

53. 2001-2002ஆம் ஆணடிற்கான தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை [(1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

54. 2001-2002ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் நாற்பத்தி நான்காவது ஆண்டறிக்கை. [(1962ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31 (11) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

[2003 மார்ச் 26

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

84. 2002-2003 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்)

85. 2002-2003 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

86. 2002-2003 ஆம் ஆண்டின் இறுதித் துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

87. மதிப்பீட்டுக் குழுவின் பதிமூன்றாவது அறிக்கை. (2001-2003)

88. மதிப்பீட்டுக் குழுவின் பதினான்காவது அறிக்கை. (2001-2003)

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
225514.
சென்னை-600 008
எழும்பூர்

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**112, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.